உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
விலை - 20
பக்கங்கள்: 28
சுடர் 32 | கதிர் 203 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 03 சனிக்கிழமை 17.06.2017

## முதல்வர் விக்கிக்கு சு.க. ஆதரவளிக்கும்

அங்கஜன் எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17
“வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனின் நடவடிக் கைக்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்கும் என்றும், முதல மைச் சருக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணையில் சிலர் கையெழுத்திட்டமை அவர்கள் தன்னிச் சையாக எடுத்த முடிவே” இவ்வாறு சிறிலங்கா >> 25

# குடாநாட்டில் நேற்று கடையடைப்பு

## வவுனியா, மன்னாரில் இயல்பு நிலையில் மாற்றமில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 17
முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடையடைப்பு நடத்தப்பட்டது. இதனால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சில இடங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப் பட்டிருந்தன.
வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இயல்பு நிலை பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக் கப்பட்டது.
விரிவு: பக். 02





# முதல்வருக்கு ஆதரவாக வடக்கில் போராட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனுக்கு எதிராக இலங் கைத் தமிழரசுக் கட்சி கொண்டிருக்கும் நிலைப்பாட்டுக்கு எதிர்ப் புத் தெரிவித்து வடக்கின் மூன்று மாவட்டங்களில் நேற்றுக் கண்டன ஆர்ப் பாட்டங்கள் நடத்தப்பட் டன. யாழ்ப்பாணத்தில் நல் லூர் முருகன் ஆலய முன்றிலிலும், கிளிநொச்சி பேருந்து நிலையத்தி லும், வவுனியா மத்திய பேருந்து >> 24

## நல்லை ஆதீன முதல்வர், ஆயருடனும் விக்கி சந்திப்பு

யாழ்., ஜூன் 17
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நல்லை ஆதீன குரு முதல்வர் மற்றும் யாழ்ப்பாண ஆயர் ஆகியோரை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளுநரிடம் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது.
வடக்கில் பரபரப்பான அரசியல் சூழ்நிலை நிலவுகின்றது.
இந்த நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்ப்பாண ஆயர் இல்லத்துக்குச் சென்று ஆயரைச் சந்தித்துப் பேசினார். இதன் பின்னர் நல்லை ஆதீன குரு முதல்வ ரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
என்ன நடந்தது என்பது தொடர்பிலேயே பேசியதாக வடக்கு மாகாண முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
(வ-5)

# எதிர்ப்பு மனுவை திரும்பப் பெற்றால் சிக்கல் தீர்ந்துவிடும் என்கிறார் முதல்வர்

## பின்னர் அதைப் பற்றி எவரும் பேசமாட்டார்கள் என்றும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17
தன் மீது நம்பிக்கையில்லை எனத் தெரிவித்து மாகாண சபை உறுப்பினர்கள் வட மாகாண ஆளுநரிடம் கையளித்த மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டால் தற்போதைய பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.
தனக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெறாது என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.
“அவர்கள் ஒரு மனுக் கொடுத்துள்ளனர் ஆளுநரிடம், அந்த மனுவைத் திரும்ப வாங்கவேண்டும். இந்தக் கொந்தளிப்புத் தானாகவே நிறுத்தப்படும். ஏனென்றால் மனுவைத் திரும்பப் பெற்றவுடன் அது சம்பந்தமான நடவடிக்கை தொடராது. எவருமே அதைப் பற்றி பேச வேண்டிய அவசியமில்லை. எங்கள் வேலைகள் நடந்துகொண்டுபோகும்” என்றார் அவர்.
வடக்கு மாகாண சபை தொடர்பாக எழுந்துள்ள அரசியல் சிக்கலைத் தொடர்ந்து நேற்று அவர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:
கேள்வி: சம்பந்தருடன் >> 25

# முதல்வர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் பதவி விலகுவாரா?

## அமைச்சர் டெனீஸ்வரன் காட்டம்

மன்னார், ஜூன் 17
“வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுகளை ஆராய்வதற்கு புதிய விசாரணைக் குழு அமைக் கப்படும் என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ் வரன் கூறினார். விசாரணைக் குழு அமைக் கப்பட்டு அது சரியானதாக இருந் தால் முதலமைச் சருக்கு எதிராகவும் எத்தனையோ பேர் முறையிடத் தயாராக உள்ளனர்.
முதலமைச்சர் தன் மீது முறைப்பாடு வந்துள்ளது என்பதற்காகத் தனது பதவியிலிருந்து >> 24

# எமது தலைவர்கள் குறித்தும் பல ஆதாரங்கள் கைவசமுண்டு

## வெளியிட்டால் அவர்கள் பதவியிலிருக்கமாட்டார்கள் என டெனீஸ்வரன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17
“எங்களுடைய தலைவர்கள் தொடர்பாக, அவர்கள் என்ன செய்தார்கள் என்பது தொடர்பாக பல ஆதாரங்கள் உள்ளன. சந்தர்ப்பம் வருமாக இருந்தால் அவற்றை நான் ஆதாரங்களுடன் வெளியிடுவேன். அதற்குப் பின்னர் அவர்கள் பதவிகளில் இருக்க முடியாது”
இவ்வாறு வடக்கு மாகாண >> 24

## அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது

கொழும்பு, ஜூன் 17
சந்தையில் ஒரு போதும் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட முடியாதென அரச தலைவர் வலியுறுத்தியுள்ளார்.
அரிசிக் கையிருப்பைப் பேணுதல் மற்றும் எதிர்கால அரிசி தேவையைக் கண்டறிதல் தொடர்பான சிறப்புக் கலந்துரை >> 04

# என்னைப் பதவி நீக்க கொழும்பிலேயே சதி

## கூறுகிறார் வடக்கு முதல்வர்



யாழ்ப்பாணம், ஜூன் 17
என்னைப் பதவியிலிருந்து நீக்குவதற்குக் கொழும்பிலேயே சதி பின்னப்பட்டது. இதனை இரு வாரங்களுக்கு முன்னரே, முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா கூறி விட்டார்.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
முதலமைச்சருக்கு ஆதரவாக நடத் தப்பட்ட பேரணி, >> 25

## பத்திரிகை மீது விக்கி காட்டம்

யாழ். ஜூன் 17
“பத்திரிகையில் செய்திகளைப் போட்டு வடக்கு மாகாண சபையை நாறடித்து விட்டார்கள்”
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச் சர் சி.வி. விக்னேஸ் வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ் வரனின் இல்லத்தின் முன்பாக நேற்று நடைபெற்ற >> 24

## அரசின் பாதுகாப்பிலேயே உள்ளார் ஞானசார தேரர்

மகிந்த ராஜபக்ச திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 17
பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றார் என்று முன்னாள் அரச >> 04

## இடைக்கால அறிக்கை வெளியீடு தாமதம்

அரசமைப்பு உருவாக்கப் பணி பின்தள்ளப்படுவதாலேயே இந்த நிலை

கொழும்பு, ஜூன் 17
அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழி நடத்தும் குழுவின் அடுத்தகட்ட சந்திப்புக்கானதிகதி இன்னமும் தீர்மானிக்கப்படாததால் இடைக்கால அறிக்கை வெளியாவதில் மேலும் கால தாமதம் ஏற்படுமென அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. >> 04

## 3 பொலிஸார் சுட்டுக் கொலை; முன்னாள் போராளிக்குத் தூக்கு

கொழும்பு, ஜூன் 17
தனமல்விலவில் மூன்று பொலிஸாரைச் சுட்டுக் கொலை செய்தார் என்ற குற்றத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிக்குத் தூக்குத் தண்டனை விதித்து மொனராகலை மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.
தனமல்வில, ஊவா குடாஓயா, அலிமங்கடவில், 2008ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி, உதவி பொலிஸ் பரிசோதகர் >> 25

## விக்கிக்கு ஆதரவான பேரணியில் ‘உதயனுக்கு’ எதிரான கோசங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை ஆதரித்து யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட கவனவீர்ப்புப் பேரணியில், உதயன் பத்திரிகைக்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பப்பட்டன.
நல்லூர் கோவில் முன்றிலில் நேற்றுக்காலை இந்தப் பேரணி ஆரம்பமானது. இதன்போது அங்கு வைத்து கோசங்கள் எழுப்பப்பட்டன.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். >> 25

# 200 கிலோ கேரளக் கஞ்சா முல்லை, மன்னாரில் சிக்கியது

முல்லைத்தீவு, ஜூன் 17
202 கிலோ கேரளக் கஞ்சா முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
புதுக்குடியிருப்புப் >> 04



# வடக்கு முதலமைச்சருக்கு ஆதரவாக குடாநாட்டில் நேற்றுக் கடையடைப்பு

## வவுனியா, மன்னாரில் இயல்பு நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக யாழ். குடாநாட்டில் நேற்று கடையடைப்பு நடத்தப்பட்டது. வடக்கு முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. கடையடைப்பால் யாழ். மாவட்டத்தில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டபோதும், வடக்கின் ஏனைய மாவட்டங்களின் இயல்பு நிலைமைகளில் பெரும் மாற்றங்கள் இல்லை.



யாழ்ப்பாணம்


சித்தன்கேணி


மன்னார்

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் உணவகங்கள், மருந்தகங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகள் வழமைபோன்று நடைபெறவில்லை.


வவுனியா


முல்லைத்தீவு


நெல்லியடி

நகரப் பகுதியில் மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது. நகரில் காலையில் திறக்கப்பட்டிருந்த சில வர்த்தக நிலையங்களை சிலர் மூடுமாறு அறிவுறுத்தினர் என்றும் அதையடுத்து அவை மூடப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சியில் வர்த்தக நிலையங்கள், சாவகச்சேரி, கொடிகாமம் நகரங்களில் மூடப்பட்டிருந்தன. கொடிகாமம் சந்தையில் காலையில் சில வியாபாரிகள் வியாபார நடவடிக்கையை முன்னெடுக்க ஆயத்தமாகினர் என்று இனம்தெரியாதோர் சந்தைக்குள் பட்டாசுகளை வெடிக்க வைத்து அதைத் குழப்பினர் என்றும் தெரிய வருகின்றது. தென்மராட்சியில் மக்கள் நடமாட்டமும் குறைவாகக் காணப்பட்டது. வலிகாமத்தில் கடைகள் மூடப்பட்டு இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி நகரங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் வழமை போன்று நடைபெறவில்லை. நகர் பகுதிகள் மக்கள் நடமாட்டம் குறைந்து வெறிச்சோடிக் காணப்பட்டன. பாடசாலைகளிலும் மாணவர் வரவு குறைந்திருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் காலையில் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்த போதும், மதியத்தின் பின்னர் இயல்பு நிலை மீண்டது. வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு மக்கள் நடமாட்டம் காணப்பட்டது.

**வவுனியா**

வவுனியாவில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வழமையான செயற்பாடுகள் நடைபெற்றன. போக்குவரத்தும் வழமை போன்று காணப்பட்டது. சந்தைகள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் வழமை போன்று இயங்கின.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவில் சில இடங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தபோதும் பெரும்பாலான இடங்களில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. முள்ளியவளையில் அநேகமான வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. முல்லைத்தீவு நகர் பகுதி, ஒட்டுசுட்டான், மல்லாவியில் அநேகமான வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

**மன்னார்**

மன்னாரில் இயல்பு நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் வழமை போன்று நடைபெற்றன. மக்கள் நடமாட்டமும் வழமை போன்று காணப்பட்டது.

(ற-7-8-108-109-173)


பருத்தித்துறை


வல்வெட்டித்துறை


சாவகச்சேரி


கிளிநொச்சி

## ஒளிப்படக்கண்காட்சி வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா, ஜூன் 17

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் சித்திரம் மற்றும் ஒளிப்படக்கண்காட்சி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சியில் மாணவர்களால் வரையப்பட்ட சித்திரங்கள், வவுனியாவின் பல்வேறு இடங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், வவுனியாவின் வரலாற்றைக் குறிக்கும் ஆவணப்படம் மற்றும் மாதிரி உருக்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சி இரண்டு தினங்கள் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், தமிழ்மணி அகளங்கன், எழுத்தாளர் ஜெகநாதன் மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், இறம்பைக்குளம் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-402)

## விக்கிக்கு ஆதரவாக இன்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார். (ற-5)

## உயர்மட்ட வர்த்தகக் குழுவினர் அடுத்த மாதம் டாக்கா பயணம்

கொழும்பு, ஜூன் 17

இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையிலான உயர்மட்ட வர்த்தகக் குழுவினர் அடுத்த மாதம் டாக்காவுக்குச் செல்லவுள்ளனர். கைத்தொழில் வர்த்தக அமைச்சில், அமைச்சர் ரிசாத் பதியுதீனை இலங்கைக்கான பங்களாதேஷ் தூதுவர் ரியாஷ் ஹமிதுல்லா சந்தித்துப் பேச்சு நடத்தியபோது அமைச்சர் ரிசாத் பதியுதீன் இதனைத் தெரிவித்தார் என்று அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. 'கடந்த ஐந்து வருடங்களாக பங்களாதேஷுக்கான ஏற்றுமதி அதிகரித்துள்ளது. இரண்டு நாடுகளும் வர்த்தக வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். பலம் வாய்ந்த வர்த்தகம் மற்றும் வியாபார தூதுக் குழு ஒன்று பங்களாதேஷுக்கு அடுத்த மாதம் செல்லும். பங்களாதேஷுடனான வர்த்தக மற்றும் முதலீடுகளை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை இலங்கை எதிர்பார்த்து நிற்கின்றது' என்று அமைச்சர் குறிப்பிட்டார்.



இலங்கையின் வர்த்தகத் தூதுக்குழுவைப் பங்களாதேஷ் வரவேற்கிறது என்று அந்த நாட்டின் துதூவர் அமைச்சரிடம் தெரிவித்தார். '2010ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் 48மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2016 ஆம் ஆண்டு மும்மடங்காக அதாவது, 142 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தது' என்று வர்த்தகத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பங்களாதேஷுக்கான இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருளாக பருத்தி, பிளாஸ்ரிக், துணிவகைகள், சவர்க்காரம், மசகுப் பொருள்கள் மற்றும் தூய்மைப்படுத்தும் திரவங்கள் என்பவற்றைக் குறிப்பிடமுடியும். பங்களாதேஷில் இருந்து மருத்துவப் பொருள்கள், கடதாசி, உருக்கு போன்றப் பொருள்களை இலங்கை இறக்குமதி செய்கின்றது என்று அவர் குறிப்பிட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வெள்ளை வான் கடத்தலை கண்டித்து போராட்டம்



ஏறாவூர்,ஜூன் 17
நாட்டிலுள்ள எவருக்கும் மீண்டும் வெள்ளை வான் கடத்தலோ, விசாரணைகளோ, அச்சுறுத்தலோ இருக்கக் கூடாது என வலியுத்தி 5 பிள்ளைகளின் தந்தையொருவர் மட்டக்களப்பு நீதி மன்றுக்கு முன்னாலுள்ள சின்ன ப்பிள்ளை யார் ஆலயத்துக்கு முன்னால் நேற்று முதல் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.
ஏறாவூர் எல்லைநகரைச்சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் கமலேஸ்வரன் (வயது 52) என்பவரே இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். "வெள்ளை வான் கடத்தலுக்குப் பயந்து, உயிருக்கு அஞ்சி 2006 ஆம் ஆண்டு நான் இந்தியாவுக்குச் சென்றேன்.
பின்னர் இவ்வருடம் மார்ச் மாதமளவில் நாடு திரும்பியிருந்தேன். குற்றவாளி என்ற தோரணையில் நான் விசாரிக்கப்பட்டு வருகின்றேன்.
இந்த விடயத்தில் சமாதான ஐக்கிய செயற்பாட்டாளரும் நல்லாட்சியின் முக்கிய சூத்திரதாரியுமான முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்காவின் கவனத்துக்குக் கொண்டு செல்லவே போராட்டத்தை ஆரம்பித்துள்ளேன்." என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கமலேஸ்வரன் தெரிவித்தார். (ஐ)

# விக்னேஸ்வரனை பதவியில் வைத்திருப்பதல்ல நோக்கம்

## இனத்துக்கு தலைமை தாங்க வேண்டுமென்றார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், ஜூன் 17
விக்னேஸ்வரனை முதலமைச்சர் பதவியில் வைத்திருப்பதல்ல எமது கோசம். எமது இனத்துக்கு அவர் தலைமை தாங்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோசம்.
இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
வடக்கு முதலமைச்சரை ஆதரித்து நடைபெற்ற கவனவீர்ப்பு ஊர்வலம் முதலமைச்சரது இல்லத்தில் முடிந்தது. அதன் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கொழும்பை மையப்படுத்திய சிந்தனைதான் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனிடமும் இருக்கும் என்ற அடிப்படையில் அவரை முதலமைச்சர் வேட்பாளராக இரா.சம்பந்தன் கொண்டு வந்தார். அதிகாரமில்லாத மாகாண முதலமைச்சர் பதவிக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை கொடுப்பதற்காக விக்னேஸ்வரனைக் கொண்டு வந்தார்கள். விக்னேஸ்வரன் இங்கு வந்து மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டார். கொழும்பு மைய அரசியலைக் கைவிட்டார். தேர்தலில் வாக்குக் கேட்ட கொள்கைகளுக்காக தன்னைப் பதவியிலிருத்திய தலைவர்களை நிராகரித்தார்.
விக்னேஸ்வரனை அரசியல் அரங்கிலிருந்து அகற்றவே இந்தச் சதி முயற்சி எடுக்கப்பட்டது. இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் போன்றவர்கள் மாத்திரம் இந்த முடிவை எடுக்கவில்லை. கொழும்பு அரசின் முக்கிய தலைவர்களும் இதில் தொடர்புட்டுள்ளனர்.
விக்கினேஸ்வரனை முதலமைச்சர் பதவியில் வைத்திருக்க வேண்டும் என்பதல்ல எமது கோசம். எங்களுடைய கோசம் விக்கினேஸ்வரன் எமது இனத்துக்குத் தலைமை தாங்க வேண்டும். அதிலே நாங்கள் தெளிவாக இருக்க வேண்டும். எமது மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் எமது வாக்குகளைப் பெற்று எம் இனத்தை அழிப்பவர்களை இனங்கண்டு ஒழிக்கலாம் - என்றார். (ற-5-12-26-ரி)

# 15ஆவது திருக்குறள் மாநாடு கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 17
கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் 15 ஆவது திருக்குறள் மாநாடு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளன.
கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவாளர் மண்டபத்தில் முதல் நாள் நிகழ்வுகள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 12 மணி வரை நடைபெறும்.
நிகழ்வில் கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்ல மாணவர்களின் வரவேற்பு நடனமும், பளை மத்திய கல்லூரி மாணவர்களின் குறள் இசையும், கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களின் ஊரக ஆடலும் முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி மாணவர்களின் சங்கப் பாடலும் இடம்பெறும். அன்றைய தினம் பி.ப. 1.30 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திருவள்ளுவர் உருவப் படம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலிருந்து கரைச்சிப் பிரதேச சபை வளாகத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டுச் சிலைத் திறப்பு விழாவும் இடம்பெறும். இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும். நிகழ்வில் உருத்திரபுரம் மகா வித்தியாலய மாணவர்கள் தமிழ்த் தாய் வாழ்த்தையும், கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை மாணவர்கள் வரவேற்பு நடனத்தையும், பளை மத்திய கல்லூரி மாணவர்கள் குறள் இசையையும், கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை மாணவர்கள் ஊரக ஆடலையும், கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் தமிழிசைப் பாடலையும் நிகழ்த்தவுள்ளனர்.
நிகழ்வில் திருக்குறள் ஒலியில் இல்லற வாழ்வை ஏற்ற தர்சன் புவனமதி தம்பதியினருக்குத் தமிழ் எழில் நன்மதிப்பு வழங்கப்படவுள்ளது.
வட்டக்கச்சி மத்திய கல்லூரி மாணவர்களின் இலக்கிய நாடகம் மற்றும் தனி நடனம் ஆகியவை இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10-9)

# வழமைக்குத் திரும்பியது நானுஓயா

நுவரெலியா,ஜூன் 17
நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா நகரின் பாதசாரி கடவையைக் கடக்க முற்பட்ட 6 வயதுச் சிறுமி கனரக வாகனத்துடன் மோதுண்டு உயிரிழந்தார்.
இந்தச் சம்பவத்தை அடுத்து நானுஓயா நகரத்தில் நேற்று முன்தினம் பதற்றமான சூழல் நிலவியது. தற்போது நானு ஓயா நகரம் வழமைக்குத் திரும்பியுள்ளது.
உயிரிழந்த சிறுமியின் இறுதிக் கிரியைகள் ரதல்ல கீழ்ப் பிரிவுத் தோட்டத்தில் உள்ள பொது மயானத்தில் நேற்று இடம்பெற்றது. உயிரிழந்த சிறுமிக்குப் பிரதேச மக்கள் அஞ்சலி செலுத்தினர். அந்தப்பகுதியில் அனுதாபப் பதாதைகள் மற்றும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.
இதேவேளை நானுஓயா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நுவரெலியா பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நானுஓயா பிரதேசத்தில் இடம்பெற்ற அமைதியின்மை நிலைமை தொடர்பான விசாரணைகளை இலகுபடுத்தும் நோக்கில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-45)

# களனிப் பல்கலை. ஒரு வாரம் பூட்டு

களனிப் பல்கலைக்கழகம் எதிர்வரும் ஜூன் 27ஆம் திகதி வரை மூடப்பட வுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலைக் களனிப் பல்கலைக்கழக ஊடகப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். மர்மமாகப் பரவி வரும் ஒருவகை காய்ச்சல் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் திருவள்ளுவர் உருவச்சிலை திறப்பு



மன்னார்,ஜூன் 17
மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் உருவச்சிலை நேற்று வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டது.
தமிழ் நாட்டின் பிரபல தொழிலதிபரும் வி.ஜி.பி. உலகத்தமிழ்ச்சங்க தலைவருமான மருத்துவர் வி.ஜி. சந்தோசின் நன்கொடை நிதியில் அமைக்கப்பட்ட உருவச்சிலையே நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் ரி.தனேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் மருத்துவர் வி.ஜி.சந்தோசம்,சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் டீ.என். வள்ளி நாயகம் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாகச் சிலையைத் திறந்து வைத்தனர். நிகழ்வில் வி.ஜி.பி.உலகத்தமிழ்ச்சங்க பிரதி நிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-56)

# 100 நாள்களைக் கடந்து தொடர்கிறது போராட்டம்



முல்லைத்தீவு, ஜூன். 17
முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் நேற்று 101 ஆவது நாள்களையும் கடந்தது.
"எங்களது போராட்டத்துக்கு நியாமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எங்கள் மீதும் உங்கள் பார்வையைத் திருப்பி எங்களுக் காவும் போராடுங்கள். எங்கள் பிள்ளைகளை இழந்து நாங்கள் அலைந்த வாழ்க்கைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத்தாருங்கள். இன்னும் எத்தனை நாள்களுக்கு எங்களுக்கு இந்த அவல வாழ்க்கை. உரிய பதிலை மைத்திரி அரசு வழங்க வேண்டும். தீர்வு கிடைக்கும் வரை எங்களது போராட்டத்தைக் கைவிட வேண்டாம்." என்று போராட்த்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர். (ஐ-7)

# விவசாயப் போதனாசிரியர்கள் சீனா பயணம்

யாழ்ப்பாணம்,ஜூன் 17
விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த சீன அரசின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் இலங்கையில் விவசாயத் திணைக்களத்தில் கடமையாற்றும் 30 விவசாய போதனாசிரியர்கள் ஒரு மாத பயிற்சிக்காக நேற்று சீனா சென்றுள்ளனர்.
இவர்களில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் எழுதுமட்டுவாழ் விவசாய போதனாசிரியர் திருமதி சி. பிரபூர்ணா, கைதடி விவசாயப் போதனாசிரியர் கவிதா, முல்லைத்தீவு விவசாய போதனாசிரியர் சிவரூபன் ஆகியோர் புலமைப் பரிசில் திட்டத்தில் சீனா சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

காணி விற்பனைக்கு - பரப்பு $7\frac{3}{4}$
உரும்பிராய் சந்தியில் இருந்து $\frac{1}{4}$ கி.மீ. மானிப்பாய் றோட்டில் சிவகுல வீதியில் $\frac{1}{2}$ கி.மீ. தூரம் தார் போட்ட றோட்டில் இலகுவான போக்குவரத்து வற்றாத கிணற்றுடன் $7\frac{3}{4}$ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விலை நேரில் காணி பார்த்த பின் .
021 790 1270, 077 684 5510, 077 193 6164, 077 704 4106

# குற்றவாளிகளைக் காப்பாற்ற முயற்சித்தார் விக்னேஸ்வரன்

## அதனாலேயே அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் என்கிறார் சுமந்திரன் எம்.பி

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றவாளி களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டமையினாலேயே அவர் மீது தமிழ் அரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். ஊழல், மோசடி மற்றும் லஞ்சத்துக்கு எதிரான எமது தீவிரமான செயற்பாடே, முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைசமர்ப்பிப்பதற்குக்காரணமாகியது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பேச்சாளரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்குமாகாணசபைநிலைமைதொடர்பில்அவர் வெளியிட்டுள்ள சிறப்புப் பத்திரிகைக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

முதலமைச்சர் ஊழலுக்குஎதிராகஎடுக்கும்நடவடிக்கைகளைநாங்கள்தடுக்கமுயல்கிறோம் என்றகுற்றச்சாட்டுஆதாரமற்றதும்உண்மையான நிலமைக்கு நேர் எதிரானதுமாகும்.

அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராகப் பல ஊழல் குற்றச்சாட்டுக்கள் வெளிவந்தபோது, அதற்கு எதிராக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எமது உறுப்பினர்கள்குரல்கொடுத்துவந்தனர். தனக்குமிகவும் நெருக்கமானவரான ஐங்கரநேசனுக்கு எதிராக முதலமைச்சர் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் விட்டபோது முதலமைச்சரை வற்புறுத்திமாகாணசபையிலேஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப் படுவதற்கும் எமது உறுப்பினர்களே காரணமாக இருந்தார்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அடுத்த நாளே ஐங்கரநேசன் குற்றமற்றவர் என்றும், அவர் பனங்காட்டு நரி இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சமாட்டார் என்று சொன்னதை எவரும் மறந்திருக்க முடியாது. எமது வற்புறுத்தலின் காரணமாகத்தான் விசாரணைக் குழுவும் அமைக்கப்பட்டது. அந்தவேளையிலும் ஊழல் குற்றச் சாட்டுக்கள் ஐங்கரநேசனுக்கு எதிராக மட்டுமே இருந்தன. அப்படியிருந்தும் அவரைப் பாதுகாக்கும்முகமாகவே எல்லா அமைச்சர்களுக்கு எதிராகவும் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணைக் குழுவினரை முதலமைச்சரே தனியாகத் தேர்ந்தெடுத்து நியமித்தார். இறுதியில் ஐங்கரநேசன் மட்டுமே ஊழல் பணமோசடி மற்றும் இலஞ்சக் குற்றச்சாட்டு களுக்கு குற்றவாளியாகக் காணப்பட்டார். அமைச்சர் குருகுலராசா அதிகார வரம்பை மீறினார் என்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளியாகக் காணப்பட்டார். மற்றைய இரண்டு அமைச்சர்களும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 19ஆம் திகதி முதலமைச்சரிடம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டிருந்த போதும் குற்றவாளிகளாக காணப்பட்ட அமைச்சர்களையும் பாதுகாக்கும் முகமாக முதலமைச்சர் அவ்வறிக்கையை மறைத்து வைத்திருந்தார். இரண்டு பத்திரிகைகள் அதைவெளிப்படுத்தியபின்னர்தான்மாகாண சபையில்இந்தஅறிக்கையைச்சமர்ப்பித்தார். இதன்பொழுதெல்லாம்ஊழலையும்குற்றவாளிகளையும் காப்பாற்ற முதலமைச்சர் எடுத்த இந்த முயற்சிகளுக்கெதிராக எமது உறுப்பினர்கள் குரல் கொடுத்து வந்தனர். குற்றவாளிகளாகக் காணப்பட்ட அமைச்சர்களுக்கெதிரானநடவடிக்கையைமுதலமைச்சர் எடுக்கவேண்டும் என்றும் அதில் நாம் தலையிடமாட்டோம்என்றும்பகிரங்கமாகவே அறிவித்திருந்தோம்.

முதலமைச்சர், குற்றவாளிகளைகாப்பாற்றும் தனது முயற்சியை இவ்வேளையில்வேறுவிதமாக முன்னெடுத்தார். குற்றவாளிகளாகக் காணப்பட்ட அமைச்சர்களுக்குஎதிரானநடவடிக்கைகளைஎடுக்காமல்தவிர்த்துஅமைச்சர்கள் நால்வரையும் பதவி நீக்கம் செய்யும் தனது யோசனையை முன்வைத்தார். குற்றவாளிகளையும் குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களையும் ஒன்றாகப் பதவி நீக்கம் செய்வதென்பதுகுற்றங்களைநீர்த்துப்போகப் பண்ணிகுற்றவாளிகளைக்காப்பாற்றும்ஒரு நடவடிக்கையே ஆகும். தனது இந்த யோசனையை இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரைத்தவிர்த்துமற்றையகட்சித்தலைவர்களுக்கு மட்டும் வெளிப்படுத்தியிருந்தார். இதைக்குறித்துதமிழ்தேசியக்கூட்டமைப்புத் தலைவர் வினவிய பின்னர்தான் காலம் தாழ்த்திசேனாதிராசாவுடனும்பேசினார். ஊழலுக்கு எதிராக அவர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுதமிழரசுக்கட்சித்தலைவர் முதலமைச்சருக்குகூறியிருந்தார். நால்வரையும்ஒன்றாகநீக்குவதென்பதுநிரூபிக்கப்பட்ட குற்றங்களைமழுங்கடிக்கும்செயல்என்றும் அதைஏற்றுக்கொள்ளமுடியாதுஎன்றும்அவருக்கு கூறப்பட்டது. இதே நிலைப்பாட்டையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனும் அவருக்குக் கூறியிருந்தார்.

ஊழலுக்கு எதிரான கடும்நடவடிக்கையாகக் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அமைச்சர்களுக்கு எதிராக மட்டும் செயற்பட வேண்டும் என்று சம்பந்தனும் சேனாதிராசாவும் கூறிய கருத்துக்கு மறுநாள் மாகாணசபை உறுப்பினர்களுடையகருத்துக்களையும்அறிந்தபின் பதிலளிப்பேன்என்றுசொன்னமுதலமைச்சர் அப்படிச் செய்யாமல் அடுத்த நாள் மாகாண சபையிலே தன்னுடைய தீர்ப்பை வழங்கினார். நால்வரும் குற்றவாளிகள் என்ற பொய்யான விம்பத்தை தோற்றுவித்து உண்மையான குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சியே. அதனால்தான் அனைத்துக் குற்றங்களிலிருந்தும்விடுக்கப்பட்டஅமைச்சர்களையும் கட்டாய விடுமுறையில் செல்லுமாறு பணித்தமைக்குஎமதுஎதிர்ப்பைத்தெரிவித்து வெளிநடப்புச்செய்தோம். ஊழலைமறைத்துக் குற்றவாளிகளைக் காப்பாற்றும் முதலமைச்சரின் இந்தத் தொடர்ச்சியான செயற்பாட்டின் நிமித்தமாகவே இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் முதலமைச்சரில்நம்பிக்கைஇழந்திருக்கின்றனர். இதுவே எமது உண்மையான் நிலைப்பாடாகும் என்றுள்ளது. (து-5)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக 4 ஆண்டுகளின் பின் குற்றப்பத்திரிகை

## அடுத்த வாரம் தொடர் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 17

தமிழ் அரசியல் கைதிகள் இருவருக்குஎதிராக 4வருடங்களின்பின் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு மீதான தொடர் விசாரணை எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் வவுனியா மேல் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் மீது, 2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்தவழக்குவிசாரணைக்கு எடுக்கப்படாமல்தவணையிடப்பட்டு வந்தது. வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், குற்றப் பத்திரிகையை விரைவாக முன்வைக்குமாறு அரச சட்டவாதிக்கு அறிவுறுத்தியிருந்தார். அரசியல் கைதிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் ஒரு மாத கால அவகாசம் கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குற்றப் பத்திரிகையில் புதிதாக ஒருவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக்குற்றப்பத்திரிகைஅடிப்படையில் எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதி களில் வழக்கு நடைபெறவுள்ளது. குற்றஒப்புதல் வாக்குமூலம் மீதே முதலில்விசாரணை இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ம.சுலக்சன் மற்றும் க.சுதர்சன் இருவருமே எதிரிகளாக ஆரம்பத்தில் குறிப்பிடப் பட்டிருந்தனர். தற்போதுயாழ்ப்பாணத்தைச்சேர்ந்த இ.திருவருளும்எதிரியாகஉள்ளடக்கப்பட்டுள்ளார். (வ-5)

# வவுனியா பேருந்து நிலையத்தில் கஞ்சாவுடன் படைச்சிப்பாய் கைது

வவுனியா, ஜூன் 17

கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்றகுற்றச்சாட்டில்இராணுவச்சிப்பாய்ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

வவுனியாநகரமையப்பேருந்துநிலையத்தில் நேற்றுநண்பகல்12.30மணியளவில்அவர் கைதுசெய்யப்பட்டார்என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

கிளிநொச்சி அக்கராயன் இராணுவ முகாமில் பணியாற்றும் தரங்ககுமார சேனவிரத்ன (வயது33)என்ற"இராணுவச்சிப்பாய்நேற்று விடுமுறையைடுத்து அவரது சொந்த ஊரான மதவாச்சி நோக்கி பேருந்தில் பயணித்தார்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா மையப் பேருந்து நிலையத்தில் வைத்து 16 பைகளில் போதி செய்யப்பட்ட 25 கிராம் கேரளாகஞ்சா அவரிடமிருந்து மீட்கப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில்முற்படுத்தநடவடிக்கைமுன்னெடுக்கப் படுகிறது"என்றுபொலிஸார்மேலும்தெரிவித்தனர். (வ-21)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### அரிசிக்கு...

யாடல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று அரச தலைவர் செயலகத்தில் நடை பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சந்தையில் அரிசி தட்டுப்பாடு நிலவு வதாகக் கிடைக் கப்பெற்ற தகவல்களுக்கு ஏற்ப இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் களஞ்சியங்களில் காணப்படும் அரசி கையிருப்பு தொடர்பாக அரச தலைவர் அதிகாரிகளிடம் இதன்போது வினவினார்.

தேவையான அளவில் அரிசி கையிருப்பைப் பேண வேண்டியதன் அவசியம் தொடர்பாக இதன்போது வலியுறுத்திய அரச தலைவர் , வர்த்தக அமைச்சு இதனை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்ய வேண்டுமென்றும் ஆலோசனை வழங்கினார்.

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்குச் சந்தையில் அரிசி விற்பனை செய்யப்படுவதால் நுகர்வோர் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் தொடர்பாகவும் அரச தலைவர் இதன்போது கவனம் செலுத்தியதுடன், கட்டுப்பாட்டு விலையினை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களுக்கு எதிராகச் சட்டத்தைச் செயற்படுத்துதல் தொடர்பாகவும் அதிகாரிகளிடம் கருத்துக்கள் வினவப்பட்டன. (து)

### இடைக்கால...

புதிய அரசமைப்பு தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இரட்டை நிலைப்பாடு நிலவுவதாலேயே இதற்கான பணிகள் தாமதமடைந்துள்ளன என வழிநடத்தல் குழுவின் உறுப்பினர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவின் கூட்டம் கடந்த மே மாதம் 24 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 4 நாள்கள் நடைபெற்றன. இடைக்கால அறிக்கையை இறுதிப்படுத்தும் நோக்கிலேயே தொடர் சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கட்சிகளின் நிலைப்பாடுகளும் எழுத்துமூலம் கோரப்பட்டிருந்தன.

எனினும், புதிய அரசமைப்பு, ஒற்றையாட்சி, நிறைவேற்று அரச தலைவர் முறைமை நீக்கம் உள்ளிட்ட சில விடயங்களில் சுதந்திரக் கட்சி இழுத்தடிப்புப்போக்கைக் கடைப்பிடித்ததாலும், தமது இறுதி நிலைப்பாட்டை அறிவிக்காததாலும் இடைக்கால அறிக்கை விடயத்தில் இறுதியானதொரு இணக்கப்பாட்டுக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே குறித்த பணிகளை மீள ஆரம்பிப்பதற்காக வழிநடத்தும் குழுவின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேரடியாகக் களமிறங்கவுள்ளார் என்று ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் தனித்தனியே பேச்சுகளை நடத்தி அக்கட்சிகளின் ஆதரவைப் பெறவுள்ளார் என்றும், அதன்பின்னர் சுதந்திரக் கட்சிக்கு உறுதியானதொரு அறிவிப்பை அவர் விடுப்பார் எனவும் அவ்வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தும் குழுவினால் நியமிக்கப்பட்டிருந்த உபகுழுக்களின் அறிக்கைகள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் ஆராயப்பட்டும் விட்டன. எனவே, வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையை இறுதிப்படுத்தும் பணி மாத்திரமே எஞ்சியுள்ளது.

இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டு அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட பின்னரே இறுதி அறிக்கை தயாரிக்கப்படும். ஆகவேதான், இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வைக்கும் முயற்சியில் தலைமை அமைச்சர் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார்.

அதேவேளை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றிருந்ததால் தான் சந்திப்புகள் இடம்பெறவில்லை என்றும் இவ்வாரம் அவர் திகதியொன்றை அறிவிப்பார் என்றும் அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (து)

### அரசின்...

தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை விஜேராமவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்வு முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனவாதம், மதவாதத்தைத் தூண்டுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்குத் தற்போதுள்ள சட்டத்தில் போதியவு அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதைவிட, புதிய சட்டம் தேவையில்லை. அரசுக்குத் தேவையென்றால் நிலமையைக் கட்டுப்படுத்த முடியும்.

பொதுபலசேனா அமைப்பின் செயலாளரை அரசுதான் வைத்துக்கொண்டுள்ளது. எனவே, எம் மீது குற்றஞ்சாட்டுவதில் பயனில்லை. தமக்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் முன்னாள் அரசு மீது குற்றஞ்சுமத்துவதே இந்த அரசின் திட்டமாக இருந்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (து)

### 200 கிலோ...

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு நேற்றுமுன்தினம் இரவு தேடுதல் நடத்தியது. அதில் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மன்னார் சிலாவத்துறையில் 142 கிலோ கேரள கஞ்சாவை கடத்த முற்பட்ட நபரொருவர் நேற்று கைதுசெய்யப்பட்டார் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

"குறித்த நபர் மறிச்சுக்கட்டி, கரடக்குளி கடற்கரையோரமாக மோட்டார் சைக்கிளில் கேரளக்கஞ்சாவைகடத்தமுற்படுகையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து மோட்டார்சைக்கிள் மற்றும் 142 கிலோ கேரளக் கஞ்சா என்பன மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைக்காக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மன்னார் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்" என்றுகடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (வ-ற-21-7)

## கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள

# பெண் தலைமைக் குடும்பங்கள் பல வாழ்வாதாரத்துக்காகப் பரிதவிப்பு

## உதவுமாறு கோரி செயலருக்கு மனு

கிளிநொச்சி, ஜூன் 16
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளபெண்தலைமைத்துவ குடும்பங்களுக்குச் சரியான தொழில் வாய்ப்பு மற்றும் வருமானம் இல்லாத காரணத்தால் அந்த குடும்பத் தலைவிகள் குடும்பத்தைக் கொண்டு நடத்த முயாது பல பிரச்சினைகளை எதிர்கொள்வ தாக கிளிநொச்சி மாவட்ட "அரும்பு" பெண்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

போர் நிறைவுக்கு வந்த பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான பெண் தலைலைமைத்துவ குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவர் களுக்கான சரியான தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட வில்லை.

பிரதேச செயலகங்கள் ஊடாகவும் அரசியல் தலைவர்கள் ஊடாகவும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் அதனைச் சரியான முறையில் அவர்கள் பயன்படுத்துவதற்கு மேலதிக உதவிகள் வழங்கப்படுவது குறைவாக காணப்படுகின்றது. அதனால் பிள்ளைகளின் கல்விநிலை ஏனைய செயற்பாடுகள் போன்ற வற்றைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையைப் பல குடும்பங்கள் எதிர்கொண்டுள்ளன.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி சரியான ஆய்வுகளை மேற்கொண்டு இந்தப் பெண்க ளுக்கான வாழ்வாதார வழிகளை சுயதொழில் மற்றும் தொழில் பேட்டைகளுக்கான நடவடிக்கை எடுங்கள் என்று அரும்பு பெண்கள் சம்மேளனத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட செயலாளருக்கு மனுகையளிக்கப்பட்டுள்ளது. மிகவிரைவில் அவற்றினை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பார் என்று அரும்பு பெண்கள் சம்மேளத்தினர் தெரிவித்தனர்.

(4-6)

## பருவகாலச் சீட்டுள்ளபோதும் அரச பேருந்துகளால் உலைச்சல்

### கிளிநொச்சி மாணவர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூன் 17
பேருந்துக்காகக் காத்திருக்கும் தங்களை இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் ஏற்றிச்செல்வதில்லை. அதனால் பருவகாலச் சீட்டுக்களு டன் உள்ள நாங்கள் சிரமங்களை எதிர்கொள்கிறோம்.

இவ்வாறு கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் நேற்றும் மணிக்கணக்கில் காத்திருந்த பாடசாலை மாணவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுப் பாடசாலை நிறைவடைந்து வீட்டுக்குச் செல்வதற்காகவந்தமாணவர்கள்பேருந்து ஏற்றிச்செல்லாத காரணத்தால் மிக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியநிலை ஏற்பட்டது.

வழமையாக நின்று ஏறும் இடத்தில் இருந்த பேருந்து தரிப்பு நிலைய பலகை தற்போது இல்லாததும்ஒருகாரணம். எனினும் மாணவர்கள் இடை மறித்த போதும் பேருந்துகள் மாணவர்களை ஏற்றிச் சென்றிருக்கவில்லை.

"சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் சென்ற பின்னர் பிற்பகல் 4 மணியளவில் பேருந்தில் பயணிக்க முடிந்தது" என்று காத்திருந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

"குறித்த முதன்மை வீதியால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாணத்துக்குரிய டிப்போக்கள் மாத்திரமன்றி வடக்கு மாகாணம் தவிர்ந்த சபையின் பேருந்துகளும் பயணிக்கின்றன். பருவகாலச் சீட்டு உள்ளபோதும் நாங்கள் இவ்வாறு அலைக்கழிக்கப்படுகிறோம். அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மாணவர்கள் கோருகின்றனர்.

(4-6)

## பட்டப்பகலில் வீடுடைத்து நகைகள், பணம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 17
நீர்வேலி தெற்கு பூதர்மடம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் திருடர்கள் பட்டப்பகல் வேளையில் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

வீட்டு உரிமையாளர்கள் நேற்றையதினம் வெள்ளிக்கிழமை சந்நிதி ஆலயத்துக்கு சென்றதைப் பயன்படுத்தி திருடர்கள் வீட்டுக்குள் சென்று அங்கிருந்த தங்க நகைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் போன்றவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டின் முன்பக்கக் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அலுமாரி மற்றும் அறைகளை சல்லடை போட்டுச் சோதனையிட்டுள்ளனர். அலுமாரியில் இருந்த தங்க நகைகள், ஒரு தொகைப் பணம் மற்றும் டிஜிற்றல் கமராக்கள் போன்றவற்றை திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டனர்.

(வ-17)

## யாழில் இரு இடங்களில் நற்கருணைப் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ். மறைக்கோட்டக்குருக்கள்ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இயேசுவின் திருவுடல்திரு இரத்தப் பெருவிழாவை முன்னிட்டு நற்கருணைப் பேரணி நிகழ்வுகள் இரு இடங்களில் நாளை ஞாயிற்றுக்கிழமைமாலைநடைபெறவுள்ளது.

யாழ்அடைக்கலஅன்னைஆலயத்தில்நாளை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் திவ்ய நற்கருணைப்பவனி 4 ஆம் குறுக்கு வீதி , பிரதான வீதி வழியாகப் புனித யாகப்பர் ஆலயத்தை அடையும். அங்கு இடம்பெறும் வழிபாட்டைத் தொடர்ந்து, பாங்ஷால் வீதி சென்பற்றிக்ஸ் வீதி, கதீற்றல்வீதிவழியாகபுனிதமரியன்னைபேராலயத்தைச்சென்றடையும்.

இதேவேளைபாஷையூர்புனிதஅந்தோனியார் ஆலயத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் நற்கருணைப் பேரணி புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை வீதி வழியாக மணியம் தோட்டம் தூய மீட்பர்(கர்த்தர்) ஆலயத்தைச் சென்றடையும். கணக்கர் சந்தி, துண்டிச் சந்தி வசந்தபுரம் ஆகிய இடங்களில் தரித்து நின்று சிறப்பு வழிபாட்டு ஆராதனைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு கொழும்பு விஜேராமயில் அமைந்துள்ள அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அரபு நாட்டு தூதுவர்கள், உள்நாட்டுப் பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## முன்னைய ஆட்சி போன்றே கூட்டாட்சியும் நிலம் பறிக்கிறது

### மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 17
முன்னைய அரசும் சரி தற்போதைய கூட்டாட்சி அரசும் சரி எங்களுடைய நிலங்களை அபகரிப்பதையே குறியாகக் கொண்டு செயற்படுகிறார்கள் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சித்திரம் மற்றும் புகைப்படக் கண்காட்சி நேற்றுக்காலை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நில அபகரிப்பை முன்னைய அரசு நேரடியாகச் செய்தது. தற்போதைய அரசு சூட்சுமமாகச் செய்கிறது. அதன் ஒரு வெளிப்பாடாகத்தான் வெலிஓயா என்ற பகுதியோடு இருக்கின்ற வவுனியாவின் பகுதியில் உள்ளடங்குகின்ற இரண்டு கிராமங்களை யாருக்குமே தெரியாமல் அரச தரப்பினர், வெலியோயாவுடன் இணைத்துள்ளனர். வவுனியா மாவட்டத்தின் இறுதி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இதற்குரிய எதிர்ப்பைத் தெரிவித்திருந்தேன்.

தற்போது திரும்பவும் வவுனியா வடக்கு பிரதேசத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அங்குலம் அங்குலமாகக் காலத்துக்குக் காலம் எங்களுடைய பிரதேசங்கள் கலாசாரங்கள் பண்பாடுகள் அழிக்கப்படுகின்றன.

இதுபோன்ற ஆவணங்களை வெளிப்படுத்தும் புகைப்படக்கண்காட்சி சித்திரக்கண்காட்சி நல்லதொருவிடயம். பண்டாரவன்னியனின்வரலாற்றை ஒட்டுமொத்த ஆய்வாக நாங்கள் கொண்டு வரவில்லை என்ற குறைபாடு எங்கள் மத்தியில் உள்ளது. அதனைக் கொண்டு வாருங்கள். குறிப்பாக காக்கைவன்னியன் பதிவு உட்பட வவுனியாவைப் பற்றிய பதிவு எதிர்காலத்தில் தேவைப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர்கள் தாங்களாகச் சிந்தித்து முன்னெடுக்கப்பட்ட இந்த கண்காட்சி வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட முதல் முயற்சியை பாராட்டுகின்றேன்.

இன்றைய நிலையில் பல பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன. மாகாணசபையில் நானா நீயா என்ற பிரச்சினை, கடையடைப்பு, ஆர்ப்பாட்டங்கள் இருந்தாலும் இந்த முயற்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. பொதுவாக எங்களுடைய வாழ்க்கை முதலில் ஆரம்பக்கல்வி. பின்பு உயர்கல்வி. அதன் பின்னர் பல்கலைக்கழகம், உத்தியோகம், திருமணம், பிள்ளை என்று தான் செல்கிறது.

இதற்கு முன்மாதிரியாக பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டு வவுனியாவின்வரலாற்றைபுகைப் படங்கள் சித்திரங்கள் ஆவணப்படங்கள் ஊடாகப் பதிவு செய்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இந்த நாட்டில் மிகப்பெரிய பதவிகளில் தமிழர்கள் தான் இருந்தார்கள். பிற்பட்ட காலத்தில் போர், இடப்பெயர்வு போன்ற காரணங்களால் தமிழ் அதிகாரிகள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே உள்ளனர். இன்றுமாவட்ட செயலகங்களில் வேற்று இனத்தவர்களே அதிகாரிக்கின்றனர். எனவே அதிகார பதவிகளில் தமிழர்கள் வரவேண்டும். அதற்காக மாணவப்பருவத்தில் உள்ள தமிழ் இளையோர் நன்றாகப் படிக்க வேண்டும். என்றார்.

(4-402)

## தெற்கில் ஆரம்பித்த சைக்கிள் பவனி திங்கட்கிழமை பருத்தித்துறை வரும்

### வைத்தியசாலைக்கு நிதி சேகரிக்க

கொழும்பில் சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையின் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கும் திட்டத்துக்கு நிதி சேகரிக்கும் சைக்கிள் பவனி நாளை மறுதினம் திங்கட்கிழமை பருத்தித்துறையை வந்தடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சைக்கிள் பவனியானது வைத்தியசாலையின் பத்து மாடிகளைக் கொண்ட இருதய சிகிச்சைப்பிரிவு மற்றும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளைக் கொண்ட கட்டடத் தொகுதி நிர்மாணிக்கும் திட்டத்திற்கு நிதிசேகரிக்கும் முகமாக தெய்வேந்திர முனையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் பேரணியே வடக்கின் பருத்தித்துறைவரை நடைபெறவுள்ளது.

பிரித்தானியா வாழ் இதய சிகிச்சை நிபுணர்கள் மற்றும் நண்பர்கள் இணைந்து முன்னெடுக்கும் இந்தச் சைக்கிள் பவனியில் தாராள மனம் படைத்தோர்கள் தங்கள் நிதிப்பங்களிப்பை வழங்கி இந்தத் திட்டம் வெற்றிபெற ஒத்துழைக்குமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

(4,12)




## பெற்றோர்களுக்கு கவனிப்பில்லையா? 118 இலக்கத்துக்கு உடன் அழையுங்கள்

கொழும்பு,ஜூன் 17
"பெற்றோர்கள் பிள்ளைகளால் கவனிக்கப்படுவதில்லையா? உடன் அழையுங்கள் 118-இலக்கத்துக்கு" என்ற வாசகங்கள் அடங்கிய ஸ்ரிக்கரை அறிமுகப்படுத்தும் நிகழ்வு கொழும்பு மையப் பேருந்து நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

சமுகவலுவூட்டல் மற்றும் நலன்போக்கு அமைச்சின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தை அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க ஆரம்பித்து வைத்தார். பேருந்து நிலையத்தில் தரிந்து நின்ற பேருந்துகளில் ஸ்ரிக்கரை ஒட்டினார். அந்த ஸ்ரிக்கரில் "பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் உங்களைக் கவனிப்பதில்லையா? உடன் அழையுங்கள் 118 இலக்கத்துக்கு அல்லது 011 3094543 - 3094544 எனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள் (24 மணித்தியாலமும் இயங்கும்) தங்களைக் கவனிப்பதற்காக உடன் நடவடிக்கை எடுக்கப்படும்" என்ற அறிவுறுத்தல் எழுதப்பட்டுள்ளது. (ஐ)

# உலக ஆராய்ச்சி மாநாடு மட்டக்களப்பில் ஆரம்பம்

மட்டக்களப்பு,ஜூன் 17
"போரும் போருக்குப் பின்னருமான காலத்தில் தொட்டுணரா அல்லது அருவப் பண்பாட்டு மரபுகள் எதிர்கொள்ளும் சவால்களும் முக்கியத்துவமும்" என்ற தொனிப் பொருளில் உலக ஆராய்ச்சி மாநாடு மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சிவஞானம் ஜெய்சங்கர் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வு இன்றும் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் இறுதி நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்துக்கான கலாசார மற்றும் தேடல் யாத்திரையுடன் நிறைவு பெறும். மாநாட்டின் ஆரம்ப நாள் நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ரி.ஜெயசிங்கம் பேராசிரியர் எஸ்.மௌனகுரு, கலை கலாசார பீட பீடாதிபதி கே.ராஜேந்திரம், கொழும்பு பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் என்.செல்வக்குமரன், பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விரிவுரையாளர்களான கலாநிதி ஜே.ஞானதாஸின் சிறப்புரையை அடுத்து கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் என்.






செல்வக்குமரன் சிறப்புரையாற்றினார். மாநாட்டில் 120 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப் பிக்கப்படவுள்ளன இன்று சனிக்கிழமை மாலை பறங்கியர் கலைவிழாவும், நாளை ஞாயிற்றுக்கிழமை கலை பண்பாட்டுக் களப்பயணமும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-46)

## விவசாயிகள் பதிவுகளை மேற்கொள்ளவும்

யாழ்ப்பாணம்,ஜூன்17
கடந்த காலபோக நெற்செய்கையின் போது உர மானியக் கொடுப்பனவு பெற்று இதுவரை இழப்பீட்டுக்கானகொடுப்பனவுக்குவிண்ணப்பிக்காத மறவன்புலவுகமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான பதிவுகள் நேற்று முன்தினம் முதல் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில்ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை பயிர்அழிவுக்கான இழப்பீட்டுக்குவிண்ணப்பிக்காத, மானிய உரக் கொடுப்பனவு பெற்ற நெற்செய்கையாளர்கள் நாளைமறுதினம்திங்கட்கிழமைக்கு முன்னர்தமதுபெயர்களைப்பதிவுசெய்யுமாறு கமக்கார அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். (ஐ-9)

## யோகாப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் சனசமூக நிலையைத்தின் ஏற்பாட்டில், யோகா பயிற்சியும் கல்விக்கான நிதி வழங்கல் நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் குருசோ வீதியில் அமைந்துள்ள கிறீன் பீல்ட் மண்டபத்தில் நடைபெறும் என்று நிர்வாகத்தினர் அறிவித்தனர். (வ-ரி)

## செயலமர்வு இன்று

காங்கேசன்துறைப் பகுதி மாவட்டக் குருளைச்சாரணர்தலைவர்களுக்கான செயலமர்வுஇன்றுசனிக்கிழமைகாலை 8 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில், உதவிச் சாரணர் மாவட்டத் தலைவர் திருமதி பவானி கைலைநாதன் தலைமையில் நடைபெறும். (ஐ-9)

## கண்காட்சி

சாவகச்சேரி, ஜூன்17
சாவகச்சேரி விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தினரால் நடத்தப்பட்ட தையல் மற்றும் தோற்பொருள்கள் பயிற்சிக் கூடத்தில் பங்குபற்றிய பயிலுநர்களால் ஆக்கப்பெற்ற பொருள்களின் காட்சிப்படுத்தல்(கண்காட்சி) நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் தொடக்கம் மாலை 4 மணி வரை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முதன்மை மண்டபத்தில் நடைபெறும். அமையத்தின் முதன்மை நெறியாளர் க.அருந்தவ பாலன் தலைமையில் நடைபெறும் கண்காட்சியை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, வட மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பர். (ஐ-9)

## முல்லை,மாங்குளம் நீதிமன்றங்களுக்கு இன்று அடிக்கல்

முல்லைத்தீவு, ஜூன்17
நடுவண் நீதி அமைச்சின் நிதிஒதுக்கீட்டில்முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு மற்றும் மாங்குளம் பகுதிகளில் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமைஇடம்பெறும். அன்று முற்பகல் 9.30 மணிக்கு மாங்குளத்தில் அமைக்கப்படவுள்ள நீதிமன்றுக்கும், முற்பகல் 11 மணிக்குமுல்லைத்தீவில் அமைக்கப்படவுள்ள நீதிமன்றுக்கும்அடிக்கல்நடப்படும்.

நிகழ்வில் தலைமை விருந்தினராகநீதிஅமைச்சர்விஜயதாசராஜபக்சவும், சிறப்பு விருந்தினராக நீதி மற்றும் பௌத்த மத விவகார பிரதி அமைச்சர் எச்.ஆர்.எஸ்.ரி.மித்ரபாலவும், கௌரவவிருந்தினர்களாக வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி பா.சசிமகேந்திரன், நீதி அமைச்சின் செயலாளர் பத்மஸ்ரீ ஜெயமானே ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-9)

## பிளாஸ்ரிக் அரிசி வதந்தி பரப்புபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஜூன் 17
சமூக வலைத்தளங்கள் ஊடாக பிளாஸ்ரிக் அரிசி தொடர்பாகப் போலியான தகவல்களைப் பதிவிடும் நபர்களுக்கு எதிராக நட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அதிகார சபை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
சமூக வலைத்தங்களில் பிளாஸ்ரிக் அரிசி தொடர்பாகப் போலியான தகவல்களைப் பதிவிடும் மற்றும் ஊக்குவிக்கும் குழுக்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன. அந்தத் தகவல்களைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கி, அவர்கள் ஊடாக அவ்வாறனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரசபை தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)


கோப்புப்படம்

# மதவாச்சியில் வாகன விபத்து: இருவர் சாவு; நால்வர் படுகாயம்

வவுனியா,ஜூன் 17
மதவாச்சி பூணாவைப் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் மதகுரு உட்பட இருவர் உயிரிழந்துள்ளதுடன், நால்வர் படுகாயமடைந்துள்ளனர் என்று மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது. மதவாச்சியில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த வான், எதிர் திசையில் வந்து கொண்டிருந்த முச்சக்கரவண்டியுடன் மோதுண்டது. இந்த விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியும், அதில் பயணித்த பௌத்த மத குருவொருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.



வானில் பயணித்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மதவாச்சிப் பொலிஸார் முன்னெடுத்துள்னர். (ஐ)

## விண்ணப்பிக்கும்காலம்நீடிப்பு

கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலைகளுக்கான விளையாட்டுப்பயிற்றுவிப்பாளர்களைஉள்வாங்குவதற்கானவிண்ணப்பமுடிவுதிகதிநீடிக்கப்பட்டுள்ளதுஎன்றுகல்விஇராஜாங்க அமைச்சர் வீ.எஸ்.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சு ஊடாக பாடசாலைகளுக்கான 3 ஆயிரத்து 850விளையாட்டுபயிற்றுவிப்பாளர்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டிருந்தது. அதற்கமைவாகத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. விண்ணப்பிக்கும் இறுதி திகதியாக நேற்று முன்தினம் வரை என அறிவிக்கப்பட்டிருந்தது. தபால்தொழிற்சங்கங்களின்போராட்டம்காரணமாகஎதிர்வரும்29ஆம்திகதிவரைவிண்ணப்பங்களைஅனுப்பிவைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இயற்கைப் பசளைகளைப் பெற்று பயிர் செய்ய விரும்புபவர்களுக்கு பசு மாடுகள் உடன் வழங்கப்படும்

## விவசாயிகளுக்கு மாவட்டச் செயலர் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 16
"மாட்டுப் பட்டிகள் அமைத்து அதன் ஊடாக இயற்கை பசளைகளைப் பெற்று விவசாயம் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் இருப்பார்களாயின் அவர்கள் இனம் காணப்பட்டு தீவகப்பகுதிகளில் கட்டாக்காலியாக திரியும் பசு மாடுகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்".
இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக பேசப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவகப் பிரதேசங்களில் ஏராளமான கட்டாக்காலி பசு மாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான மாடுகள் பயனற்ற மாடுகளாகவே காணப்படுகின்றன. இந்தக் கட்டாக்காலி மாடுகளை நாம் பயனுள்ளதாக மாற்ற வேண்டும். அந்த வகையில் முன்னைய காலப்பகுதிகளில் விவசாயிகள் மாட்டுப் பட்டிகள் அமைத்து தமது விவசா யத்துக்குத் தேவையான பசளைகளைப் பயன்படுத்தி வந்தனர். அதே முறைமையை தற்போதைய விவசாயிகளும் பின்பற்ற விரும்பினால் எமக்கு அறிவியுங்கள். உங்களுக்கு நாம் தீவகப்பகுதிகளில் கட்டாக்காலியாக திரியும் பசு மாடுகளைப் பெற்றுத் தருவதுடன் அவை பட்டிகளில் பராமரிக்கப்படுகின்றனவா என்று ஆய்வு செய்யப்படும்.
இந்த நடவடிக்கை மூலமாகத் தீவகப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையான கட்டாக்காலி பசு மாடுகளின் தொல்லையில் இருந்து விடுபட முடியும். அத்துடன் சட்ட விரோதமாக இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதையும் தடுக்க முடியும். அது மட்டுமன்றி விபத்துக்களையும் கட்டுப்படுத்தலாம் - என்றார். (4-8)

## இந்திய மீனவர் அத்துமீறல் இந்த வருடம் குறைந்துள்ளது

3 வருட படகுகள் விடுவிக்கப்படவில்லை
திணைக்கள புள்ளிவிபரம் கூறுகிறது




யாழ்ப்பாணம், ஜூன் 15
அத்துமீறி யாழ்ப்பாண கடற்பரப்புக்குள் நுளைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்களிடம் இருந்து, கைப்பற்றப்பட்ட படகுகள் கடந்த மூன்று ஆண்டுகளாக இன்னமும் விடுவிக்கப்படவில்லை. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் இந்திய மீனவரின் அத்துமீறல் குறைவடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
3 வருடங்களுக்கு முன்னைய ஆண்டுகளில் கைப்பற்றப்பட்ட படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களப் புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியின் போது கைப்பற்றப்பட்ட படகுகள் கடந்த மூன்று ஆண்டுகளாக விடுவிக்கப்டவில்லை. 2015 ஆம் ஆண்டு 43 படகுகளும், 2016ஆம் ஆண்டு 29 படகுகளும், நடப்பு ஆண்டில் இதுவரை 14 படகுகளும் கைப்பற்றப்பட்டன. எனினும் அவை இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று திணைக்களப் புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. 2013 ஆம் ஆண்டு 48 படகுகளும், 2014 ஆம் ஆண்டு 99 படகுகளும் கைப்பற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண மாவட்ட கடற்பரப்புக்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. கடந்த வருடங்களில் ஒப்பிடுகையில் அத்துமீறிய மீன்பிடித்தல் குறைந்துள்ளன என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.
2013 ஆம் ஆண்டு 48 தடவைகளில் 220 இந்திய மீனவர்களும், 2014 ஆம் ஆண்டு 100 தடவைகளில் 477 இந்திய மீனவர்களும், 2015 ஆம் ஆண்டு 43 தடவைகளில் 273 இந்திய மீனவர்களும், 2016 ஆம் ஆண்டு 29 தடவைகளில் 140 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும் நடப்பு வருடத்தில் இதுவரை 14 தடவைகளில் 89 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 6 இந்திய மீனவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்ட கடற்பரப்பில் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களின் எண்ணிக்கை குறைவு என்பதை நீரியல் திணை க்களத்தின் புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. (4-ரி,10)

உள்ளூராட்சி சபைகளில் பணிபுரியும்

## பெண் உத்தியோகத்தர்களும் இனி சீருடை அணியவேண்டும்

யாழ்ப்பாணம்,ஜூன் 17
யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் பெண் வருமானப் பரிசோதகர்களும் சீருடை அணிய வேண்டுமென்று யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சபைகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.
பல்வேறு திணைக்கள ங்களில் பல்வேறு பதவிநிலைகளில் பெண் வெளிக்கள அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். அவ்வாறான நிலையில் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் பெண் வருமானப் பரிசோதகர்கள் கடமையின்போது சேலைக்கு மேல் காக்கி நிற நீளக்கை புஷ் கோர்ட் அணிய வேண்டுமென்று அறிவுறுத்துமாறு சபைகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.
இதுவரை காலமும் ஆண் வருமானப் பரிசோதகர்கள் மட்டும் காக்கியிலான சீருடை கட்டாயம் அணிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையினால் பெண் வருமானப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டு கடமையாற்றுகின்றனர். இவர்கள் கடமையின் நிமித்தம் வெளிக்கள வேலைக்குச் செல்லும் வேளையில் கட்டாயம் சேலைக்கு மேல் காக்கி நிற நீளக்கை புஷ் கோர்ட் அணியவேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் சபைகளுக்கு மேலும் அறிவித்துள்ளார். (4-9)

## மன்னாகண்டல் பாடசாலையை இடமாற்ற பெற்றோர் கடும் எதிர்ப்பு

*மாணவர்களின் கல்வியைக் கெடுக்காதீர்கள் என்றும் கோரிக்கை*

முல்லைத்தீவு, ஜூன் 17
முல்லைத்தீவு வலயத்துக்குட்பட்ட மன்னாகண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை வேறு இடத்துக்கு மாற்றுவதை உடனடியாகத் தடுத்து, அதே இடத்தில் தொடர்ந்து இயங்குவதற்கு உரிய அதிகாரிகளும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளும் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும்.
இவ்வாறு மன்னாகண்டல் கிராம மக்கள் கோரியுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாகவும், ஏழ்மை நிலையில் உள்ள மக்களை அதிகமாக கொண்ட கிராமங்களில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மன்னாகண்டல் கிராமமும் ஒன்று.
இந்தக் கிராமத்தில் 42 வருடங்களுக்கு மேலாக கிராமமக்களின்கல்விக்குப் பாத்திரமாக அமைந்த பாடசாலையாக மன்னாகண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை விளங்கி வருகின்றது. தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட மன்னாகண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தற்போது 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர்.
புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் இருந்து சுமார் நான்கு கிலோமீற்றர் தொலைவில் மன்னாகண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அமைந்துள்ளது. பாடசாலைக்குச் சொந்தமாக 10 ஏக்கர் காணி உள்ளது. அங்கிருந்து வசந்தபுரம் அல்லது கிரடமடுவுக்கு பாடசாலையை கொண்டு செல்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.
இதனால் 40 இற்கும் மேற்பட்ட பாட்சாலை மாணவர்கள் 5 கிலோமீற்றருக்கு அதிகமான தூரம் சென்றே தங்கள் கல்வியைத் தொடர வேண்டிய அவலநிலைக்கு வழி அமைக்கும். அதனால் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை தொடர முடியாத நிலைக்கு ஆளாக நேரிடும். மாணவர்களின் நன்மை கருதாது வெறுமனே அதிபர் மற்றும் ஆசிரியர்கள் நன்மைக்காக பாடசாலையை வேறிடத்திற்கு மாற்றுவதை பெற்றோராகிய நாம் மிகக் கடுமையாக வன்மையாக எதிர்க்கிறோம். சில இடங்களில் அருகிலுள்ள பாடசாலைகளுக்குக்கூட மாணவர்கள் கற்றலுக்குச் செல்லாது பாடசாலையைப் புறக்கணித்துவர அதிகாரிகள் அவர்களைத் தேடிச் சென்று பிடித்து பாடசாலையில் சேர்த்து வருகின்றனர். அந்த நிலையை எமது பிரதேச மாணவர்களுக்கும் ஏற்படுத்துவதாகவே குறித்த பாடசாலையை இடமாற்றம் செய்வதனூடாக கல்வி அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனரா? என்றும் பிரதேச மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.
கல்வியில் பின் தங்கிய நிலையில் உள்ள எமது பிள்ளைகளில் கல்வியை வளர்த்தெடுப்பதற்கு ஆசிரியர்கள் முன்வருவதை விடுத்து தமது நலன்கருதி இவ்வாறு செய்வது வருத்தமளிக்கின்றது. பாடசாலை இருக்கும் இடத்தில் இருந்து வேறிடத்துக்கு மாற்றப்படுவதனைத் தடுக்க அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதி களும் இதில் கூடிய அக்கறை காட்ட வேண்டும்.இதனைத்தடுத்து நிறுத்தி எமது கிராமத்தில் வாழ்ந்து வரும் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்குமாறு மன்னாகண்டல் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.
'பாடசாலை தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் இடத்தில் இருந்து வேறிடத்திற்கு நகர்த்துவதற்கு முடிவுகள் எடுக்கப்படுமாயின் அது பாடசாலை சமூகத்தினர் மற்றும் உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்புக்களுடனேயே எடுக்கப்படும். அதனை விடுத்து சிலரின் தனிப்பட்ட முடிவாக அமையாது' என மன்னாகண்டல் பாடசாலை அதிபர் தெரிவித்தார். (4-7)

> "இதனால் 40 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் 5 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் சென்றே தங்கள் கல்வியை தொடர வேண்டிய அவலநிலைக்கு ஏற்படும். அதனால் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை தொடர முடியாத நிலைக்கு ஆளாக நேரிடும்.

## ஒட்டுசுட்டானில் வெல்ல உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது

முல்லைத்தீவு, ஜூன் 16
ஒட்டுசுட்டான் பனை, தென்னை அபிவிருத்திச் சங்கத்தில் தரமான பனை வெல்லங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சங்கத்தின் தலைவர் க.நவரத்தினராசா தெரிவித்தார்.
தவிர்க்க முடியாத சில காரணங்களால் அண்மைக் காலமாக வெல்லங்கள் உற்பத்தி செய்யப்படவில்லை. ஆனால் தற்போது வெல்ல உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு ஒரு கிலோ வெல்லம் ரூபா 700 ஆக விற்பனை செய்யப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-500)

## சீன பயிற்சி நெறிக்கு வடக்கிலிருந்து மூவர்

*நாட்டிலிருந்து 30 பேர் நேற்றுப் பயணமாகினர்*

யாழ்ப்பாணம் ஜூன் 17
விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த சீன அரசின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் வடக்கிலிருந்து 3 பேர் ஒரு மாத பயிற்சிக்காக நேற்று சீனாவுக்குப் பயணமாகியுள்ளனர்.
இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள இலங்கையில் விவசாயத் திணைக்களங்களில் கடமையாற்றும் 30 விவசாய போதனாசிரியர்கள் இவ்வாறு சீனாவுக்குப் பயணமாகினர்.
இவர்களில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் எழுதுமட்டுவாழ் விவசாய போதனாசிரியர் திருமதி சி.பிரபூர்ணா, கைதடி விவசாய போதனாசிரியர் கவிதா, முல்லைத்தீவு விவசாய போதனாசிரியர் சிவரூபன் ஆகியோர் புலமைப் பரிசில் திட்டத்தில் சீனா சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
சீனாவில் இருந்து பத்து பேர் கொண்ட குழுவினர் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தனர். அவர்கள் வடக்கில் உள்ள கமநல சேவை திணைக்களங்களுக்குச் சென்று பயிர் செய்கைகளை பார்வையிட்டிருந்தனர். அதன் பின்னர் குறித்த 30 பேரும் சீனக்குழுவினராலேயே தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (4-9)

# அரசியல் உள்நோக்கத்துடனேயே குழு விசாரணைகளை நடத்தி முடித்துள்ளது

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை பற்றிய விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனின் தன்னிலை விளக்க அறிக்கையின் மூன்றாவது பகுதி.

### கொழும்பு அரசின் நடவடிக்கைகளே பார்த்தீனிய ஒழிப்பு திட்டம் பின்னடைவு

தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பார்த்தீனியம் விளைநிலத்தில் அல்லது வீட்டு வளவுகளில் காணப்படின் அதனை அழிப்பது உரிமையாளர்களின் கடமை. அழிக்கத் தவறின் குற்றம் இழைத்தவராகக் கருதப்பட்டு ஆறு மாதங்கள் வரை சிறைவாசமும், ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணமும் அறவிடப்படலாம். ஆனால், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் சட்ட வல்லுநர்களுக்கு இதுவரையில் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை. இலங்கையில் ஏனைய மாகாணங்களில் பார்த்தீனியம் பெரும் பிரச்சினையாக உருவெடுக்காததால் கொழும்பு விவசாயத் திணைக்களமும் சட்டமா அதிபர் திணைக்களமும் இது பற்றிப் போதிய அக்கறை காட்டவில்லை. ஆனால் மாகாண விவசாயத் திணைக்களத்தின் இடையறாத முயற்சிகளின் காரணமாக தற்போது கொழும்பு விவசாயத் திணைக்களம் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயன்முறைகளின் வரைவு ஒன்றை சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளது. சட்டம் நடைமுறைக்கு வரும் போது பார்த்தீனியம் ஒழிப்பு சாத்தியம் ஆகும்.

விவசாய அமைச்சால் பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்பே பார்த்தீனியம் ஒரு பேசு பொருளாகி அது குறித்த விழிப்புணர்வு பரவலாக ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் விவசாய அமைச்சால் செலவிடப்பட்ட பணத்தை நான் வீண் விரயமென்று கருதவில்லை.

### குற்றச்சாட்டு இல 4.6 (அ)

நொதேர்ன் பவர் என்ற மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் தொழிற்பட்ட வேளையில் அதனது கழிவு எண்ணெய் குடிதண்ணீரில் கலந்த விடயத்துக்கு ஆய்வுக் குழு ஒன்றை நியமித்து அந்தக் குழுவின் அறிக்கை மூலம் நிறு வனத்துக்கு சாதகமாக அறிக்கையை வெளிப்படுத்தி உண்மைகளை மறைத்தமை

### 4.6 (ஆ)

நிலத்தடி நீர் விடயம் தொடர்பில் எவ்வித அதிகாரமும் அற்ற நிலையில் நிலத்தடி நீரில் எண்ணெய் கசிவு தொடர்பில் விசாரணைக்காக நிபுணர் குழுவை நியமித்து மாகாண சபையின் நிதியை வீண் விரயம் செய்தமை.

● விசாரணைக்குழு, தனது அறிக்கையில் கொழும்பு அரசின் நிர்வாகம் இங்கு தனது பொறுப்பை உணர்ந்து மிகச் சரியான முறையில் செயற்பட்டு வரும்நிலையில், அமைச்சர் தனக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அதிகாரம் தரப்படாத சுற்றுச்சூழல் விடயத்தில் தலையிட்டு, தன்னிச்சையாக ஓர் நிபுணர் குழுவை உருவாக்கி, நொதேர்ன் பவர் நிறுவனத்துக்குச் சாதகமான ஒரு அறிக்கையைத் தயாரித்து, உண்மைகளை மூடி மறைக்க முயன்றதாகவும், இந்த அறிக்கை பொதுமக்களுக்கு வெளியிடப்படாமை சந்தேகத்தை வலுப்படுத்துவதாகவும், நிபுணர் குழுவை நியமித்ததன் மூலம் மாகாண சபையின் நிதியை விரயம் செய்ததாகவும், மாகாண சபையின் அனுமதியுடன்தான் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் பதிவு செய்துள்ளது.

### நிபுணர் குழு அமைத்தமை அரசியல் ரீதியாகச் சரியானதே

எமது பிரதேசத்தில் சுற்றுச்சூழலுடன் தொடர்புபட்ட விடயமொன்று பெரும் பிரச்சினையாக பூதாகரம் பெற்றுவந்த நிலையில், கொழும்பு அரசால் அதிகாரம் அளிக்கப்படாத விடயம் என்பதைக் காரணம் காட்டி நாம் வாழாதிருக்கமுடியாது. அந்தவகையில், எமது நீர்வளத்தை மாசுறுத்தும் எண்ணெய் தொடர்பான உண்மை நிலையைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு கொழும்பு அரசின் நிர்வாகத்துக்குட்பட்ட விடயமொன்றில் மாகாண அமைச்சராகத் தலையிட்டமை சட்டரீதியாகப் பிழையானதாக இருப்பினும் அரசியல் ரீதியாகச் சரியானதும் தேவையானதும் என்பதே எனது கருத்தாகும்.

சுன்னாகம் பிரதேசத்தில் கிணறுகளில் கழிவு எண்ணெய் பரவிய விவ்காரம் ஒரு எரியும் பிரச்சினையாக உருவெடுத்தபோது மாகாண சபை நிர்வாகம் அதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் பலமாக எழுந்தன. மாகாண சபையினுள்ளேயும் பலத்தவாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. இதையடுத்து சுன்னாகம் பிரதேச குடிதண்ணீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை தொடர்பான களநிலவரங்களை அறிவதற்கான குழு ஒன்று அமைக்கப்பட்டதோடு, முதலமைச்சரின் பணிப்பின்பேரில், அவரது பங்கேற்புடன், விவசாய அமைச்சரையும் சுகாதார அமைச்சரையும் இணைத் தலைவர்களாகவும், யாழ் மாவட்டச் செயலாளரைத் துணைத் தலைவராகவும் கொண்டு தூய குடிதண்ணீருக்கான சிறப்புச் செயலணியொன்றும் உருவாக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளின் ஒரு நகர்வாகவே நிபுணர் குழு உருவாக்கப்பட்டது. நிபுணர் குழுவொன்றின் அவசரமும் அவசியமும் உணரப்பட்ட நிலையில் கள நிலவரங்களை அறிவதற்கான குழுவில் இடம்பெற்றிருந்த மருத்துவர்கள் பரிந்துரைத்த பெயர்களையும் உள்வாங்கி நிபுணர் குழு அமைக்கப்பட்டதோடு, வடக்கு மாகாண சபையின் அமைச்சரவைக்கு குழுவின் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, நிதி விடயங்களுக்கு ஆளுநரின் ஒப்புதலும் பெறப்பட்டு, மாகாண சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டது.

### நிபுணர் குழுவிலிருந்தோர் அறநெறி பிழைத்தோரில்லை

இந்த நிலையில் அமைச்சர் தன்னிச்சையாக செயற்பட்டார் என்றும், மாகாண சபையின் அனுமதியுடன்தான் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை ஏற்றுக்



கொள்ள முடியாது என்றும் உள்நோக்கத்தோடு சில அரசியல் வாதிகள் கூறிவருவதைப் போன்றே விசாரணைக் குழுவும் பதிவு செய்திருப்பது அவர்களும் ஏதோ ஒரு அரசியல் உள்நோக்குடனேயே விசாரணையை நடத்தி முடித்திருக்கிறார்கள் என்றே எனக்கு எண்ணத்தோன்றுகிறது.

விஞ்ஞானம் என்பது ஆய்வுகள் ரீதியாகப் பலமுறை நிரூபிக்கப்பட்ட உண்மைகளின் தொகுப்பு. முறையான விஞ்ஞான ஆய்வுகள் முடிவுகளை முன்கூட்டியே தீர்மானித்து விட்டுச் செய்யப்படுவன அல்ல. நாம் நியமித்த நிபுணர் குழுவும் சுயாதீனமாக, எந்தவிதமான த்லையீடுகளும் இன்றியே ஆய்வுகளைச் செய்தது. எவரையும் காப்பாற்ற வேண்டும் அல்லது எவரையும் தண்டிக்கவேண்டும் என்ற நோக்கங்கள் எதுவும் ஆய்வுக் குழுவுக்கு இருக்கவில்லை. தண்ணீரில் எண்ணெய் கலப்புப் பற்றி ஆராய்ந்து முடிவுகளை வெளியிடுவது மட்டுமே அதன் நோக்காக இருந்தது. எதன் பொருட்டும் எவர் பொருட்டும் ஆய்வின் முடிவுகளை மாற்றி எழுத இவர்கள் அறநெறி பிழைத்தவர்களுமல்ல.

### நிபுணர் குழுவினதும் நீர் வழங்கல் சபையினதும் அறிக்கைகளுக்கிடையே பெரிய வித்தியாசமில்லை

இவர்களது ஆய்வு முறைமையும் நீர் வழங்கல் வடிகால் சபையின் ஆய்வு முறைமையும் வெவ்வேறாக இருந்தன. இவற்றைப் புரிந்து கொள்ளாமல், நிபுணர் குழு உண்மைகளை மூடி மறைத்தது என்று விசாரணைக்குழு தெரிவித்திருப்பது அபாண்டமானது. நிபுணர்குழுவின் அறிக்கையையும் நீர்வழங்கல் வடிகால் சபை சுன்னாகம் நீர் மாசு தொடர்பாக மார்ச் 2017இல் வெளியிடப்பட்டுள்ள அதன் ஆகப் பிந்திய அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க அளவு வித்தியாசங்கள் இல்லை என்பது தெரியும்.

நிபுணர்குழுவின் அறிக்கை அந்தக் குழுவால் முதலமைச்சரிடமும் என்னிடமும் நேரடியாகத் தரப்பட்டது. யாழ்ப்பாணப் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அறிக்கைகையளிக்கும் நிகழ்ச்சியில் ஆய்வுகள் தொடர்பாக நிபுணர் குழுவால் விளக்கமும் அளிக்கப்பட்டது. இதில் மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டிருந்தார்கள். அறிக்கையின் பிரதி வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்திலும் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அறிக்கை பொதுமக்களுக்கு வெளியிடப்படவில்லை என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

இவற்றின் பின்னணியில் எமது மக்களின் வாழ்வாதாரமான நீர் தொடர்பான ஆய்வுகளுக்கு மாகாண சபை நிதியை பயன்படுத்தியதை வீண்விரயம் என்று சொல்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

### குற்றச்சாட்டு இல 4.7

2015 நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட 5இலட்சம் மரநடுகைத் திட்டம் தொடர்பில் பண மோசடி செய்தமை.

●2015 நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட 5 இலட்சம் மரநடுகைத் திட்டம் தொடர்பில் மோசடி இடம் பெற்றுள்ளது என்பதை எண்பிப்பதற்கு முழுமையான ஆதாரங்கள் விசாரணையின்போது வெளிக் கொண்டு வரப்படவில்லையாயினும், வழங்கப்பட்ட மரக்கன்றுகளை பராமரித்துப் பாதுகாப்பதற்கான பொறிமுறை இல்லாத இந்தத் திட்டம் வெற்றியளிக்காத திட்டம் என்பதுடன் நிதி வீண் விரயத்துக்குக் கொண்டு செல்வதற்கான காரணமாக அமைந்துள்ளது எனவும் விசாரணைக் குழு அபிப்பிராயப்படுகிறது.

### கார்த்திகை மாதத்தின் சமூகக் காரணிகளை குழுவுக்குப் புரியவில்லை

கார்த்திகை மாதத்தை மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ள தன் பின்னணியில் இருக்கக்கூடிய தமிழ் மக்களின் சமூக, அரசியல், சூழ்லியல் காரணிகளைப் புரிந்து கொள்ளாமல் விசாரணைக் குழு, சில இடங்களில் பட்டமரங்களைப் பார்த்துவிட்டுத் திட்டத்தையே தோல்வியடைந்த திட்டம் என்று தமது அபிப்பிராயத்தை வெளியிடுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

மரநடுகை மாதம் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பெரும்பாலான தாவர உற்பத்தியாளர்கள் இணைந்து வடக்கு மாகாண தாவர உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். கார்த்திகை மாதத்தில் இவர்களிடம் இருந்து பொதுமக்களும் நிறுவனங்களும் வாங்கிச் செல்லும் மரக்கன்றுகளின் எண்ணிகை மிக அதிகமாக இருப்பதாக இவர்கள் பல தடவைகள் தெரிவித்துள்ளார்கள். மேலும், வீதியோரங்களில் பாதுகாப்புக் கூடுகளில் மரங்களை நட்டும் பராமரிக்கும் போக்கும் அதிகரித்துள்ளது. இது மரநடுகை மாதத்தின் வெற்றியாகவே கருதப்பட வேண்டும்.

### மக்களின் பங்களிப்புடனேயே மரநடுகை முன்னெடுப்பு

2015ஆம் ஆண்டு 'ஐந்து மாவட்டங்கள் ஐந்து இலட்சம் மரக்கன்றுகள்' என்பதைத் தொனிப்பொருளாகக் கொண்டு மரநடுகை மாதம் கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது 1 இலட்சம் எண்ணிக்கையான நிழல் தருமரங்கள், வெட்டு மரங்கள், பழ மரங்களை நாட்டுவதெனவும் 4 இலட்சம் பனை விதைகளை நடுகை செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பொருள் வடக்கு மாகாண சபையே இவ்வளவையும் நாட்டிப் பராமரிக்கும் என்பதல்ல. இந்த இலக்கைப் பொதுமக்களின் பங்கேற்புடன் எட்டுவது என்பதே ஆகும்.

இந்த மாதத்தில் ஒன்றரை இலட்சம் வரையான மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. வடக்கு மாகாண தாவர உற்பத்தியாளர்கள் சங்கம் பொதுமக்களுக்கும் பொதுஅமைப்புகளுக்கும் விற்பனை செய்த மரக்கன்றுகள், தென்னை அபிவிருத்திச் சபைஎமக்கூடாகவழங்கியதென்னை மரங்கள், அன்பே சிவம் என்ற அமைப்பு வழங்கிய மரக்கன்றுகள், விவசாய அமைச்சின் ஊடாக இலவசமாக வழங்கப்பட்ட 14 ஆயிரத்து 193 மரக்கன்றுகள் ஆகியனவற்றின் மொத்தத் தொகையே ஒன்றரை இலட்சம் ஆகும். அத்தோடு, பனை தென்னைவளக் கூட்டுறவுச் சங்கங்கள் 4 இலட்சத்து 81 ஆயிரத்து 857 பனை விதைகளை நடுகை செய்துள்ளன.

● அறிக்கையில், வவுனியா சேமமடு வீதியில் இளமருதங்குளத்தில் பனை அபிவிருத்தி சங்கத்துக்கு உரித்தான காணியில் பெரும் விழாவாக நடப்பட்ட மரங்களுக்கு யார் உரிமையாளர்கள்? என்பதை அமைச்சர் விசாரணைக் குழுவுக்கு விளக்கம் அழிக்கத் தவறிவிட்டார் எனவும், முதலமைச்சரும் இந்த நிகழ்ச்சிக்கு சமுகளித்திருந்ததாக பொதுமக்கள் தங்களிடம் தெரிவித்துள்ளதாகவும் விசாரணைக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

### முதலமைச்சர் வரவேயில்லை

இந்த மரநடுகையை மேற்கொண்டது, விவசாய அமைச்சோ, அல்லது திணைக்களமோ அல்ல எனவும் இது வவுனியா மாவட்ட பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாடே என சாட்சியத்தின் போது தெரிவித்திருந்தும், விசாரணைக் குழுவுக்கு விளக்கம் அளிக்கத் தவறிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, முதலமைச்சர் இந்த விழாவில் கலந்து கொள்ளாத நிலையில், அவர் கலந்து கொண்டிருந்ததாகவும் பொதுமக்கள் தெரிவித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதை போன்று இங்கு பெரும் விழாவாக அல்லாமல் மரநடுகை ஒரு நிகழ்ச்சியாகவே கூட்டுறவுச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

நடப்படும் மரங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அமைச்சு மற்றும் திணைக்களம் சார்பில் நடப்படும் மரங்களைத் திணைக்களங்கள் கண்ணுங்கருத்துமாகவே பராமரித்துவருகின்றன. எனினும் பொதுமக்களும் பொது அமைப்புகளும் தாங்கள் நடும் மரங்களுக்கான பராமரிப்பை அவர்களே உறுதி செய்ய வேண்டும். விழிப்புணர்வின் ஊடாக இது சாத்தியமாகி வருகிறது.

### குற்றச்சாட்டு இல 4.8

ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் இதுவரையில் நன்கு வெற்றியளிக்கவில்லை எனத் தெரிந்திருந்தும், தவறான செல்வாக்கைச் செலுத்தி சாத்தியக்கூற்று அறிக்கையைப் பெற்று புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை முன்னெடுத்து 32 மில்லியன் ரூபாவை வீண் விரயம் செய்தமை.

●முத்தையன்கட்டு திட்டத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் முழுமையான வெற்றியளிக்கவில்லை எனவும் நீர் இறைப்பு இயந்திரங்களை இயக்குவதற்கு அதிகளவு செலவுகள் ஏற்பட்டதன் காரணமாகவே உச்ச பயன்பாட்டைப் பெற முடியவில்லை எனவும் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

# தனித்து ஆட்சி அமைக்க முடியாது போனமைக்கு 100 நாள் திட்டமே காரணம்

## ஐ.தே.க. எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

2015 அரச தலைவர் தேர்தல் முடிந்து ஒரு வாரத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தியிருந்தால் ஐக்கிய தேசிய கட்சி 130 ஆசனங்களைப் பெற்று, தனித்து ஆட்சி அமைத்திருக்கும். 100 நாள் வேலைத் திட்டத்தை முடித்த பின்னர், நடத்தப்பட்டதால்தான் தேசிய அரசை அமைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்று ஐ.தே.கட்சியின காலிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டைச் சீரழித்துக்கொண்டிருந்த மகிந்தவை விரட்டுவது எமது முதலாவது நோக்கமாகவும், ஐக்கிய தேசிய கட்சி தனித்து ஆட்சியமைப்பது என்பது இரண்டாவது நோக்கமாகவுமே இருந்தது.

2020 இல் தனித்து ஆட்சி அமைப்பதாக எமது தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறுகின்றபோதிலும், அப்போது நிலைமை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் 17வருடங்கள் மிகவும் துன்பத்தை அனுபவித்தே இந்த அரசை உருவாக்கியுள்ளோம்.

அரச தலைவரும் தலைமை அமைச்சரும் வெளிநாடுகளுக்குச் சென்று ஜீ.எஸ்.பி. பிளஸ் தடையை நீக்கியுள்ளனர்.

போர்குற்றச்சாட்டில் இருந்து இந்த நாட்டைக் காப்பாற்றியுள்ளனர்.

அதைவிடவும் முக்கியமாக மகிந்தவை மின்சாரக் கதிரையில் இருந்து காப்பாற்றியுள்ளனர். ஊழல், மோசடிகளுக்கு எதிரான செயற்பாட்டை நாம் விரிவுபடுத்தியுள்ளோம். கடந்த ஆட்சியில் ஊழல் மேற்கொண்டோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதில தாமதம் ஏறபடுகின்றபோதிலும் ஊழல்வாதிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவர் என்றார். (து-ய)

# ராஜிதவும், சம்பிக்கவும் பெரும் பொய்யுரைப்போர்

## கோத்தபாய கடும் சீற்றம்

கொழும்பு, ஜூன் 17

ராஜிதவும், சம்பிக்கவும் நாட்டுக்குப் பணியாற்றத் தெரிந்தவர்கள் அல்லர். அவர்கள் பொய்காரர்கள் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

பெரும் நிதிமோசடி தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் பிற்பகல் முன்னிலையாகிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரக்னா லங்கா நிறுவ னத்துக்குத் தனக்கு வேண்டியவர்களை நியமித்துத் தருமாறு எனக்குக் கடிதம் அனுப்பியவர்கள் தான் இந்த அமைச்சர்களான ராஜிதவும், சம்பிக்கவும். இப்போது எங்கள் மீது குற்றம்சாட்டுகின்றனர்.

அவர்கள் அனுப்பிய கடிதங்கள் இன்னமும் என்னிடம் இருக்கின்றன. பொய்கூறித் திரியாமல், நாட்டுக்காக வேலை செய்து காட்டுமாறு நான் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

அவர்களைப் பற்றிச் சிறு பராயம் முதல் எனக்கு நன்கு தெரியும்.

நான் நாடாளுமன்ற உறுப்பினரோ, அமைச்சரோ அல்ல. பேய்களே மிரண்டு ஓடும் அளவுக்குப் பொய்களைக் கூறாமல் அவர்களது வேலையை ஒழுங்காகச் செய்யுமாறு நான் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (துய)

# பாகிஸ்தானுக்கு மகிந்த

கொழும்பு, ஜூன் 17

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எதிர்வரும் 19ஆம் திகதி பாகிஸ்தானுக்குப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார். பாகிஸ்தான் அரசின் அழைப்பின் பேரில் முன்னாள் அவர் அங்கு செல்லவுள்ளார் என ஊடகப் பிரிவு குறிப்பிட் டுள்ளது. இதேவேளை, கடந்த 10நாள்களுக்குமுன்னர்ஜப்பானுக்குப் பயணம் செய்த மகிந்த, அந்த நாட்டு அரசின் அழைப்பின் பேரில் அங்கு சென்றதாகக் கூறியி ருந்தார். எனினும் இதனை அரசு நிராகரித்ததோடு, ஜப்பான் அவருக்கு அழைப்பு விடுக்கவில்லை என்றும், அவர் தனது தனிப்பட்ட பயணமாகவே அங்கு சென்றார் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-ய)

# மட்டக்களப்பு சிறைச்சாலை விரைவில் புதிய இடத்துக்கு

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன்17

மட்டக்களப்பு சிறைச்சாலையைப் புதிய இடத்துக்கு மாற்றுவதுடன், அந்த இடத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வழங்குவதாகச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் இந்த சமய கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளர் என மட்டக்களப்பு மாவட்ட செயலர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு அமைச்சில் நடைபெற்ற சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். விரைவில் இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சிறைச்சாலைக்கான கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இட வசதிப் பிரச்சினைகள் மற்றும் சிறைச்சாலையின் விஸ்தரிப்பு உள்ளிட்ட விடயங்கள் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் பல தடவைகள் விவா திக்கப் பட்டுள்ளன.

அதேநேரம் மட்டக்களப்புச் சிறைச் சாலையை மட்டக்களப்பு தொழுநோய் வைத்தியசாலை அமைந்துள்ள மாந்தீவுக்கு மாற்றுவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டபோதிலும், அந்தப் பிரதேசம் ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசம் என்ற வகையில் மாந்தீவுக்கு சிறைச்சாலையை மாற்றும் தீர்மானம் கைவிடப் பட்டிருந்தது.

அதன் பின்னர் மட்டக்களப்பில் வேறு இடங்களைத் தெரிவு செய்வதென்ற அடிப்படையில் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு திராய்மடுப் பிரதேசத்தில் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் சிறைச்சாலையை மாற்றுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் காணப்பட்டிருந்தது- என்றார். (து-ய-46)

**மணமக்கள் தேவை**

**"சொர்க்கம் திருமணசேவை"** கனடாவில் வசிக்கும் 32 வயதுடைய Charted Accountant ஆகப் பணிபுரியும் மணமகனுக்கு அழகான பட்டதாரி மணமகளைத் தேடுகின்றோம். கனடாவில் வசிக்கும் 33 வயதுடைய மணமகனுக்கு அழகான மணமகளை தேடுகின்றோம். கனடாவில் வசிக்கும் 43 வயதுடைய மணமகனுக்குத் தகுந்த மணமகளைத் தேடுகின்றோம். கனடாவில் வங்கியில் பணிபுரியும் றோமன் கத்தோலிக்க மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றோம்.

T.P & Viber :- 00141 6666 1855, 0016 47504 3336

**மாந்தை மேற்கு ப.நோ.கூ.சங்கம் திருக்கேதீஸ்வரம்**

பின்வரும் பதவிகளுக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி - காசாளர்**

சம்பளக் குறியீட்டு இல - 306/13
சம்பளத் திட்டம் - 9950 - 85x10-90x10-11700
(அனுமதிக்கப்பட்ட படிகளும்)

**தகைமைகள் -**

- ✔ கூ.ஊழியர் ஆணைக்குழுவின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் 2 வருட அனுபவம் அல்லது கூ.ஊழியர் ஆணைக்குழுவின் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் 4 வருட அனுபவம்.

**அல்லது**

- ✔ கூட்டுறவு பணியாளர் பயிற்சி சாதாரண தரத்தில் சான்றிதழ் அல்லது க.பொ.த. சா.தரத்தில் 6 பாடங்களில் 4 பாடங்களில் கணிதம் உட்பட திறமைச்சித்தியும் அல்லது காசாளர் பதவியில் 2 வருட கூட்டுறவுத் துறையில் அனுபவம்.
- ✔ வயதெல்லை - 18 - 45

**பதவி - சாரதி**

சம்பளக் குறியீட்டு இலக்கம் - 312 /13
சம்பளத்திட்டம் - 9950 - 85x10-90x10-11700
(அனுமதிக்கப்பட்ட படிகளும்)

**தகைமைகள் -**

- ✔ 5ஆம் ஆண்டு கல்விச் சான்றிதழ் சகல வாகனங்களுக்குமான A.D அனுமதிப்பத்திரம்
- ✔ ஒருவருடத்துக்குக் குறையாத அனுபவம் சங்க எல்லைக்குட்பட்டவராக இருப்பவர்களுக்கு முன்னுரிமை
- ✔ வயதெல்லை 18 - 45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் **கல்விச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சங்க எல்லையில் வசிப்பதற்கான உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்,** சாரதி **அனுமதிப்பத்திரம்** ஆகியவற்றின் பிரதிகள் இணைத்து **தலைவர், மா.மே.ப. நோ.கூ.சங்கம், திருக்கேதீஸ்வரம்** என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ எதிர்வரும் 20.06.2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**நேர்முகத் தேர்வின்போது மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கபட வேண்டும்**

**தலைவர்,மாந்தை மேற்கு ப.நோ.கூ.சங்கம்.**



**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

**இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**வி.ஜெயந்தி**
T.P: 077 9733 183
021 227 1468

**மணமகள் தேவை**

அரசாங்க திணைக்களத்தில் பியோனாகப் பணியாற்றும் 31 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம் உத்தரம் 1. பாவம் 20. செவ்வாய் எட்டாமிடத்தில்

075 520 0693

**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளி, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியிலுள்ள ஒரு பரப்பும் 16 குளியும் உள்ள காணியும் அதனுள் அடங்கும் வீடும் விற்பனைக்குண்டு.

077 614 6434 (J 6971) (22.18)

**வீடு வாடகைக்கு**

நாவலர் வீதியில் 8 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வாகனத்தரிப்பிட வசதி உண்டு.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

077 858 3838



## மரண அறிவித்தல்கள்



### திருமதி விஜயகுமாரி செல்வரெட்ணம்

யாழ்.மாதகலை பிறப்பிடமாகவும். வெள்ளவத்தையை (Aruthusha Lane) வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயகுமாரி செல்வரெட்ணம் 15.06.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (நவரெட்ணம்)- சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்வரெட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் ) அவர்களின் அன்பு மனைவியும், கௌதமன் (ஜேர்மனி), கௌதம் (சட்டத்தரணி), புருசோத்தமன் (மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் இராஜேந்திரம் (சேனாதி), காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தர்மகுலசிங்கம் மற்றும் இந்திராணி (கனடா), புஸ்பராணி (பிரான்ஸ்), குணசிங்கம் (கனடா), சத்தியபாமா (கனடா), ஜீவன் (கனடா), காலஞ்சென்ற தில்லைநடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரண்யா வின் (ஜேர்மனி) அன்பு மாமியும், காலஞ்சென்ற நல்லை, புஸ்பராணி, வசந்தாகுணநிதி (கனடா), கணேசதாசன் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (கனடா), ஜெயராணி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று முதல் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 19.06.2017 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் நிசலசெவன மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- செல்வரெட்ணம் (கணவர்)**

**011 2361749, 077 945 3329**

## பலசேனாவுக்குப் பின்னால் பலமான சக்திகள் உள்ளன

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தைச் சீர்குழைக்கும் வகையில் செயற்பட்டு வரும் பொதுபலசேனாவுக்கு பின்னணியில் அரசின் முக்கிய நபர்கள் இருக்கின்றனர் என குடிமக்கள் அமைப்பின் ஏற்பாட்டாளர் காமினி வியங்கொட தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஞானசார தேரர் பொலிஸாருக்கும் நீதிமன்றத்துக்கும் அகப்படாமல் மறைந்து வருகின்றார். இவரின் நடவடிக்கைகள் தொடர்பில் அரசு பொறுப்புச் சொல்ல வேண்டும். இவ்வாறு சட்டவிரோதச் செயல்பாடுகளில் ஈடுபடும் ஒருவருக்கு சட்டத்தில் பாதுகாப்பு கிடைப்பதாயின் அரசிலுள் சில முக்கிய நபர்கள் இதன் பின்னால் இருப்பதே காரணம் - என்றார். (த-ய)

## மரண அறிவித்தல்கள்

### வேலன் மார்க்கண்டு

**(துவிச்சக்கரவண்டி தரகர்)**




புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாவும் கொண்ட வேலன் மார்க்கண்டு 14.06.2017 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், அசோத்தம்மாவின் அன்புக் கணவரும், கௌசலாதேவி (டென்மார்க்), சுமதி (கனடா), மதிகரன் (ஜேர்மனி), சதியுகன் (லண் டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வறியேஸ்வரன், பேரின்ப நாதன், லோகேஸ்வரி, சுகந்தி ஆகியோரின் மாமனும், சுஜீவன், ஜெனீ பன், சுயன், லுஸ்மி, அபிராஜ், அபர்னா, அபிஷா, கிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் ஈவினை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 800 2862**

**காளியவத்தை வீதி,**
**புன்னாலைக்கட்டுவன் வடக்கு.**



### இராஜரட்ணம் குகதாசன்

யாழ்.ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், தம்பசிட்டி, பருத்தித்துறையைப் புகுந்த இடமாகவும், சுவிஸ் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் குகதாசன் 08.06.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவசுந்தரி அவர்களின் அன்புக் கணவரும், இரட்சிகா, இராகுல் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜாம்பிகை (கோப்பாய்), மோகனதாசன் (சுவிஸ்), ஜெகதாம்பிகை (ஏழாலை), சுந்தரதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜகீர்த்திகன், ராஜமித்திரன், சித்திராங்கி, கோபிராஜ், சுபராஜ், பரன்ராஜ் ஆகியோரின் அன்பு மாமாவும், றொசானி, மதுசன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், காலஞ்சென்றவர்களான இராசகுலசிங்கம், சிவஞானசுந்தரம், இராசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), செல்லம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும், வரதராஜன் (கிராம அலுவலர் - கோப்பாய்), கலிஸ்டா (சுவிஸ்), காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் சசிலீலாவதி (பிரான்ஸ்), இராஜசுந்தரி( பருத்தித்துறை), ஶ்ரீகணேசன் (சுவிஸ்), ஜெயராஜன் ( கனடா), சுந்தரராஜன் (ஜேர்மனி), வரதராஜன் (கனடா), யோகசுந்தரி (பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் பிரபாகர் (ஆசிரியர் - புற்றளை மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பேரம்பலம், பேராசிரியர் குணரட்ணம் (முன்னாள் துணை வேந்தர் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2017) ஞாயிற்றுக்கிழமை கலாநிதி வீதி, ஏழாலை வடக்கில் உள்ள அவரது தாய்மனையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலாநிதி வீதி,**
**ஏழாலை வடக்கு.**

தகவல்
**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரிகள்.**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 . 11 . 1939 | 15 . 06 . 2017 |

### மோசஸ் பிரான்சிஸ் ஜோசப்

### M.F. ஜோசப்

**(இளைப்பாறிய சிரேஷ்ட சாலைப்பரிசோதகர் இ.போ.ச.ஹட்டன்)**

யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மோசஸ் பிரான்சிஸ் ஜோசப் 15.06.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவக்கீன் மோசஸ் - மேரி ஜோசப்பின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - இராசம்மா தம்பதியரின் மருமகனும், அருளம்மாவின் (ஓய்வுநிலை ஆசிரியர்), அன்புக் கணவரும், கமலினி பெற்றோநிலா, நோயல் அருட்செல்வன் (சம்பத் வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்நேசன், டயானா ஆகியோரின் மாமனும், ரைற்ரஸ், திவ்ஜன், சரோன், தனிக்கா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான சிசிலியா, மோசஸ் அமலதாஸ் மற்றும் மோசஸ் அலோசியஸ், யுஸ்ரினா (கிறேஸ்மணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான பாக்கியம், பிலோமினா, லில்லி, விண்சன்ட் மற்றும் சிசிலியா, எமிலி, பெனடிட், அல்பிறட் , அரியமணி ஆகியோரின் மைத்துனரும், கிறிஸ்ரியன், மொனிக்கா, அக்னஸ், கொன்சி, றெஜினா, லூமினா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.06.2017) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உடுவில் புனித செப மாலை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**107/9, அம்பலவாணர் வீதி,**
**உடுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

021 224 1304 / 077 660 0304

## சு.க. தொடர்ந்து அரசில் இருப்பதா? இல்லையா?

### முடிவு மையக் குழுவிடம்

கொழும்பு, ஜுன்17

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போதைய அரசுடன் தொடர்ந்தும் இருப்பதா அல்லது விலகிக் கொள்வதா என்பதைப் பற்றிய இறுதித் தீர்மானம் அந்தக் கட்சியின் மத்திய நிறைவேற்றுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமை செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் ஆணைப்படி பெற்றுக்கொண்ட ஆட்சியைத் தொடர்ந்து நடத்திச்செல்ல வேண்டிய பொறுப்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு உள்ளது.

2020ஆம் ஆண்டில் சுதந்திரக் கட்சி தனியாக ஆட்சி பீடம் ஏறும் என்ற நம்பிக்கையும் எமக்கு உள்ளது. எனவே, அந்த இலக்கை நோக்கிப் பயணிப்பதற்குக் கட்சி மேலும் பிளவுபடாமல் ஐக்கியத்துடன் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைச் செயலாளர் என்றவகையில் அந்தக் கூட்டமைப்பின் கட்டுக்கோப்பு சிதறாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய முக்கிய பொறுப்பு எனக்கு இருக்கின்றது-என்றார். (கு-ய)

## தேர்தலில் நிதி மோசடி: விசாரணைகள் ஆரம்பம்

2015ஆம் ஆண்டின் அரச தலைவர் தேர்தலின் போது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான பிரசாரங்களைச் செய்வதற்காக 15 அரைக் கோடி ரூபா அரச பணம் துஸ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் பெரும் நிதிமோசடி தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவில் தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விசாரணைக்காக ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரான விமலசேன ரூபசிங்ஹ, முன்னாள் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) சனத் தலுவத்த உட்பட எட்டுப்பேருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டுள்ளன.

2014 டிசெம்பர் 8ஆம் திகதிமுதல் 2015 ஜனவரி 5ஆம் திகதிவரை ரூபவாஹினியில் கட்டணங்கள் செலுத்தாமல் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தேட செய்யப்பட்ட விளம்பரங்கள் மூலம் 15 கோடியே 50 இலட்ச ரூபா அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதாக செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (கு)

## இந்திய மீனவர் படகுகளை விடுவிக்க அரசு தீர்மானம்

இந்தியமீனவர்களின் படகுகளை விடுவிக்கவுள்ளதாக இலங்கை மீன்பிடித் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. தமிழக மீனவர்கள் மீண்டும் எல்லைத்தாண்டக்கூடாது என்ற கடும் நிபந்தனைக்குஅமையவே படகுகள் விடுவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் 2015 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்பரப்பில் வைத்துக் கைப்பற்றப்பட்ட 42 படகுகள் விடுவிக்கப்படவுள்ளன. கைப்பற்றப்பட்ட காலத்தின் அடிப்படையில் ஏனைய படகுகள் படிப்படியாக விடு விக்கப்படும் என்று கடற்தொழில் அமைச்சு அறிவித்துள்ளது. (கு)

# தமிழருக்கு கொடுத்த நிவாரணத்தைக் கூட நிறுத்திவிட்டது அரசு

### தினேஸ் குணவர்தன எம்.பி. சாடல்

கொழும்பு, ஜுன்17

30 வருடப் போரை ஒழித்த நாம் தமிழர்களுக்குத் தேவையான நிவாரணங்களைக் கொடுக்கத் தொடங்கினோம். ஆனால், இந்த அரசு அந்த வேலைத்திட்டத்தை முற்றாக நிறுத்திவிட்டது. தமிழர்களுக்கு இப்போது எதுவும் கொடுக்கப்படுவதில்லை. தமிழர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட வீடுகளைக்கூட இரண்டு வருடங்கள் கழிந்தும் அரசு இன்னமும் அமைத்துக்கொடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நாடாளுமன்றுக்குள் அழுதுகொண்டிருக்கின்றார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருப்பவர்களின் விவரங்களை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும். அரசு அவ்வாறு செய்யாது எமது வாய்களை மூடப் பார்க்கின்றது.

இதற்கெல்லாம் காரணம் பிரதான எதிர்க்கட்சி மௌனமாக இருப்பதுதான். நாட்டில் வெள்ள இடர் ஏற்பட்டபோதும் சரி, முஸ்லிம்களின் கடைகளுக்குத் தீ வைக்கப்படுகின்றபோதிலும் சரி வாய் திறந்து பேசுவதில்லை. எதிர்க்கட்சி என்றால் நாட்டு மக்களுக்கு எது நடந்தாலும் நாடாளுமன்றில் உரத்துக்குரல் எழுப்பவேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவதால்தான் அரசு அதன் விருப்பம்போல் ஆடுகிறது. இந்த இனவாதச் செயற்பாடுகளின் பின்னால் மகிந்த அணியே உள்ளது என்று சொல்லப்பட்டது. ஆனால், இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் யார் என்று பார்க்கும்போது அந்தக் குற்றச்சாட்டு பொய்யாகி விடும். பொலிஸ்மா அதிபர் கைதுசெய்யப்பட்டவர்களின் விவரங்களை நாட்டுக்கு தெரிவிக்க வேண்டும். மக்கள் உண்மையை அறிய வேண்டும். இல்லையேல்வீண்சந்தேகம்ஏற்படும். புதுச் சட்டம் கொண்டு வந்தாவது இந்த இனவாதச் செயற்பாடுகளை நிறுத்துவேன் என்று முதன்மை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதுச்சட்டம் தேவையில்லை. இருக்கின்ற சட்டமே போதும். இரண்டு பக்கமும் பார்த்தால் போதும் முதன்மை அமைச்சர் சூத்திரதாரிகள் யார் என்பதை அறிந்துகொள்வார்.

யாழ்ப்பாணம் நூல் நிலையத்துக்குத் தீ வைத்தமைக்காக மன்னிப்புக் கேட்பதற்கு அவருக்கு 30வருடங்கள் எடுத்திருக்கின்றது என்றால் இந்தப் பிரச்சினையை முடிப்பதற்கு எத்தனை வருடம் செல்லுமோ தெரியாது.

கள்வர்களைப் பிடிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு இந்த அரசு ஆட்சியைப் பிடித்தது. இவர்களால் கள்வர்களைப் பிடிக்க முடியாது என்பது மத்திய வங்கி சம்பவத்தின்மூலம் தெளிவாகத் தெரிகின்றது. திருடர்களுடன் சேர்ந்து இந்த அரசும் திருடுகிறது- என்றார். (கு-ய)

## டெங்கு ஒழிப்பு பணிக்கு புதிதாக 1,500 பேர் நியமனம்

### 50 லொறிகளும் கொள்வனவு

கொழும்பு, ஜுன்17

வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தலைதூக்கியுள்ள டெங்குநோய் அபாயத்தைக் கருத்தில்கொண்டு டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் பணிக்குப் புதிதாக 1,500 உதவியாளர்களை நியமிக்க சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தப் பணிகளுக்கு உதவி செய்வதற்காகச் சுகாதார அமைச்சு ஒரு கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 50 லொறிகள் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் உக்கிரமடைந்து வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நுளம்புகளை ஒழிப்பதற்கான புகையூட்டி இயந்திரங்கள் 500 இறக்குமதி செய்யப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அமைச்சின் தனிப்பட்ட முயற்சியால் மாத்திரம் டெங்கு நோயை முற்றாக ஒழிக்கமுடியாது. நாட்டு மக்கள் அனைவரும் இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்படாவிட்டால் அந்நோய் மேலும் தீவிரமடையும் என சுகாதார அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (கு-ய)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 20 . 01 . 1938



கண்ணெகிழ 27 . 06 . 2016

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்ற

**திருமதி இராசையா சிவம்**

(கார்க்காரம்மான் மனைவி)

திதி: அபரபட்ச அட்டமி (17.06.2017)

ஆசையாய் தூளிகட்டி அழகாய் - பாட்டிசைத்து
நேசமாய் வளர்த்தபிள்ளை - நீசமாய்
ஏசினாலும் பாசமாய் இருப்பவளே
பெற்றெடுத்த தாயவளே காசைத்தான் பார்ப்பதில்லை
கண்களிலே கருணை தானே வேசமும் தெரியாது
வெள்ளந்தி உள்ளந்தனில் வெளுத்ததெல்லாம் பால்
என்பாள் பெற்றெடுத்த தாயவளே
அழுகின்ற குழந்தையை அதற்கான தேவையை அழகாய்
- புரிந்தவள் தான்
அவளும்தான் அழுகின்றாள் பெற்றெடுத்த தாயவளை யார் தான்
- புரிந்தனரோ
எவர்தான் அறிந்தாரோ பெற்றெடுத்ததாயவளின்
- துயர் நீக்கவாரீரோ...

முதலாம் ஆண்டு ஓடிமறைந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் உங்கள் நினைவலைகள்
எம்மைவிட்டு நீங்காது

சந்தை வீதி,
கொடிகாமம்,

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சிற்றம்பலம் சின்னத்தம்பி**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

திதி: 13.07.2017

தோற்றம் 15.04.1947

மறைவு 17.06.2014

மூன்றாண்டு முடிந்ததுவோ உங்கள்
முகம் நீங்கிச் சென்று....
நீறான வடுக்கள் இங்கே ஒருபோதும்
ஆறாது அப்பா...
நிலம் வியக்க இங்கு நிறைவாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும் ஆறாது எம் துயரம்
இந்த நிலம் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்!

வரணி.

குடும்பத்தினர்.



# இரத்த ஆறு ஓடுமென்று கூறியவரை கைது செய்க

*அமைச்சர் ரிசாத் பதியுதீன் கோரிக்கை*

கொழும்பு, ஜூன்17

பொதுபலசேனா இயக்கத்தின் செயலாளர் ஞானசாரதேரரைக் கைதுசெய்தால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் என அடிக்கடி கூறிவரும் அந்த இயக்கத்தின் தலைவர் டிலந்த விதானகேயைப் பொலிஸார் உடனடியாகக் கைதுசெய்யவேண்டும் என அமைச்சர் ரிசாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு மற்றும் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில தேடப்பட்டுவரும் ஒருவரைக் கைது செய்யவேண்டாம் எனக் கூறுவது நாட்டின் சட்டத்தையும், நீதியையும் கேலிக்கூத்தாக அவர் நினைப்பதையே நிரூபிக்கின்றது என்றும் அவர் கூட்டிக்காட்யுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எவரையும் கைதுசெய்யவேண்டாமென்று பொலிஸாரையும் நீதிமன்றத்தையும் பலவந்தப்படுத்த முடியாது. சட்டம் தனது கடமையை உரிய முறையில் மேற்கொள்வதற்குக் குறுக்கீடாக யார் செயற்பட்டாலும் அவருக்கெதிராக முதலில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாறாகக் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் வகையில் கருத்துச் சொல்வது, கோரிக்கை விடுப்பது, பலவந்தப்படுத்துவது சட்டத்துக்கு முரணான செயலாகும்.

ஒரு நாட்டிலே சட்டம் ஒழுங்கு இல்லையென்றால் அது காட்டரசாக மாறவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படும்.

ஞானசார தேரர் ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறையில் இருந்தவர். அளுத்கம இனக்கலவரம் தொடர்பில் அவருக்கு எதிராக 50 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் இருக்கின்றன. சிறையில் இருந்த ஒருவரை மீண்டும் இன்னுமொரு குற்றச் செயலுக்காகக் கைதுசெய்தால் எவ்வாறு நாட்டிலே இரத்த ஆறு ஓடும்? ஞானசாரரைப் பாதுகாப்பதற்காக ஒரு கூட்டம் மாய்யையை ஏற்படுத்த நினைக்கின்றது. சட்டத்தின் முன் எல்லோரும் சமனே. ஞானசாரர் தவறு இழைக்காவிடின் உயர் நீதிமன்றத்துக்குச் சென்று நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும். இதனை விடுத்து வீதிகளில் சண்டித்தனம் காட்டக்கூடாது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் முன்னிலையாகாமல் ஒளிந்து இருக்கும் அவரைக் கைது செய்தால் இரத்த ஆறு ஓடுமெனக் கூறிவரும் விதானகே ஏதோ ஒரு உள்நோக்கத்திலேயே இவ்வாறு கதைக்கிறார்.

இரத்தக்களரி ஒன்றை உருவாக்கி நாட்டில் ஏதோ ஒரு குழப்பத்தை ஏற்படுத்த இந்த இயக்கம் முயற்சிகளைச் செய்து வருவதன் பிரதிபலிப்பாகவே இதனைக் கருதவேண்டியிருக்கின்றது.

எனவே டிலந்த விதானகேயும், அவருடன் சார்ந்தவர்களும் கைதுசெய்யப்பட வேண்டும்- என்றார். (த-ய)

# கூட்டாட்சியை முதன்முதலாக முன்மொழிந்தது தென் பகுதியே

*இப்போது பழியைத் தமிழர்கள் மீது போட முயற்சி என்கிறார் மனோ கணேசன்*

கொழும்பு, ஜூன்17

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாகக் கூட்டாட்சி முறைமை வழங்கப்பட வேண்டும் என்று கூறியவர்கள் தெற்கு சிங்களவர்கள்தான். தமிழர்கள் அல்லர். இப்போது தமிழர்கள் மீது பழியைப் போட்டு நாட்டைப்பிரிப்பதற்கு முற்படுகிறார்கள் என்று கூறுவது எந்தவகையில் நியாயம்.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் மனோ கணேசன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எல்லாப் பிழைகளையும் தமிழர்கள் மீதும் பன்னாட்டுச் சமுகத்தின் மீதும் போடுவதை நிறுத்திவிட்டு தெற்கு அரசியல்வாதிகள் தங்கள் மீது உள்ள பிழைகள் பற்றியும் சிந்திக்கவேண்டும்

இலங்கை சுதந்திரம் அடைந்தன் பின்னர் 1987இல்தான் இலங்கை பிரச்சினை தொடர்பில் பன்னாட்டுத் தலையீடு முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை- இந்திய ஒப்பந்தம் ஊடாக அந்தத் தலையீடு வந்தது. 1956 இலும் 1965 இலும் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கூடிப் பேசி ஒப்பந்தங்களைச் செய்தனர். அவற்றுக்கு பன்னாட்டுத் தலையீடுகள் எவையும் இருக்கவில்லை.

அப்போது பண்டாரநாயக்க வடக்குக்குச் சென்று தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாகக் கூட்டாட்சியை முன்மொழிந்தார். தமிழர்கள் அதை ஏற்கவில்லை.



பிறகுதான் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

ஆனால், காலாகாலமாக தமிழர்களே சமஸ்டியைக் கோரி வருகின்றனர் என்றும், நாட்டைப் பிரித்துக் கேட்கின்றனர் என்றும் தெற்கு அரசியல்வாதிகள் கூறுகின்றனர். கூட்டாட்சியை முதன்முதலாக முன்மொழிந்தது தெற்கு. முதலாவது அரசியல் கொலை இடம்பெற்றது தெற்கில். முதலாவது ஆயுதப் போராட்டம் இடம்பெற்றதும் தெற்கில்.

உண்மை இப்படி இருக்கும் போது பிழைகள் எல்லாவற்றையும் தமிழர்களினதும் பன்னாடுகளினதும் தலைகளில் போடுவது எந்த வகையில் நியாயம்?

தங்களின் பிழைகள் பற்றியும் தெற்கு அரசியல்வாதிகள் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதுபோல்தான் நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் இனவாதசெயற்பாடுகள் தொடர்பிலும் உண்மை நிலைமையைஉணர்ந்து அதைக் கட்டுப்படுத்துவதற்கு முன்வர வேண்டும். மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர முடியாது- என்றார். (த-ய)

# மலையகத்தின் நீர்நிலைகளை தனியாருக்கு வழங்கத் திட்டம்

*மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு*

கண்டி, ஜூன் 17

அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களையும் அதனுடனான உடைமைளையும் தனியாருக்கு விற்பனை செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என மத்திய மாகாணசபை உறுப்பினர் நிமல் பிரேமவன்ச தெரிவித்தார்.

கண்டி டெவோன் ஹோட்டலில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கண்டி, மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள அனைத்து பெருந்தோட்ட நீர் வளங்களையும் தனியாருக்கு வழங்கும் திட்டம் படிப்படியாக செயற்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடியும்.

தற்போது பெருந்தோட்டங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகள், கட்டடங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கண்டி ஹ_ன்னஸ்ரிய தோட்டத்திற்கு சொந்தமான சுமார் 2000ஏக்கர் காணி அமைச்சர் ஒருவரின் நெருங்கிய கோழிப் பண்ணை வர்த்தகர் ஒருவருக்கு வழங்கவுள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த பெருந்தோட்டங்களில் சுமார் 10,750 பேர் வேலை செய்கின்றனர். அவர்களுக்குக் கோழிப் பண்ணையில் வேலை செய்து பழக்கமில்லை.

கண்டி மற்றும் மாத்தளையில் அனைத்து தோட்டங்களிலும் வளமான நீர் நில்லைகள் அமைந்துள்ளன. இன்று மத்திய மலையகத்தில் உள்ள அனைத்து நீர் நிலைகளையும்தனியாருக்கு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை தடுத்து நிறுத்தவேண்டும் என்றார். (த-ய)

# அதிவேகப் பாதைகளில் செல்பி எடுக்கத் தடை

கொழும்பு, ஜூன் 17

அதிவேகப் பாதைகளின் இரு மருங்கும் தங்களது வாகனங்களை நிறுத்தி செல்பி எடுப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அதிவேகப் பாதைகளுக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையக உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தப் பாதைகளில் வாகனங்களை நிறுத்திவிட்டுப் படம் எடுப்பவர்களால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதுடன் அவ்வாறு செய்பவர்கள் விபத்துகளில் சிக்குவதற்கான வாய்ப்புகளும் காணப்படுவதாலேயே இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார். (த)

# பலசேனாவை விட்டுவைத்தால் போரைவிட மோசமான அழிவு

*திஸ்ஸ விதாரண எச்சரிக்கை*


கொழும்பு, ஜூன்17

பொது பல சேனாவைக் கட்டுப்படுத்தத் தவறினால் புலிகளுடனான போரில் ஏற்பட்ட அழிவை விடவும் பெரும் அழிவை இந்த நாடு சந்திக்கும் என்று முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகரகமவில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் வர்த்தக நிலையம் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இருப்பவர் ஜாதிக ஹெல உறுமயவின் மஹரகம பிரேதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர். பொதுபலசேனா ஆரம்பமானதே ஜாதிக ஹெல உறுமயவில் இருந்துதான்.

அளுத்கம சம்பவத்தை அடுத்து பொதுபலசேனாவைத் தடை செய்யவேண்டும் என்று நான் அப்போது கூறியபோது அமைச்சர் சம்பிக்க ரணவக்கதான் அதைத் தடுத்தார். பௌத்த தேரர்களின் அமைப்பைத் தடைசெய்தால் தேரர்கள் அனைவரையும் ஒரு திரட்டி மகிந்த அரசுக்கு எதிராகப் போராடுவோம் என்று அவர் மகிந்தவை மிரட்டினார்.



ஹலால் பிரச்சினையின்போது அமைச்சர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழு பொது பல சேனாவைச் சந்தித்தது. இலங்கை முஸ்லிம் இளைஞர்கள் 5ஆயிரம் பேர் வெளிநாடுகளில் ஆயுதப் பயிற்சி பெறுகின்றனர். அவர்கள் இலங்கையில் பயங்கரவாதத்தை அரங்கேற்றப் போகின்றனர் என்று ஞானசாரர் அப்போது எம்மிடம் கூறினார். இது ஆதாரமற்ற தகவல் என்று நாம் கூறினோம். அனால், ஞானசார தேரர் கூறுவது சரிதான் என்று சம்பிக்க கூறினார். அந்தத் தேரரை சம்பிக்கதான் பாதுகாத்து வைத்திருக்கின்றார்.

ஞானசார தேரர் ஆரம்பத்தில் இருந்தது ஜாதிக ஹெல உறுமய காட்சியில்தான். ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஆரம்பத்தில் பொதுபலசேனாவில் இருந்தவர். சிங்கள முஸ்லிம் கலவரம் ஏற்பட்டால் அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்து தேர்தலை ஒத்திப்போட முடியும். அந்த நோக்கோடுதான் அரசு செயற்படுகின்றது. இந்தப் பயணம் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

போரால் ஏற்பட்ட அழிவை எம்மால் இன்னும் ஈடுசெய்ய முடியவில்லை. இதனால் அபிவிருத்தியில் நாம் பல தசாப்தங்கள் பின்நிற்கின்றோம்- என்றார். (த-ய-3)

# வெள்ள நிவாரணத்துக்கு ரூபா 200 கோடி ஒதுக்கீடு

கொழும்பு,ஜூன்17

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் சேதமடைந்த வீடுகள், கட்டடங்கள், மக்களின் உடைமைகள் மற்றும் பாதைகளை மறுசீரமைப்பதற்காக அரசு 200 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது என அரச தொழிற்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவுகளால் ஏற்பட்டுள்ள சேதங்களுக்காகப் பல வெளிநாடுகள் தாராளமாக உதவி செய்துள்ளன.

அந்த உதவிகளைச் சரியாகப் பயன்படுத்தி சேதங்களை நிவர்த்திசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், அரசும் அதற்காக 200 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது என அவர் மேலும் கூறினார். (த-ய)

# இடரில் சிக்கிய அரச ஊழியருக்கு சிறப்பு விடுமுறை

கொழும்பு, ஜன 17

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவுகளால் பாதிக்கப்பட்டு பணிக்கு வரமுடியாத அரச ஊழியர்களுக்கான விசேட விடுமுறைக்கான சுற்றறிக்கை அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

இடரினால் பணிக்குச் செல்லமுடியாதவர்கள் விசேட விடுமுறைக்கான விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து தத்தமது பகுதி கிராம சேவையாளரினதும் பிரதேச செயலாளரினதும் கையொப்பங்களுடன் தமது அலுவலகப் பிரதானிகளிடம் கையளிக்கவேண்டும் அந்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ய)

# அதிகாரிகளை விடுத்து எம்மைப் பழி தீருங்கள்

## அரசிடம் கேட்கிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஜூன் 17
பழிவாங்க வேண்டுமாயின் எங்களைப் பழிவாங்குங்கள். மாறாக அரச அதிகாரிகளையும், மக்களையும் பழிவாங்காதீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
கேகாலை அரநாயக்கப் பிரதேசத்தில் மண் சரிவில் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடச் சென்ற நாமலுடன் அரச அதிகாரிகள் இணைந்துசென்ற விவகாரம் தொடர்பிலேயே நாமல் இவ்வாறு கூறியுள்ளார். நாமலுடன் சென்ற அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க கூறியிருந்தார்.
இந்நிலையில், இடர் ஏற்பட்டு 13 மாதங்கள் கடந்துள்ளன. இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



அரநாயக்கவுக்குப்பயணத்தில்என்னுடன் இணைந்து கொண்ட அரச அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் கோரியிருந்தார்.
எம்முடன் இணைந்து அங்கு வந்த அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதை விடுத்து பாதிக்கப்பட்ட மக்களை இயல்பு நிலைமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
பழிவாங்கவேண்டுமாயின் எம்மைப் பழிவாங்குங்கள். ஆனால் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குங்கள் - என்றார். (கு-ய)

# சவூதியிலிருந்து இலங்கை திரும்ப 25வரை அவகாசம்

கொழும்பு, ஜூன் 17
சவூதி அரேபியாவில் நுழைவிசைவு இன்றித் தங்கியிருக்கும் இலங்கையர்கள் எதிர்வரும் 25ஆம் திகதிவரை நாடு திரும்ப முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதிமுதல் இந்த மாதம் 25ஆம் திகதிவரையில் நுழைவிசைவு இன்றி தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாடு திரும்ப பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி இது வரையில் சுமார் 3500 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். நுழைவிசைவு இன்றித் தங்கியிருக்கும் ஏனைய இலங்கையர்களும் இந்தப் பொது மன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி சவூதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.
பொதுமன்னிப்புக் காலத்தின் பின்னர் நுழைவிசைவு இன்றி தங்கியிருப்போர் கைதுசெய்யப்பட்டால் கடுமையான தண்டனைகளை அனுபவிக்க நேரிடும் எனச் சவூதி அரசு எச்சரித்துள்ளது. (கு-ய)

# இலங்கையில் இனவாதிகள் என எவருமே இல்லையாம்!



கொழும்பு, ஜூன் 17
இலங்கையில் இனவாதிகள் என எவருமே இல்லை. கடும்போக்குவாதத் தலைவர்களும், மேற்குலக நாடுகளுமே இனவாதத்தைத் தூண்டி வருகின்றன என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமகே கூறியுள்ளார்.
அவர்மேலும்தெரிவித்ததாவது:
இந்த நாட்டில் இப்போது சிங்கள, முஸ்லிம் மக்களிடையே அசாதாரண நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.
இதை நாங்கள் மகிந்தவின் தலைமீதோ அல்லது ரணிலின் தலைமீதோ அல்லது மைத்திரியின் தலை மீதோ போடுவது பொருத்தமான தல்ல. இதை எப்படி நிறுத்த முடியும் என்பது பற்றியே சிந்திக்க வேண்டும்.
1915இல் சிங்களமுஸ்லிம் கலவரம், 83 ஜூலை கலவரம் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட 30வருடப் போர் என எமது நாடு இனவாதம் காரணமாக அழிவையே சந்தித்தது.
இறுதியில் 2009 இல் தான் எல்லாம் முடிவுக்கு வந்தன. வரலாற்று நெடுகிலும் நாம் மோசமான அனுபவத்தையே கொண்டுள்ளோம்.
இந்த நாட்டில் எவரும் இனவாதிகள் அல்லர். அரச சார்பற்ற நிறுவனத்தினர், கடும்போக்குவாதத் தலைவர்கள், சில வேளைகளில் அரசில் உள்ளவர்களும் மற்றும் மேற்கு நாடுகளே இனவாதத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.
இந்த நான்கு பிரிவினர்தான் இனவாத செயற்பாடுகளுக்குக் காரணம் - என்றார். (கு-ய)

# திவிநெகும நிதிமோசடி வழக்கு நவம்பரில்; பசிலிடம் விசாரணை

கொழும்பு, ஜூன் 17
முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு எதிரான திவிநெகும நிதிமோசடி வழக்கு நவம்பர் 13ஆம் திகதிமுதல் தினந்தோறும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனக் கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.
கடந்த அரச தலைவர் தேர்தல் காலத்தில் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான 2கோடி 94லட்சம் ரூபாவை பயன்படுத்தி மகிந்த ராஜபக்சவுக்காக பசில், தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார் எனக் குற்றச்சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கே இவ்வாறு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கித்சிறி ரணவக்கவும் மேற்படி வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-ய)



# அம்பாந்தோட்டை துறைமுக வழக்கு; 30இல்விசாரணை

கொழும்பு, ஜூன் 17
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்குக் குத்தகைக்கு வழங்கும் விவகாரத்தை எதிர்த்து உயர்நீதிமன்றில் கூட்டு எதிரணி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு எதிர்வரும் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.
ஈவா வனசுந்தர, பி.பீ அளுவிகார மற்றும் சிசிர ஜே.டி ஆப்ரூ ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில், இந்த மனு நேற்றுமுன்தினம் விசாரணை எடுத்துக்கொள்ளப் பட்டது.
புதிதாக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சராக பதவியேற்றுள்ள மகிந்த சமரசிங்கவிடம் இருந்து அறிவுறுத்தலைப் பெறுவதற்குக் கடந்த 29 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம் மேலதிக கால அவகாசத்தைக் கோரியிருந்தது.
சீனாவுக்கு வழங்க வேண்டிய கட்டணச் செலுத்தும் வகையில் அம்பாந்தோட்டையில் முதலீட்டு ஊக்குவிப்புக்காக 15ஆயிரம் ஏக்கர் காணியை சீனாவுக்கு வழங்கும் உடன்படிக்கைக்கு எதிராக முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-ய)

# இனவாதிகள் எந்த உருவில் வந்தாலும் விடமாட்டோம்

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன்17
நாட்டில் இனவாதத்தைத் தோற்றுவிக்க முயற்சிப்பவர்கள் எந்த உருவில் வந்தாலும் அவர்களுக்குஎதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசை விமர்சித்த ஊடகவியலாளர்களை வெள்ளை வானில் கடத்திச்சென்று, கொலை செய்த காலத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் ஊடகசுதந்திரத்தை நிலைநாட்டியுள்ளோம்.
ஆனால், அதனை ஏற்படுத்திய அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனதான் இன்று அதிகமான விமர்சனங்களுக்கு உள்ளாகின்றார். அதற்காக நாம் முன்னைய கலாசாரத்துக்குச் செல்லமாட்டோம். ஆனால், தேர்தலில் தோற்ற பழைய அவதாரங்கள், பழைய பிரச்சினைகளை மீண்டும் தோற்றுவித்து இனவாதத்தை தூண்ட முயற்சிக்கின்றன. அவ்வாறான பிரிவினைவாதிகளுக்கு எதிராக நாம் ஒன்றிணைய வேண்டும்.
பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றவர்கள், தொப்பி அணிந்துவந்தால் என்ன, காவியுடை தரித்து வந்தால் என்ன அவர்களுக்கு எதிராகச் சட்டத்தை பயன்படுத்தி நடவடிக்கைஎடுத்து புதுயுகத்தை ஏற்படுத்துவோம்- என்றார். (கு-ய)

# மரண அறிவித்தல்

மலர்வு
27
.
09
.
1940



உதிர்வு
15
.
06
.
2017

## திருமதி கமலாம்பிகை பாலசிங்கம்

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், 42, முத்தயன்குளம், செட்டிகுளத்தை வசிப்பிடமாகவும், தற்போது இல.44, திருநாவற்குளத்தில் வசித்து வருபவருமாகிய திருமதி க்மலாம்பிகை பாலசிங்கம் 15.06.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமநாதன் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலசிங்கம் (ஓய்வுநிலை கிராம சேவகர் - செட்டிகுளம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் சிவநாயகமூர்த்தி (ஓய்வுநிலை வட்டாரக்கல்வி அதிகாரி, கனடா), பராசக்தி (ஓய்வுநிலை ஆசிரியை), அன்னபூரணி (ஓய்வுநிலை தாதிய சகோதரி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், மனோகுமார் (கனடா), பவானி (கனடா), வசந்தகுமார் (தபாலகம் - வவுனியா), வசந்தினி (ஆசிரியை - தம்பனைச்சோலை அ.த.க.பாடசாலை - வவுனியா), பிரசாந்குமார் (கனடா), சிவகுமார் (முகாமையாளர் - காப்புறுதி நிறுவனம் -வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விமலாதேவி (கனடா), விக்கினேஸ்வரன் (கனடா), சுபாஜினி (ஆசிரிய ஆலோசகர் - வவுனியா வடக்கு), அஜந்தா (கனடா), சத்தியானந்தம் (ஆசிரியர் - கிளிநொச்சி மத்திய கல்லூரி), துதிப்பிரியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வவுனியா தெற்கு பிரதேசசபை) ஆகியோரின் அன்பு மாமியும், கபிசன், மீனுஷா, டிலைஸன், நுஷானி, சுபாங்கன், டிசாங்கன், துளசிகன், அரேசிகன், ஆரண்யா, ஹரிராம், ஹாசினி, ஆரபி, மாதுஸ்ன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல.44, திருநாவற்குளம், வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தினியார் மகிழங்குளம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.44, இரண்டாம் ஒழுங்கை,
திருநாவற்குளம்,
வவுனியா.

தகவல்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்

024 222 2945



பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள குடியிருப்பில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட தீ விபத்தால் 17பேர் உயிரிழந்துள்ள நிலையில் அவர்களுக்குக் குடியிருப்பின் அருகாமையில் உள்ள இடங்களில் அஞ்சலி செலுத்தப்படுகிறது. (ம)

## மெக்சிக்கோவில் நிலநடுக்கம்

மெக்சிக்கன் சிற்றி, ஜூன் 17
மெக்சிக்கோவின் சியாஸ் மாநிலத்தில் நேற்று முன்தினம் நில அதிர்வு உணரப்பட்டது. இதில் இருவர் உயிரிழந்தனர்.




இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7 அலகுகளாகப் பதிவானது என்று அமெரிக்க புவியியல்சார் ஆய்வு மையம் தெரிவித்தது.
கட்டடங்கள் குலுங்கி சேதமடைந்தன. வாகனங்கள் மீது மரங்கள் சாய்ந்து விழுந்தன.
பல இடங்களிலும் மின்சாரம் துண்டிக் கப்பட்டது. இருவர் உயிரிழந்தனர். சிலர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
இன்னும் ஓரிரு தினங்களில் மிட்புப் பணிகள் முழுமையடையும் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## அ.தி.
## ஆதிக்
## தினக



சென்னை, ஜூன் 17
அ.தி.மு. கழகத்தில் மீண்டும் ஆதிக்கம் செலுத்த தினகரன் எத் தனிக்கிறார் என்று இந்திய ஊட கங்கள் பலவும் நேற்றுச் செய்தி வெளியிட்டன. அ.தி.மு. கழகத் தின் முகமாக மாறுவதற்குத் தினகரன் திட்டமிட்டுள்ளார் அது தொடர்பான காய்நகர்த்தலை யும் அவர் தற்போது ஆரம்பித் துள்ளார் என்று அவை மேலும் குறிப்பிட்டன.
இரட்டை இலைச் சின்னத்தைக் கைப்பற்றுவதற்கு இந்தியத் தேர் தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார் என்ற குற் றச்சாட்டில் தினகரன் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார். அவரது குற்றம் டெல்லி பொலிஸாரால் உறுதிப் படுத்தப்பட்டது. இதனால் தினக ரனையும், சசிகலாவையும்



## சோமாலியா தாக்குதலில் 31 பேர் சாவு

மொகதீசு, ஜூன் 17
சோமாலிய தலைநகர் மொகதீசுவில் உள்ள பிரபல உணவு விடுதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 31 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
கார்க் குண்டுத் தாக்குதலை அடுத்து இராணுவச் சீருடையில் விடுதிக்குள் நுழைந்த ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 31 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அல் சபாப் அமைப்பு தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது. இராணுவம் நடத்திய பதில் தாக்குதலில் 5 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். (ம)

# லண்டன் குடியிருப்பில் தீ உயிரிழப்பு 17ஆக உயர்வு

லண்டன், ஜூன் 17
பிரிட்டனின் தலைநகர் லண்டனில் உள்ள குடியிருப்பு ஒன்றில் கடந்த புதன்கிழமை (இலங்கை நேரப்படி 5 மணியளவில்) ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12ஆக உயர்வடைந்தது.
மேற்கு லண்டனில் உள்ள குடியிருப்புத் தொகுதியான கிரன்பெல்லிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.
இரண்டாம் மாடியில் ஏற்பட்ட தீ மிகக் குறுகிய நேரத்துக்குள் கட்டடத்தின் 24 மாடிகளுக்கும் பரவியது என்று சொல்லப்படுகிறது. தகவல் கிடைத்து சில நிமிடங்களில் களத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்குக் கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். 40 வாகனங்களும் 200 தீயணைப்புப் படையினரும் இணைந்து கிட்டத்தட்ட 8 மணிநேரப் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.
ஐவர் உயிரிழந்தனர் என்று முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. 12 பேர் உயிரிழந்தனர் என்று நேற்று முன்தினம் இரண்டாம் கட்டத் தகவல் வெளிவந்தது. நேற்று வெளியான உத்தியோகபூர்வ மூன்றாம் கட்டத் தகவலின்படி உயிரிழப்பு எண்ணிக்கை 17ஆனது என்று சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 70 பேர் தீவிர காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடம் என்று சொல்லப்படுகிறது. குடியிருப்புத் தொகுதியில் இருந்த 120 வீடுகள் முழுவதுமாக எரிந்து சாம்பராயின.
இந்த அசம்பாவிதம் ஏற்பட்ட போது கட்டடத்தில் கிட்டத்தட்ட 600 பேர் இருந்தனர். இது தொடர்பான கணக்கெடுப்புக்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. (ம)




# நிலநடுக்கத்தை தாங்கக்கூடிய வீடுகள் ஜப்பானில் விற்பனை



டோக்கியோ, ஜூன் 17
நிலநடுக்கத்தைத் தாங்கும் வல்லமையுள்ள வீடுகளை ஜப்பான் கடந்த சில வருடங்களாக் கட்டத்திட்டமிட்டிருப்பினும், தற்போது அவை வெற்றிகரமாகக் கட்டி முடிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்பட் டுள்ளன. இத்தகைய வீடுகள் றெஜிபோர்ம் போன்ற ஓர் பொருளால் கட்டப்படுகின்றன. ஆனால் அவை தொழில்நுட்பத்தில் மேம்பட்டவை. வலிமையானவை, நிலநடுக்கத்தைத் தாங்கக்கூடியவை, விலை குறைந்தவை வெப்பத்தைக் கட்டுப்படுத்தக் கூடியவை. மிக வேகமாகவும் எளிதாகவும் வீட்டைக் கட்டி முடித்துவிட முடியும். கடந்த பத்து ஆண்டுகளாகவே இத்தகைய வீடுகள் கட்டப்பட்டு வந்தாலும் மக்கள் அவற்றைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. தற்போது மக்களின் கவனம் இந்த வீடுகள் மீது திரும்பியிருக்கிறது. வீட்டின் எடை 80 கிலோ. பசையால் அரைக் கோள வடிவில் வீடுகள் கட்டப்படுகின்றன. ஒரே வாரத்தில் மூன்றுமனி தர்களால் இந்த வீட்டை உருவாக்கிவிட முடியும். இந்த வீடு துருப் பிடிப்பதில்லை, கரையான்களால் அரிக்கப்படுவதில்லை, நீண்ட காலம்உழைக்கக்கூடியது. வீட்டுக்குள் குளிர்ச்சி நிலவுவதால் குளிர்சாதனப் பயன்பாடும் குறைந்து விடுகிறது. 44 லட்சத்திலிருந்து 55 லட்சம் வரை வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளனவாம் என்று ஜப்பான் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. (ம)

# தி.மு. கழகத்தில்
# திக்கம் செலுத்த
# னகரன் வியூகம்



17
தில் மீண்டும்
த தினகரன் எத்
று இந்திய ஊட
நேற்றுச் செய்தி
அ.தி.மு. கழகத்
மாறுவதற்குத்
ட்டுள்ளார் அது
யநகர்த்தலை
போது ஆரம்பித்
அவை மேலும்

சின்னத்தைக்
த இந்தியத் தேர்
துக்கு லஞ்சம்
றார் என்ற குற்
ரன் கடந்த சில
முன்னர் கைது
அவரது குற்றம்
ரால் உறுதிப்
இதனால் தினக
கலாவையும்


அதாவது கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் துணைப் பொதுச் செயலாளரை ஒதுக்கி வைத்துவிட்டு ஆட்சியை நடத்த எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர் முடிவெடுத்தனர். இதையடுத்து தானாகவே அரசியலில் இருந்து விலகும் முடிவை தினகரன் அறிவித்தார்.

தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் தினகரன் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சிறையிலிருந்து வந்ததும் அவர் கட்சிச் செயற்பாடுகளில் துரிதமாக ஈடுபட்டு வருகிறார். கட்சியில் இருந்து தான் ஒதுங்கவில்லை. என்னை நீக்கும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கு மட்டுமே உண்டு. என்று ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். தினகரனுக்கு 34 சட்டமன்ற உறுப்பி

**சிறையிலிருந்து வந்ததும் அவர் கட்சிச் செயற்பாடுகளில் துரிதமாக ஈடுபட்டு வருகிறார். கட்சியில் இருந்து தான் ஒதுங்கவில்லை. என்னை நீக்கும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கு மட்டுமே உண்டு. என்று ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். தினகரனுக்கு 34 சட்ட மன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.**

னர்கள் தமது ஆதரவைத் தெரிவித்தனர். அந்த 34 சட்டமன்ற உறுப்பினர்களும் அ.தி.மு. கழகத்தில் தினகரனுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவைத் தினகரனின் தலைமையில் நடத்த வேண்டும் என்று தற்போது போர்க் கொடி தூக்கியுள்ளனர். இவர்களை இயக்குபவர் தினகரனே என்று இந்திய ஊடகங்கள் சாடுகின்றன.

ஒரு புறத்தில் இவ்வாறான நகர்வுகள் நீண்டுகொண்டு செல்ல மறுபுறத்தில் ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களுடன் அவ்வப்போது ஆலோசனை நடத்தி வருகிறார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (ம)




# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
# விலைமனுக் கேள்விக்கான அழைப்பு
# சமைத்த உணவு, உலர் உணவு விநியோகம் வழங்கல் சேவைகளுக்கான பெறுகைகள் - 2017 / 2018

**திணைக்கள பெறுகைகள் குழு தகுதியான, தகைமைவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் வழங்கல் சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.**

**1. பிரதேச வைத்தியசாலைகளுக்கான சமைத்த உணவு விநியோகம்**

| பெறுகை இல | வைத்தியசாலைகள் | பெறுகை இல | வைத்தியசாலைகள் |
|---|---|---|---|
| DH/CM /2017/ 01 | பி.வை. அனலைதீவு | DH/CM /2017/ 09 | பி.வை. வரணி |
| DH/CM /2017/ 02 | பி.வை. காரைநகர் | DH/CM /2017/ 10 | பி.வை. கொடிகாமம் |
| DH/CM /2017/ 03 | பி.வை. நயினாதீவு | DH/CM /2017/ 11 | பி.வை. குருநகர் |
| DH/CM /2017/ 04 | பி.வை. வேலணை | DH/CM /2017/ 12 | பி.வை. மானிப்பாய் |
| DH/CM /2017/ 05 | பி.வை. வட்டுக்கோட்டை | DH/CM /2017/ 13 | பி.வை. கோண்டாவில் |
| DH/CM /2017/ 06 | பி.வை. மருதங்கேணி | DH/CM /2017/ 14 | பி.வை. அளவெட்டி |
| DH/CM /2017/ 07 | பி.வை. பண்டத்தரிப்பு | DH/CM /2017/ 15 | பி.வை புங்குடுதீவு |
| DH/CM /2017/ 08 | பி.வை. கரவெட்டி | DH/CM /2017/ 16 | பி.வை. அம்பன் |
| | | DH/CM/2017/17 | பி.வை.இளவாலை |

* ஒவ்வொரு வைத்தியசாலைக் கேள்விக்கும் மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 500/=வும். உத்தரவாத முறியாக ரூபா10,000/= வும் செலுத்தப்பட வேண்டும்.

2. ஆதார வைத்தியசாலைகள்; பிரதேச வைத்தியசாலைகளுக்கான உலர்உணவு விநியோகம்

| பெறுகை இல | வைத்தியசாலைகள் | உத்தரவாத முறி |
|---|---|---|
| D/JF/2017/01 | ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை | 200000.00 |
| D/JF/2017/02 | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 80000.00 |
| D/JF/2017/03 | ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி | 80000.00 |
| D/JF/2017/04 | ஆதார வைத்தியசாலை ஊர்காவற்றுறை | 20000.00 |
| D/JF/2017/05 | பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறை | 30000.00 |
| D/JF/2017/06 | பிரதேச வைத்தியசாலை சங்கானை | 25000.00 |
| D/JF/2017/07 | பிரதேச வைத்தியசாலை நெடுந்தீவு | 15000.00 |
| D/JF/2017/08 | பிரதேச வைத்தியசாலை அச்சுவேலி | 20000.00 |
| D/JF//2017/09 | பிரதேச வைத்தியசாலை கோப்பாய் | 15000.00 |

* ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கமுடியாத கேள்விபத்திர பணமாக ரூபா 1,000.00 செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு உலர்உணவு பெறுகைக்கும் மேலே பட்டியலில் காட்டப்பட்டுள்ள தொகைக்கான பிணைப்பொறுப்பு பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

01. விலைக்கேள்விதாரர் மேற்படி சேவைகளுக்கான ஒருநபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.

02. விலைக்கேள்விதாரர் தமது சேவையினை தடங்கலின்றி மேற்கொள்வதற்கு யாழ் மாவட்டத்தில் ஆகக்குறைந்தது கிளை நிறுவனமொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

03 தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் அல்லது தொலைபேசி இல (021 222 2278/4557 Ext 20) ஊடாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

04. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையை காசாகச் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில 19.06.2017 தொடக்கம் 07.07.2017 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

05. விலைக்கேள்விகள் 10.07.2017 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர்(நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். **"Supply of .............................. 2017, Name of the Institution ................, Reference No. ......................"** என்ற விவரம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும் .சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்விநேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.

06. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.

07. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**572/3, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# உண்மையைச் சொன்னதால் கோபம் கொள்வது தர்மமா?

வடக்குமாகாணசபை அமைச்சர்கள்மீதானகுற்றச்சாட்டு விசாரணை தொடர்பான பிரச்சினை திசைமாறி முதலமைச்சர்குறித்த விவகாரமாக விகாரமாகியிருக்கிறது. பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க எடுக்கப்பட்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை. அத்தகைய முயற்சிகளுக்கு ஆரம்பத்தில் சாதகமான சமிக்ஞைகள் கிடைக்கப்பெ ற்றதாகத் தகவல்கள் வெளியிடப்பட்டாலும் கடைசியில் எந்த இணக்கமும் எட்டப்படவில்லை.

இதற்கிடையில் முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்து 15 உறுப்பினர்கள் நம்பிக்கைக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். அதற்கு மேலாக அவருக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக கடையடைப்பும் ஊர்வலமும் நடத்தப்பட்டிருக்கிறது.

அவற்றைப் பார்த்த பின்னர் உரையாற்றிய முதலமைச்சர் ‘‘எனக்காகத் திரண்டுள்ள மக்கள் எழுச்சியைப் பார்க்கும் போது நான் செல்லும் பாதை சரியானது என்று உணர்கின்றேன்’’ எனத்தெரிவித்திருக்கிறார். எனவே அவர் இனி தனது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வருவார் என எதிர்பார்க்க முடியாது.

அமைச்சர்களுக்கு எதிரான விசாரணை அறிக்கையின் அடிப்படையில் ப.சத்தியலிங்கம் மற்றும் பா.டெனீஸ்வரன் ஆகியோர் மீதான நடவடிக்கையை நிபந்தனையற்ற ரீதியில் திரும்பப் பெறாமல் இணக்கம் ஒன்றைப் பரிசீலிக்க தமிழ் அரசுக் கட்சியும் தயாரில்லை என்பதே கள நிலை.

இரு தரப்பினரும் இப்படி மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் நிலையில் வடக்கு மாகாண சபையில் விரைவில் ஒரு பலப்பரீட்சை நடைபெறுவதை எதிர்பார்க்கலாம்.

தமிழர்களின், தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமையை ஓங்கவைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு விம்பமான விக்னேஸ்வரன் இன்று அதே ஒற்றுமையை சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் ஆளுமையாக மாற்றமடைந்திருப்பதை நினைத்துத் தமிழர்கள் தமது விதியைத்தான் நொந்துகொள்ள வேண்டும்.

தமிழர்களின் அரசியலை ஒற்றுமைப்படுத்துவதற்குப் பதிலாகத் தன்னுடைய குழப்பகரமான உள்நோக்கம் கொண்ட நீதி, நிர்வாக நடைமுறைகள் மூலம் விக்னேஸ்வரன் அதனை மேலும் மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியிருக்கிறார். அதனூடாக அவர் தனது அரசியல் ஆளுமையின் போதாமையையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தனது முதலமைச்சர் அதிகாரத்திற்குள்ளேயே கையாண்டு தீர்க்கவேண்டிய ஒரு பிரச்சினையை, பூதாகரமாக்கி வளர்த்துவிட்டவர் அவர். ஆனால் இப்போது பிரச்சினைக்குக் காரணம் பத்திரிகை ஒன்று அந்த விசாரணை அறிக்கையை வெளியிட்டமைதான் என்று அவர் பேச விழைந்திருப்பது அவர் நிலைதடுமாறியிருக்கிறார் என்பதைப் பட்டவர்த்தனமாக்குகிறது.

தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தெற்கு அரசியல் தலைவர்கள் நியமித்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டன என்பதைக் கடந்த காலங்களில் குற்றமாகக் கண்ட, அதனைப் பல்வேறு வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமும் குற்றச்சாட்டாக முன்வைத்த விக்னேஸ்வரன் இப்போது தான் நியமித்த விசாரணைக் குழுவின் அறிக்கையை வெளியிட்டதற்காகப் பத்திரிகையைச் சாடுகிறார் என்பது வேடிக்கையாக இருக்கிறது. “ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி பெண்ணே!” என்பதைப் போன்று இருக்கிறது. மட்டுமல்லாது அவரது நேர்மையையும் அவரது இந்த நிலைப்பாடு கேள்விக்கு உள்ளாக்குகிறது.

விசாரணை அறிக்கையை வெளியிட்டதற்காகப் பத்திரிகையைக் குற்றம் காணுவதன் மூலம், விசாரணை அறிக்கையை மறைத்து, அமிழ்த்திவிடும் உள்நோக்கத்தையே முதலமைச்சர் கொண்டிருந்தார் என்ற சந்தேகம் எழுகிறது. அவர் மறைத்துவிட முயன்றதை அம்பலப்படுத்தியதால் தானா பத்திரிகை மீது அவருக்கு இத்தனை கோபம்?

நேர்மை, நீதி, பொறுப்புக்கூறல் என்று அவர் தெரிவிப்பவற்றுக்கும் அவரது இந்தச் செயலுக்கும் இடையே எந்தத் தொடர்பையும் காணமுடியவில்லையே! மக்களிடம் இருந்து இவர்கள் இன்னும் எதையெல்லாம் மறைக்க முயல்வார்களோ!

# ஆளத் தெரிந்தவர்கள் என்பதை உலகுக்கு காட்டுவோம்

சேரலாதன்

தமிழர்கள் ஆளத் தெரியாதவர்கள் என்று கூறப்படுவதை மெய்ப்பிக்கும் வகையில் வடக்கு மாகாணசபையில் சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள், முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆகியவை இவற்றுள் முக்கியமானவையாகும்.

ஆயுதக் குழுக்கள் பலம்பெற்று விளங்கிய காலகட்டம் வரலாற்றில் முக்கியமானது. தமது இனத்தின் மீட்சிக்காக இளைஞர்கள் உயிரைத் துச்சமென மதித்துப் போராடிய மகத்தான காலம் அது. ஆனால் அதுவும் நிலைத்து நிற்கவில்லை. இவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு இறுதியில் மோதிக் கொண்டனர். ஒருவரையொருவர் அழிப்பதற்கும் இவர்கள் தயங்கியதில்லை. இறுதியில் விடுதலைப் புலிகளே எஞ்சி நின்றனர். அவர்களுக்குள்ளும் காட்டிக் கொடுப்பவர்கள் தோன்றத்தான் செய்தனர். இறுதிப் போரின் போது இது தெளிவாகத் தெரிந்தது. இறுதியில் விடுதலைப்புலிகளும் அடங்கிப் போக வேண்டியதாயிற்று. தமிழர்கள் நிர்க்கதியானதொரு நிலைக்குள் தள்ளப்பட்டு விட்டனர்.

### தமிழ் நாட்டு அரசியலும் குழப்ப நிலையில்தான்.

தமிழ்நாட்டை எடுத்துப் பார்த்தாலும் அங்கு நிலவுகின்ற அரசியல் சூழ்நிலை மற்றவர்களால் கேலி செய்யப்படும் அளவுக்கு மோசமாகக் காணப்படுகின்றது. இவையெல்லாம் தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பவையல்ல. கல்தோன்றி மண்தோன்றாத காலத்துக்கு முன்பே தோன்றியது தமிழினம் எனவும் ஆண்ட பரம்பரையும் தமிழர்களே எனவும், நாம் பெருமையாகக் கூறுகின்றோம். ஆனால் அதற்கான அடையாளங்களையெல்லாம் இழந்து அடிமைப்பட்ட இனமாகத் தமிழினம் இன்று மாறியுள்ளது. தமது சிறிய தேவைகளைக் கூட ஆட்சியாளரிடம் கெஞ்சிப் பெறவேண்டிய அவலநிலையும் காணப்படுகின்றது. இந்த இழிநிலை பிறரால் மட்டும் ஏற்படுத்தப்பட்டதல்ல. எமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்டதுதான் இது.

தமிழர் பகுதிகளில் உள்ளூராட்சிச் சபைகள் நிர்வகிக்கப்பட்ட விதம் குறித்து எவருமே திருப்தியடைய முடியாது. ஆளும் தரப்புக்குள்ளேயே மோதல்; குழப்பநிலை. ஒருவரையொருவர் கவிழ்த்து விடுவதிலேயே அங்கு கவனம் செலுத்தபட்டதேயொழிய, மக்களின் தேவைகள் உரிய வகையில் கவனிக்கப்படவில்லை. உள்ளூராட்சி மன்றங்களின் செயல்களால் மக்கள் வெறுப்பின் உச்சத்துக்கே சென்றுவிட்டனர். அடுத்த தேர்தல் வரும் போது இவர்களைக் கவனித்துக் கொள்வோமெனக் கறுவியபடி இவர்கள் காத்திருக்கின்றனர்.

வடக்கு மாகாண சபையிலும் மக்கள் திருப்தி கொண்டவர்களாகக் காணப்படவில்லை. அங்கும் உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்றதைப் போன்ற நிகழ்வுகளே இடம்பெற்று வருகின்றன. அதிலும் சில மாகாணசபை உறுப்பினர்கள் நடந்து கொள்ளுகின்ற விதம் வெறுப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. இவர்களை வேட்பாளர்களாகத் தெரிவு செய்த கட்சிகளின் தவறு இன்று மக்களைப் பாதித்து வருகின்றது. எந்த மாதிரியான வேட்பாளர் தெரிவிலும் வேட்பாளர் ஒருவரின் ஒழுக்கம், நன்னடத்தை, நம்பகத்தன்மை, நேர்மை, மக்கள் சேவையில் காட்டுகின்ற ஆர்வம் ஆகியவை கவனிக்கப்படல் வேண்டும். ஆனால் இவையாவுமே இன்று புறமொதுக்கி வைக்கப்படுகின்றன. தகுதியில்லாதவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இதன் விளைவை மக்கள் தான் அனுபவிக்கின்றனர்.

### தமிழர்களுக்கென நாடொன்று உலகில் எங்குமில்லை

இன்று உலகம் முழுவதிலும் சுமார் 11 கோடி தமிழர்கள் பரந்து வாழ்கின்றனர். ஆனால் இவர்களுக்கெனத் தனியான நாடு எதுவும் இல்லை. எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அங்கெல்லாம் சிறுபான்மையினர் என்ற வகையில்தான் இவர்களின் வாழ்வு அமைந்து காணப்படுகின்றது. சில நாடுகளில் மோசமான வாழ்க்கையை வாழ வேண்டிய கட்டாயத்தில் இவர்கள் உள்ளனர். இலங்கையில் தமிழர்களுக்கெனத் தனிநாடு ஒன்று அமையக்கூடிய சூழ்நிலையொன்று கனிந்து வந்தது. ஆனால் அதுவும் நிறைவேறாமலே கலைந்து போனது. கலைந்து போனது என்பதை விடக் கலைக்கப்பட்டது என்பது தான் உண்மை.

### மன்னராட்சியில் தமிழ் சிறப்புற்றது

தமிழர்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் சேர, சோழ, பாண்டியர்களின் காலம் மகத்தானது.




இந்த மூவேந்தர்களும் தமிழைப் போற்றி வளர்த்ததோடு தமிழர்களையும் தலைநிமிர்ந்து நிற்க வைத்தனர். மூவேந்தர் காலம் தமிழர்களின் பொற்காலமாகவே திகழ்ந்தது. அந்நியரின் வருகையால் மன்னர்களின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்தது.

ஆளத் தெரியாதவர்கள் அவப்பெயரைத் துடைப்பதற்குத் தமிழர்கள் அனைவரும் இதய சுத்தியுடன் முன்வர வேண்டும்.

தமது இனத்தின் மீது படிந்துள்ள களங்கத்தைப் போக்குவது ஒவ்வொரு தமிழ் மக்களதும் கடமையாகும். உள்ளூராட்சித் தேர்தல்கள் மிக விரைவில் இடம்பெறவிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதில் ஆரம்பித்துப் படிப்படியாகத் தமிழர்களின் ஆளும் திறமையை வெளிக்கொணர்வோம். எப்போதுமே ஆளப்படும் இனமாக வாழ்வதில் பெருமை ஒன்றுமேயில்லை.

கடந்த காலத்தின் கசப்பான சம்பவங்களை ஒரு மூலையில் சுருட்டி வைத்துவிட்டு புதியவற்றைத் தொடர்வதற்கான பாதையில் அடியெடுத்து வைப்போம். நாம் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் எமது இனத்தினது எதிர்காலச் சுபீட்சத்தை நோக்கியதாக இருக்க வேண்டும். நாம் ஆளப் பிறந்தவர்கள்; ஆளத் தெரிந்தவர்கள் என்ற நினைவு இருந்தாலே போதும், எல்லாமே சரியாகிவிடும்.



# இனவாதிகளை ஒடுக்குவதில் அரசு தாமதிப்பது ஏன்?

இந்துமதி

இனவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அரசிடமிருந்து போதிய ஆதரவு கிடைப்பதில்லை. இவ்வாறு தெரிவித்திருப்பவர் சாதாரண ஒருவரல்ல. நாட்டின் பாதுகாப்பையும் அமைதியையும் பேணுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பொலிஸ் திணைக்களத்தின் தலைவரான பொலிஸ்மா அதிபரே மனம் திறந்து தெரிவித்த கருத்து இது.

அவரது கூற்றின் பிரகாரம் நாட்டின் தற்போதைய நிலையை எம்மால் அனுமானிக்க முடிகின்றது. இந்த நாட்டைப் படுகுழிக்குள் தள்ளியதில் இனவாதிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. தமது நோக்கம் நிறைவேறுவதை மட்டுமே இனவாதிகள் நோக்காகக் கொண்டிருப்பார்கள். நாடு சீரழிவதையோ அல்லது இங்கு வாழ்கின்றமக்கள் அவலங்களுக்கு உள்ளாகுவதையோ இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. இனவாதம் ஒரு கொடிய நோயைப் போன்றது. இதைக் குணப்படுத்தவே முடியாது. இந்த நாட்டின் பெரும்பான்மையின மக்கள் நாட்டின் மொத்தச் சனத்தொகையின் சுமார் 70 வீதத்துக்கும் அதிகமாகவுள்ளனர். இவர்களுக்கு அடுத்தபடியாகத் தமிழர்கள், முஸ்லிம்கள் அடுத்தடுத்த இடங்களை வகிக்கின்றனர். தமிழ்பேசும் மக்கள், இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் தமிழர்கள் மற்றும் இந்தியாவிலிருந்து வந்து குடியமர்ந்த தமிழர்களென இருவகைப்படுகின்றனர். இவர்கள் எல்லோரும் தமிழ்மொழியையே பேசினாலும் பேச்சுவழக்கில் வேறுபாடு காணப்படுகின்றது. கலாசாரம், பண்பாடுகள் என்பவற்றிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனால் இவர்கள் இரண்டுபிரிவினராகவே கணிக்கப்படுகின்றனர். இவர்களை விட மலாயர் பறங்கியர் என்ற மக்கள் பிரிவினரும் இங்கு வாழ்கின்றனர். ஆரம்பத்தில் பெரும்பான்மையினத்தவர்களுக்கும், பூர்வீகத் தமிழர்களுக்கும் இடையில்தான் இனவாத மோதல்கள் ஏற்பட்டன. இதனால் பாதிப்புக்களை எதிர்கொண்டவர்கள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் தமிழர்கள்தான்.

**பெரும்பான்மையினர் மத்தியில் வேரூன்றிய இனவாதக் கருத்துக்கள்**

தமிழர்கள் சிறுபான்மையினராக இருப்பதால் இத்தகையதொரு நிலையை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. பாதிக்கப்பட்டவர்கள் என்பதால், தமிழர்கள் மத்தியிலும் இனவாதக் கருத்துக்கள் வேரூன்ற ஆரம்பித்தன.

ஆனால் பெரும்பான்மையினர் மத்தியில் விதைக்கப்பட்ட இனவாத விதைகள் முளைத்து இன்று பெரும் விருட்சங்களாகக் காட்சியளிக்கின்றன. இவற்றை அழிப்பதற்கு எவருமே முன்வருவதில்லை. ஆனால் அவற்றுக்கு நீர் ஊற்றி வளர்ப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த நாட்டின் வந்தேறு குடிகள் என்ற கருத்து பெரும்பான்மையின மக்களிடையே பரப்பப்பட்டு வருகின்றது. வந்தேறு குடிகள் தாம் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே திரும்பிச் செல்ல வேண்டும் என்பதுபோன்ற இனவாதக் கருத்துக்கள் இனங்களுக்கு இடையிலான உறவில் விரிசல்களை ஏற்படுத்தி வருகின்றன. இத்தகைய கருத்துக்களை மூன்றாந்தர அரசியல் வாதிகள் வெளியிட்டால் அதை ஒதுக்கி வைத்து விட முடியும். ஆனால் தர்ம போதனைகளைப் போதித்து, மக்களின் மன அழுக்கைப் போக்க வேண்டிய பௌத்த மதத் துறவிகளின் வாயிலிருந்து இவை வெளிவருவதை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆண்டவனின் நாமத்தை எப்போதுமே உச்சரிக்க வேண்டிய இவர்களின் வாய்கள், சிறுபான்மையினருக்கு எதிரான கொலைவெறியுடன் கர்ச்சிப்பதை எவரால்தால் ஏற்றுக் கொள்ள முடியும்? சமீப நாள்களாக முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்செயல்கள் நாட்டில் பரவலாக இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இதற்குக் குறிப்பிட்டதொரு இனவாத அமைப்பின் மீது குற்றம் சுமத்தப்படு கின்றது.

> பெரும்பான்மையினர் மத்தியில் விதைக்கப்பட்ட இனவாத விதை கள் முளைத்து இன்று பெரும் விருட்சங்களாகக் காட்சியளிக்கின்றன. இவற்றை அழிப்பதற்கு எவருமே முன்வரு வதில்லை. ஆனால் அவற்றுக்கு நீர் ஊற்றி வளர்ப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த நாட்டின் வந்தேறு குடிகள் என்ற கருத்து பெரும்பான்மையின மக்களிடையே பரப்பப்பட்டு வருகின்றது


இந்த அமைப்பின் பொதுச் செயலாளரான தேரர் ஒருவர், தாம் கைது செய்யப்படுவதிலிருந்து தப்பிக் கொள்வதற்காகத் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றார். அவரைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்துவதற்கு அரசினால் முடியவில்லை என்பது கேலிக்குரியது. பொலிஸ்மா அதிபர் கூறியதை மெய்ப்பிப்பது போன்றும் இதுவுள்ளது.

**இனவாதத்தை எதுவிதத்திலும் அனுமதிக்க இயலாது**

பெரும்பான்மையோ,சிறுபான்மையோ எதுவாக இருந்தாலும் அங்கு இனவாதத்துக்கு இடமில்லை. இனவாதக் கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கு உச்சபட்சத் தண்டனை வழங்குகின்ற வகையில் நீதியுடன் தொடர்புடைய சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். உபகண்டம் என அழைக்கப்பட்ட இந்தியப் பெருநிலப்பரப்பு மூன்று நாடுகளாகப் பிரிவுபட்டமைக்கு இனவாதச் செயற்பாடுகளே காரணமாகின. இந்தியா ஒரே நாடாக இருந்தபோது இந்துக்களும் முஸ்லிம்களும் தமக்குள் அடிக்கடி மோதிக் கொண்டனர். உயிரிழப்புக்களும் அடிக்கடி ஏற்பட்டன. தேசபிதா மகாத்மாகாந்தி கொலை செய்யப்படுவதற்கும் இனவாதமே காரணமாகியது. மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் இன்றும்கூட இனவேறுபாடுகள் நிலவுகின்றன. வெள்ளை இனத்தவர்கள், கறுப்பின மக்களை வெறுத்து ஒதுக்கி வைக்கின்றனர். முன்னரைவிட இப்போது இதன் தீவிரம் குறைவு என்றபோதிலும், இனவாதம் முற்றாக ஒழிந்து விட்டதெனக் கூறமுடி வில்லை.

**இனவாதத்தை ஒழிக்க அரசு துணிச்சலுடன் செயற்படவேண்டும்**

இலங்கை அரசு இனவாதிகளுக்கு அஞ்சி நடுங்கும் வரை, இந்த நாட்டிலிருந்து இனவாதத்தை ஒழிக்கவே முடியாது. நாட்டின் தலைவிதி இனவாதிகளின் கரங்களில் சிக்கிக் கொண்டிருக்கும் வரையில் நாட்டுக்கு மீட்சி என்பதே கிடையாது. சகல இனத்தவர்களும் இந்த நாட்டின் குடிமக்களே என்ற உணர்வு மக்களின் மனங்களில் உருவாக்கப்பட வேண்டும். இனவாதிகள் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படல் வேண்டும். இனவாதம் என்ற சொல்லையே அகராதியிலிருந்து அகற்றிவிட வேண்டும். மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் இனவாதிகளை இல்லாமற் செய்யும் போதுதான் நாடு சுபிட்சம் அடையும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### தனியான பீடம் எமக்குவேண்டும்

எமது நாட்டுப் பல்கலைக்கழகங்களில் இந்து மதத்துக்கென்று ஒரு தனியான பீடம் இல்லையே என்ற ஆதங்கம் எழுந்துள்ள நிலையில், இரண்டாவது அனைத்துலகச் சைவமாநாடு அத்தகு கோரிக்கைக்கு மேலும் வலுச்சேர்த்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை உரிய கௌரவங்களைத் தனதாக்கி, 2017 ஏப்ரல் 21,22,24 ஆகிய மூன்று தினங்களில் பலருக்கும் சைவசமயத்தைச் சொந்தமாக்கி, கிராமங்களிலிருந்து சமயம் வீறுகொண்டு எழுவதற்கு இடமளித்து, பீடத்தின் அவசியத்தை கொழும்புக்கு வலியுறுத்தியமை பொருத்தமானதே. காங்கேசன்துறையிலிருந்து, கதிர்காமம் வரை இந்து சமயப் பீடமொன்றினது தேவையைச் சமூகம் வேண்டிநிற்பதன் மூலம் யாழ்ப்பாணம் தனது பெயரை நிலை நிறுத்தும்.


கே.எஸ்.சிவஞானராஜா

### சூழலுக்கு ஏற்ற ஆடை அணிதல் சிறப்புடைத்து

பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் எவருமில்லை. பிறப்பும் இறப்பும் எல்லா உயிர்களுக்கும் இறைவன் அருளியது. இறப்பு என்பது மிகவும் துயரமான நிகழ்வு. உறவை இழந்து துடிக்கும் உள்ளங்களுக்கு ஆறுதலையும் இரங்கலையும் தெரிவிப்பதற்குச் செல்லும் சில சகோதரிகள் திருமணம் மற்றும் களியாட்ட விழாவில் கலந்து கொள்ளச் செல்வது போன்று பகட்டான ஆடை அணிகலன்களோடு துக்கம் விசாரிக்க சாவீடுகளுக்கு செல்வது ஏற்புடையது அல்ல என்பது எனது கருத்து. மேலும் தமிழ்ப் பண்பாட்டின்படி கணவரின் இழப்பின் பின்னர் பொட்டு அணிவது தவிர்க்கப்பட வேண்டும். எமது சம்பிரதாயமும் வழமையும் அதுவே. ஆனால் இன்று சுமங்கலி பெண்கள், மரணச் சடங்குகளின் போது பகட்டாய் உடுத்தி நெற்றிப் பொட்டை தவற விடுவது ஏன்? வெளிர் நிறங்களில் ஆடைகளை தெரிவு செய்வதோடு சின்னதாய் பொட்டு இடுவது வரவேற்கக் கூடியதும் சோகம் நிறைந்த சூழலுக்கு ஏற்றதாகவும் அமையும் என்பது எனது கருத்து

எஸ்.சுப்பிரமணியம்
கல்வயல்

# பசுமைச் சக்தியை அபிவிருத்தி செய்வதற்கான செயற்றிட்டம் ஆரம்பம்



“பாவனையாளர்களுக்கு தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையான கடன் உதவி வழங்கப்படவுள்ளதுடன் செலுத்த வேண்டிய வங்கி வட்டியின் 50 சதவீதத்தினை அரசு வழங்குவதற்கான திட்டமிடலை மேற்கொண்டுள்ளது.”

இலங்கையில் பசுமைச் சக்தியை அபிவிருத்தி செய்வது தொடர்பிலான விசேட வேலைத்திட்டத்தின் கீழாக நாட்டில் உள்ள அனைத்து அரச நிறுவனங்களையும் சூரிய சக்தி பயன்பாட்டிற்கு மாற்றமுறச் செய்வதற்கான செயற்பாடுகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 2 ஆண்டுகாலப்பகுதியினுள் அனைத்து அரசநிறுவனங்களிலும் சூரிய சக்திப் பயன்பாடு உள்ளடங்கலான பசுமைச்சக்தி திட்டத்தின் வழியே சூழலுக்கு இயைபாக்கமான செயல்நிலைகளை மாற்றங்களின் ஊடாக உள்வாங்கிகொள்வதே அரசின் நோக்கமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமான மின்சக்தியை பயனுறுதியாக்கும் பாவனையாளர்கள் தங்களின் மின்சக்தித் தேவையை பசுமைச் சக்தித்திட்டத்திற்கு இயைபூக்கமாக மாற்றிக்கொள்வதற்கான சலுகைகளையும். வசதி வாய்ப்புக்களையும் அரசு வழங்குவுள்ளமை நோக்கத்தக்கது.

## இலங்கை வங்கியின் ஓய்வூதியப்பிரிவு வருடாந்தப் பொதுக்கூட்டம்

இலங்கை வங்கியின் ஓய்வூதியப் பிரிவு, ஓய்வூதிய நம்பிக்கை நிதியம், விதைவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம், சேமலாப நிதியம் மற்றும் ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் என்பனவற்றின் வருடாந்தப் பொதுக் கூட்டங்கள் இன்றையதினம் கொழும்பில் அமையப்பெற்றுள்ள இலங்கை வங்கியின் தலைமை கட்டடத்தில் காலை 9.00 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இது குறித்துக் கருத்துரைத்துள்ள அந்த நிதியங்களின் செயலாளர் செனவிரத்ன பண்டார, “நிகழ்ச்சி நிரல் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகள் என்பன இலங்கை வங்கியின் சகல கிளைகளிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. நிதியங்களின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். புதிய நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.” - என்றார்.

1934 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வங்கியானது ஆணைக்குழுவின் தலைவர் சேர். சொராப்ஜீ நரே வான்ஜீ பொகனவாலே என்பவரின் பரிந்துரைக்கமைவாக 1938 ஆம் ஆண்டின் இலங்கை வங்கிச் சட்டத்தின் கீழான அடிப்படைகளின் பிரகாரம் 1939 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை வங்கியானது தொழிற்பட ஆரம்பித்ததுடன் தற்போது நாட்டின் பல பாகங்களிலும் 500 இற்கும் மேற்பட்ட கிளைகளை நிறுவித் தனது சேவையை வினைத்திறனானமுறையிலேமேற்கொண்டுவரு [illegible] க்கது.



# இறப்பர் மூலப்பொருள் உற்பத்தியில் வீழ்ச்சி

## *2016 ஆம் ஆண்டு 10.72 வீதமாகப் பதிவு*



இலங்கையின் இறப்பர் மூலப்பொருள் உற்பத்தியானது கடந்த ஆண்டு 10.72 வீத வீழ்ச்சியாகப் பதிவாகியுள்ளதாகவும், அதன் கொள்ளளவானது 79.1 மில்லியன் கிலோகிராமாக வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் இலங்கைமத்தியவங்கியின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த 50 வருடங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது 2016 ஆம் ஆண்டானது மிகக் குறைந்தளவு இறப்பர் மூலப்பொருளை உற்பத்தி செய்த ஆண்டாகப் பதிவாகியுள்ளது.

விலை நிர்ணயங்களில் ஏற்பட்டதான வீழ்ச்சி நிலை காரணமாகவே இந்தக் குறைவான இறப்பர் மூலப்பொருள் உற்பத்தி பதிவாகியுள்ளதாகவும் ஒரு சில இறப்பர் உற்பத்தியாளர்கள் இறப்பர் மரங்களை அழித்து மர வேலைப்பாடுகள் மற்றும் விறகுத் தேவைக்காக பயன்படுத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது.

தவிரப் பன்னாட்டுச் சந்தையில் ஏற்பட்டுள்ள எண்ணெய் விலை நிர்ணய வீழ்ச்சியும் இறப்பர் விலையின் வீழ்ச்சிக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் இறப்பர் கைத்தொழில்துறையானது கடந்த பலவருடங்களாக பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்துவருகின்றது. அத்துடன் கடந்த வருடம் ஏற்பட்ட விற்பனை வீழ்ச்சியின் காரணமாக சில இறப்பர் கைத்தொழில் உற்பத்திநிறுவனங்கள் தங்கள் பணியை இடைநிறுத்தியுள்ளமையும் குறித்து நோக்கத்தக்கது.

## பன்னாட்டு நேரடி முதலீட்டுச் சார்புகளில் இலங்கைக்கு முதலிடம்

பன்னாட்டு நேரடி முதலீடுகளிலும், தீவுகளின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிப் போக்கிலும் இலங்கை முதலிடத்தைப்பெற்றுக்கொண்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டனில் இருந்து வெளிவரும் பினான்ஸ் ரைம்ஸ் (Finance Times) இன் துணைச் சஞ்சிகையான எவ். டி. ஐ (F.D.I) சஞ்சிகை நடத்திய ஆய்வின் முடிவிலேயே இந்தவிபரங்கள் அறியத்தரப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இலங்கை முதலிடத்தையும் சைபிரஸ் மற்றும் டொமினிக்கன் இராச்சியம் என்பன முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பிடித்துள்ளன.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 2.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான முதலீட்டுத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 2012 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 43 முதலீட்டுத்திட்டங்கள் மற்றும் நிதி சேவைகள் முன்னிலையில் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், உணவு, புகையிலை, போக்குவரத்து மற்றும் வர்த்தக சேவைகள் என்பன பன்னாட்டு ரீதியிலான முதலீடுசார் முன்னணித்துறைகளாக காணப்படுகின்றன. இதன்படியே தலா 9 வீதப் பங்களிப்பை இவை செலுத்தியிருப்பதாக எவ். டி. ஐ சஞ்சிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

FT FINANCIAL TIMES

## பன்னாட்டு வர்த்தக சந்தை நிகழ்வுகள் திருமலையில்

திருகோணமலைமாவட்டவர்த்தகசம்மேளனத்தின் ஏற்பாட்டுடனும் கப்பிரல் எக்ஸ்கபிசன் அன்ட் கென்வென்சன் (CAPITAL EXHIBITIONS & CONVENTIONS) தனியார் நிறுவனத்தின் உதவியுடனும் எதிர்வரும் செப்ரெம்பர்மாதம் 08 ஆம், 09 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் பன்னாட்டு வர்த்தக சந்தை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதான தகவலை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கே. குலதீபன் வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

“திருகோணமலை மாவட்டத்தின் பெருமையை வெளிக்கொண்டுவருவதற்கு பன்னாட்டு வர்த்தகச் சந்தைநிகழ்வானதுபெரும்பங்காற்றவுள்ளது. குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தைச்சார்ந்த வர்த்தகர்களின் வினைத்திறனான செயற்பாடுகளுக்கும், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையின் விருத்திக்கும், மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுவதான பொருள்களை வெளி இடங்களில் காட்சிப்படுத்துவதற்கும் இந்தச் சந்தை நிகழ்வுகள் உறுதுணையாக இருக்கும்.

அதேபோன்று இடம்பெறவுள்ளதான பன்னாட்டு வர்த்தகச் சந்தை நிகழ்வுகள் திருகோணமலை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களின் தனித்துவங்களை வெளிப்படுத்தவுள்ளதுடன் அவற்றுக்கான கேள்விகளை அதிகரிப்பதற்கும் உதவும்” - என்றார்.

CSE COLOMBO STOCK EXCHANGE


கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

16/6/2017

www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 24.19 | 6,718.83 | 6,694.64 |
| S&P SL20 | 16.14 | 3,916.44 | 3,900.30 |
| வியாபாரப்புரள்வு | | 966,408,640 | 1,884,444,420 |
| உள்நாடு:- கொள்வனவு | | 436,070,720 | 1,007,797,250 |
| விற்பனை | | 499,362,880 | 952,185,410 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 530,337,888 | 876,647,100 |
| விற்பனை | | 467,045,728 | 932,258,940 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 177.30 | 1,908,947 | 341,383,804 |
| எக்போ லங்கா ஹோல்டிங்ஸ் | EXPO.N | 7.00 | 10,052,600 | 70,368,200 |
| டயலொக் | DIAL.N | 11.80 | 4,123,885 | 49,068,441 |
| டெக்ஸ்சர்ட் ஜேர்சி லங்கா | TJL.N | 41.90 | 1,153,591 | 47,888,544 |
| டோக்கியோ சீமேன் | TKYO.N | 69.50 | 591,469 | 40,980,055 |
| செலான் வங்கி | SEYB.X | 60.50 | 677,151 | 40,316,169 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 245.00 | 102,676 | 25,154,576 |
| சிலோன் ஹோல் ஸ்ரோஸ் | CCS.N | 840.00 | 29,479 | 24,803,142 |
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 140.00 | 176,714 | 24,733,445 |
| சிலோன் டோபாக்கோ | CTC.N | 988.00 | 23,976 | 23,688,288 |

- பங்குலாபம் -

சொ.'ப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் - ரூபா 0:65 சதம்
லங்கா ஐ ஓ சி - ரூபா. 1:25
ஏசியா சியாக கொமோடிட்டி - ரூபா. 0:10 சதம்
ஹற்றன் நஷனல் வங்கி - உரிமைப்பங்கு திகதி 6

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 241 |
| விலை உழைப்பு | 11.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.7 |

# கற்பகதருக்கள்



அன்ரனி பீற்றர்

## ஞாலத்தில் புதுமை புகும் காலமதில் ஈழத்தின் பழமை போற்றும் தனித்துவ அடையாளம்

ஒவ்வோர் இனத்துவ மக்களின் வாழ்க்கையிலும் இயற்கை அளித்த சிறப்பான கொடையாகச் சில விடயங்கள் முக்கியத்துவமாக அடையாளப்படுத்தப்படும். அவை அவர்களின் செல்வமாகவும் முதன்மையோடு கருதப்படும். அந்தவகையிலே தமிழ் மக்களின் வாழ்வியலில் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாக, வாழ்ந்திருக்கும் காலங்கள் முழுமையும் வாரிவழங்கும் வள்ளலாக, செலவில்லாச் செல்வத் தருவியாக கற்பக தருவாம் பனைகள் விளங்குகின்றன. பனை தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த மகத்துவம். தமிழர்கள் வாழ்ந்துவரும் பிரதேசங்களின் அடையாளச் சின்னம். அவ்வாறே பனைகள் சூழ்ந்த இடம் தமிழர்களின் வாழ்விடங்களாக இருந்துள்ளன. தமிழரின் மரபுரிமையோடும் பனை வளம் இரண்டறக் கலந்துள்ளது. இந்தக் காரண காரியம் கொண்டு பனை வளத்தை 'தால மூல விருட்சம்' என்றும் சிறப்பித்து எம் முன்னோர்கள் அழைத்துள்ளனர். அதனைக் காலத்தால் முந்தியது என்றே பொருள் கூறியும் கொண்டனர்.

### பனையின் பயன்கள்

நாங்கள் அறிந்தவரையில் எங்கள் பாட்டன் பூட்டன் காலத்துக்கு முன்பான தலைமுறையினரும் பனையின் பலன்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர். பனையை வைத்தார்கள் என்று சொல்வதிலும் பார்க்க பனைகள் தானாகவே வளர்ந்தன எனலாம். அவற்றுக்கு பாத்தி கட்டவில்லை, நீர் இறைக்கவில்லை, பசளை போடவில்லை, பராமரிப்பு வேலைகளைச் செய்யவுமில்லை அவை தன்னிலையில் வளர்ந்திட அதிலிருந்து பயனைப் பெற்றுக்கொண்டனர். ஆரம்ப காலங்களில் தமிழர்கள் தமது வாழ்வியலின் தேவைகள் அனைத்துக்குமாக பனம் பொருள்களையே பயன்படுத்தினார்கள்.

குறிப்பாக, மரத்தை வெட்டி வீடுகளுக்கு கூரைகளாகவும், ஓலைகளை வீடுவேயவும், படுக்கும்பாயாகவும், பெட்டி, கடகம், சுளகு, பிட்டு அவிக்கும் நீத்துப் பெட்டி, சமையலறைப் பெட்டி (அஞ்சறைப் பெட்டி) காசுவைக்கும், பொருள்களைக் கொண்டு செல்லும் கைப்பைகள், நீர் இறைக்கும் பட்டைகள், ஓலை மட்டையிலிருந்து நார், கயிறு, ஓலைகள், மட்டைகள் கொண்டு வீட்டு மறைப்புக்கான வேலிகள் அடைக்கவும் பயன்படுத்தினார்கள்.

இவ்வாறே உணவுக்காக நுங்கு, பனம் பழம், விதைகளைப் பாத்தியிட்டு பனம் கிழங்கு, கிழங்கிலிருந்து ஒடியல் கூழ், பிட்டு, பனம் களியிலிருந்து பலகாரம், பனாட்டு போன்ற உணவு வகைகள், கள்ளு, பதநீர், பனங்கட்டி, பனம் சீனி, பானவகைகள் என அத்தனை ஊட்டங்களும் மக்களை ஆரோக்கியம் செய்தன. அவர்களின் அன்றாட பயன்படு பொருள்களாக இவை இருந்திருக்கின்றன. ஆரம்ப காலங்களிலே பனையிலிருந்து கிடைக்கும் பயன்களை, அது தரும் வளங்களை மக்கள் சேமித்து வைத்துக் கொண்டனர். வருடம் முழுவதுமாக அவற்றைப் பயன்படுத்தி சக்தியும், உடல்பலமும், ஆரோக்கியமும் பெற்றார்கள். நீண்ட ஆயுளோடு வாழ்ந்தார்கள்.

### தமிழ் வளர்த்த பனைகள்

முன்னோர்கள் கற்றறியவும், கற்றறிந்த இலக்கியம், சமய, வரலாறுகளை எதிர்காலச் சந்ததிக்குப் பாதுகாத்து வழங்கவும் ஓலைச் சுவடிகளையே ஆவணப்படுத்தும் பொருளாகவும், எழுதிப் படிக்கும் சாதனமாகவும் பயன்படுத்தினார்கள். இன்னும் மருத்துவக் குறிப்புக்கள், ஜாதகங்கள், நாடக இலக்கியங்கள் போன்றவற்றையும் பனை ஓலைகளைப் பதப்படுத்தி எழுத்தாணி கொண்டு எழுதிப் பாதுகாத்தார்கள்.

ஓலைச்சுவடிகளை தமிழை வளர்க்கப் பயன்படுத்தியதால் பனையே தமிழை வளர்த்தது என்று கூடச் சொல்லுவார்கள். ஓலைச் சுவடிகளைக் கொண்டு ஏடு தொடக்கியே இன்றும் எம்பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

> கிராமங்களை எழுச்சி பெறச்செய்தால் எல்லோரும் நலமுடன் வாழலாம். பனை இருந்தாலும் நூறாண்டு, இறந்தாலும் நூறாண்டு. அதன் பயனை என்றென்றும் அனுபவிக்கலாம் என்பார்கள். பரம்பொருள் தந்த சொத்துத்தான் பனை வளம். அது தருவதான பனம்பொருள் அத்தனை நன்மைகள் நிறைந்தது. எமது ஞாலத்தில் புதுமை புகும் காலம் ஈழத்தில் பழமையும் செழித்து மிளிர வேண்டும். பனை வளம் காத்து இன்னும் நூறாண்டு கள் உளநலம், மனநலம், ஆரோக்கிய நலம் பெற்று எமது வாழ்வை வளமுள்ளதாக்குவோம்.

### பனைவளம்

மக்கள் தொகை அதிகரிப்பும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும், பனையின் பாவனை அதிகரித்த தன்மைகளால் குறிப்பாக வீடுகள், கட்டடங்கள் அமைப்பதற்குப் பெருமளவான பனைகள் அழிக்கப்பட்டுள்ளன. போர்க் காலத்திலும் பெருமளவான பனைகள் அழிக்கப்பட்டன. தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க பனைவளம் குறைந்து கொண்டு செல்வதை கண்டு கொண்ட சில மண் பற்றாளர்கள் அதற்கிணையான மாற்று வளத்தைப் பெருக்கவும் முனைந்தார்கள். அவர்களிலே மில்க்வைற் கனகராசா, அண்ணா தொழிற்சாலையை சேர்ந்த நடராசா போன்ற எம் மண் கண்டுகொண்ட தொழிலதிபர்களின் சேவையும், பங்களிப்பும் போற்றுதற்குரியதாகும்.

இலவசமாகப் பெற்றுக் கொண்ட பனை வளத்தை இன்றைய தலைமுறையினர் அழிந்து போக விட்டுவிடக் கூடாது. இருக்கின்ற பனை வளத்தை எமது தேவைகளுக்கு நாம் பயன்படுத்துகின்ற போது எமது காணிகளில் பனம் விதைகளை நட வேண்டும். அவை வளர; பணி செய்ய வேண்டும். இதன் மூலம் நாங்கள் வெட்டும் மரங்களுக்கான உயிர்தரலை உய்வுற வளம்படுத்திக்கொள்ள முடியும். இனி வரும் காலங்களில் மக்கள் தமது தேவைக்கு மரங்களை வெட்டுகின்ற போது அவை எந்த மரமாக இருந்தாலும் மீள் நடுகை செய்த பின்னர் வெட்டுவோமாக இருந்தால் எமது மண்வளம், மரவளம், இயற்கை தரும் மழைவளம் பாதுகாக்கப்படும். அவற்றை எம் உயிரிலும் மேலாக எண்ணி, நலன் பேணிக் காக்கின்றபோது எமது வருங்கால சந்ததிகள் மேன்மையுறுவர். நலனுற வளமாக வாழ்வர்.

### பனை வள அபிவிருத்தி

அண்மைக்காலமாகப் பனைவள அபிவிருத்தி சார்ந்து பனைவள அபிவிருத்திச் சபையானது பனைவளர்ப்புச் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தி வருவதுடன் பனம் பொருள்களில் இருந்து கிடைக்கும் உற்பத்திப் பொருள்களை கற்பகம் என்ற நிலையத்தின் ஊடாக மக்களுக்கும், பன்னாடுகளுக்கும் விற்பனை செய்து வருகின்றது. உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதிலும் பெரும் பங்காற்றி வருகின்றது. மக்களும் செயற்கை உற்பத்திப் பொருள்களை, மலிவான பிளாஸ்ரிக் பொருள்களை, பானவகைகளை, உணவுவகைகளை தமது ஆடம்பர நுகர்வுப் பொருளாக உள்ளீடு செய்து கொள்ளாமல் எம்மண்ணில் இயற்கையோடு ஒன்றுகூடி உற்பத்தி செய்யப்படுவதான பொருள்களுக்கு முன்னுரிமை கொடுப்பதனூடு பயன்பெற வேண்டும்.

### கிராமிய எழுச்சியை ஊக்குவித்தல்


மீண்டும் கிராமிய வாழ்வுக்குள் நுழைவோமாக இருந்தால் எம்மை துரத்தும் நோய்களின் பிடியில் சிக்கி விடாமல் ஆரோக்கியமான வாழ்வினை வாழ முடியும். நகரமயமாக்கலைத் தேடி ஓடியவர்களே இன்று விபத்துக்களாலும், நோய்களாலும், நெருக்கீடுகளாலும் சாவின் பிடிக்குள் விரைவாகச் உள்வாங்கப்பட்டு விடுகின்றனர். இயற்கையோடு ஒன்றித்த வாழ்வு நாம் எங்கு வாழ்ந்தாலும் ஆரோக்கியம் தரும். கிராம வாழ்வில் உடலுழைப்பு, சுயதேவைப்பூர்த்தி , சேமிப்பு வீண்விரையத்தவிர்ப்பு, சத்துணவு ஊட்டம் எனப் பலவித நன்மைகள் கிடைக்கின்றன. கிராமங்களை எழுச்சி பெறச்செய்தால் எல்லோரும் நலமுடன் வாழலாம். பனை இருந்தாலும் நூறாண்டு, இறந்தாலும் நூறாண்டு. அதன் பயனை என்றென்றும் அனுபவிக்கலாம் என்பார்கள். பரம்பொருள் தந்த சொத்துத்தான் பனை வளம். அது தருவதான பனம் பொருள் அத்தனை நன்மைகள் நிறைந்தது. எமது ஞாலத்தில் புதுமை புகும் காலம் ஈழத்தில் பழமையும்செழித்துமிளிரவேண்டும். பனை வளம் காத்து இன்னும் நூறாண்டுகள் உள நலம், மனநலம், ஆரோக்கிய நலம் பெற்று எமது வாழ்வை வளமுள்ளதாக்குவோம்.

*கட்டுரையாளர்:*
*ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்.*



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 2017 ஆனி மாத பலன்



## மகரம்

மன உறுதியுடன், எதையும் கண்டு அஞ்சாமல் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கப் பாடுபடும் மகர ராசியினரே, இந்தக் காலகட்டத்தில் ராசிநாதன் சனியும், சுகாதிபதி செவ்வாயும் ஒருவரை ஒருவர் பார்ப்பதால் காரியத் தடைகள் ஏற்பட்டாலும் குரு பார்வையால் தடைகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் பெறும். வீண் அலைச்சல் ஏற்படலாம். சில நேரங்களில் நிர்பந்தத்தின் பேரில் விருப்பமில்லாத வேலைகளைச் செய்ய நேரலாம். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை சொத்து வாங்குவதற்கான சூழல் ஏற்படும். தொழில் ஸ்தானாதிபதியான யோகாதிபதி சுக்கிரன் சுகஸ்தானத்தில் இருக்கிறார். தொழில், வியாபாரத்தில் பார்ட்னர் விவகாரங்களில் கவனம் தேவை.

வேலையாள்களிடம் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். நினைத்தபடி பணிகளை செய்ய முடியாத நிலை உருவாகும். குடும்ப ஸ்தானத்தை கேது அலங்கரிக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களுடன் திடீர் மனஸ்தாபங்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிலும் எச்சரிக்கையாக செயல்படுவது நன்மை தரும். எந்த காரியங்களிலும் குடும்பத்தினரின் ஆலோசனையைக் கேட்பது நலம். பெண்கள் எதிலும் எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருப்பது நல்லது. மனத்தடுமாற்றம் உண்டாகலாம். செலவு கூடும்.

கலைத்துறையினருக்குப் போட்டிகள் நீங்கும். உங்களுக்குப் பக்கபலமாக ஒருவரது உதவி கிடைக்கும். முக்கிய பொறுப்புக்களில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். சாதூரியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். பணவரத்துக் கூடும். காரியத் தடைகள் நீங்கும். செல்வம் சேரும். செல்வாக்கு உயரும்.

அரசியல் துறையினருக்கு வாழ்க்கைத் தரம் உயர எடுக்கும் முயற்சிகள் கைகூடும். நெருக்கமானவர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பீர்கள். முன்பின் யோசிக்காமல் எதையாவது பேசி விடுவீர்கள். இதனால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. வழக்கத்தைவிடச் செலவு கூடும். மாணவர்கள் அதிக நேரம் ஒதுக்கி பாடங்களை ஒருமுறைக்கு இருமுறை படித்து கவனத்தில் வைத்துக் கொள்வது நல்லது.

**பரிகாரம்:**
யோக நரசிம்மரை வணங்க உடல் ஆரோக்கியம் பெறும். மனக்கவலைகள் நீங்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
திங்கள், வியாழன், வெள்ளி.

# வரலாற்றில் இன்றைய தினம்

1244 -பரிஸ் முறுகல் நிலையையடுத்து 24 வண்டிகள் சுமையான யூத மத எழுத்துருக்கள் பரிசில் தீயிடப்பட்டன.

1631-பிள்ளைப் பேறின்போது மும்தாஜ் உயிரிழந்தார் அவரது கணவர் முதலாம் ஷஜகானால் அடுத்த 17 ஆண்டுகளில் மும்தாஜ் நினைவாக தாஜ்மஹால் கட்டப்பட்டது.

1885 -சுதந்திரச் சிலை நியூயோர்க் துறைமுகத்தை வந்தடைந்தது.

1990 -மேற்கத்தைய கூட்டுப்படை மற்றும் ஜப்பானிய படைகளால் சீனாவின் தகு கோட்டை கைப்பற்றப்பட்டது.

1940-மூன்று போல்டிக் நாடுகளான எஸ்தோனியா, லத்வியா மற்றும் லித்துவேனியா சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்புக்கள் வந்தன.

1994 -டென்மார்க்கிடமிருந்து ஐஸ்லாந்து சுதந்திர அறிவிப்பு செய்து குடியரசானது.

1953 -எழுச்சி சோவியத் யூனியன் கிழக்கு ஜேர்மனியில் கலவரத்தை அடக்க ஒரு தொகுதி படைப்பிரிவை அனுப்பியது.

1967-சீனமக்கள் குடியரசு தாம் ஐதரசன் அணு ஆயுதமொன்றை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்ததாக அறிவித்தது.

1990-பெரியபோர தீவில் 150 வீடுகள் எரிப்பு

1990 -அம்பாறையில் சிற்றூர் அவைத் தலைவர் சுட்டுக் கொலை.

1992-கனடாவில் தமிழர் கடையில் கொள்ளை இலங்கைக் குழு கைவரிசை.

1992 -பிலிப்பைன்ஸ் தேர்தலில் ராமோஸ் வெற்றி.

1992 -ஆயுதக் குறைப்பு தொடர்பான கூட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் ஜெல்ற்சின் ஆகியோரால் ஒப்பமிடப்பட்டது.

2016- ஐ.நா.தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தியது.

2016 -கலிபோர்னியாவில் காட்டுத்தீ ஆயிரத்து 400 ஏக்கர் எரிந்து நாசம்.

2016 -கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டத்தை இறுக்கமாக்குமாறு நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்து.

## நாளை

**ஆனி-04**
ஞாயிற்றுக்கிழமை -18.06.2017
திதி: நவமி மு.இ.10.33
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.ப. 02.18
சுபநேரம்:08.53-10.23 வரை
ராகுகாலம்:04.23-05.53 வரை

# இனியும் தூங்கிக் கொண்டு இருக்கப் போகின்றனரா?

காலம் தாழ்த்தியேனும் வடக்கு முதலமைச்சருக்கு எதிராகத் தமிழரசுக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகப் பொது மக்களுக்கு முழுமையான விளக்கம் இல்லாமை மிகப்பெரியதொரு குறைபாடாகும். முதலமைச்சர் பதவியில் அமரும்வரைக்கும் அவரொரு நீதியரசராகவே தோற்றம் தந்தார். கொழும்பை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டிருந்த அவர், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஒரு வார்த்தையேனும் தெரிவிக்கவில்லை. கொடிய போரினால் தமிழர்கள் சின்னாபின்னமாக்கப்பட்ட வேளையிலும் அவரது பார்வை அவர்கள் மீது விழவில்லை. இத்தகைய குணநலன்களைக் கொண்டிருந்த விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் எவருமே எதிர்பார்க்காத வகையில் முதலமைச்சர் வேட்பாளராகக் கூட்டமைப்பின் தலைவரால் நிறுத்தப்பட்டார். தமிழரசுக்கட்சியின் சார்பிலேயே அவர் நிறுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் அவரது உண்மையான முகம் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது வெளிப்பட்டது. தாம் சார்ந்து நிற்கும் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாக அவர் பரப்புரைகளில் ஈடுபடவில்லை. மாறாக அந்தவேளை வாய்மூடி மௌனியாக இருந்தார் கூட்டமைப்பின் தலைமையும், தமிழரசுக் கட்சியும் அப்போதே இவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் கோட்டை விட்டார்கள் பின்னர் தமிழரசுக் கட்சிக்கும், கூட்டமைப்புக்கும் எதிரான சக்திகள் ஒன்றிணைந்து தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பை உருவாக்கியபோது விக்கேஸ்வரன் ஓடோடிச் சென்று அதில் ஒட்டிக் கொண்டார்.




இணைத் தலைவரானார் அப்போதாவது இவருக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொண்டிருக்க வேண்டும். அப்போதும் தவற விட்டு விட்டார்கள். இதற்கிடையில் சில ஊடகங்களின் உதவியுடன் தமிழர்களைப் பாதுகாக்கவெனத் தோன்றிய தேவமைந்தனாக அவர் உருவகப்படுத்தப்பட்டார். அதற்கேற்றாற் போன்று வீர வசனங்களைப் பேசி மக்களை உசுப்பேத்துவதற்கு அவர் தவறவில்லை.

இன்று தீட்டிய மரத்தில் கூர் பார்க்கின்ற செயலில் அவர் தீவிரமாக இறங்கியுள்ளார். தமிழரசுக் கட்சிக்கும், கூட்டமைப்புக்கும் எதிரான சக்திகள் அவருக்கு உருவேற்றி வருவதால் அவரும் உருக்கொண்டு சன்னதம் ஆடுகின்றார். யாருக்குமே இனி அஞ்ச மாட்டேன் என மார்தட்டுகிறார், சவால் விடுக்கிறார்.

கூட்டமைப்பின் தலைமையும்) தமிழரசுக் கட்சியும் இனியும் தூங்கிக் கொண்டிக்கப் போகின்றனவா?

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவீர்கள். தாமதமான செயல் கூட எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். மாமன், மைத்துனருக்கு உதவி செய்வீர்கள்.

**இடபம்:** மனதில் சந்தோஷம் நிறைந்திருக்கும். சமூக பணிபுரிவதில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணமும் கிடைக்கும்.

**மிதுனம்:** சுயநலத்துடன் சிலர் உங்களிடம் அணுகலாம். தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கலாம். உடல்நலனில் அக்கறை தேவை.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காக பாடுபடுவர். வாகன போக்குவரத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**சிங்கம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கன்னி:** மனதில் உற்சாகம் நிலைத்திருக்கும். எந்த செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். வருமானம் திருப்தியளிக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர்.

**துலாம்:** சுயநலத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். உடல்நிலை அதிருப்தி அளிக்கலாம் கவனம். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானம் தேவை. தகுதிக்கு மீறிய வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**தனுசு:** நேர்மையை மதித்து செயல்படுவீர்கள். எளிய முயற்சியால் பல்மடங்கு நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் முன்னேற கூடுதல் உழைப்பு அவசியம். திடீர் பயணம் மேற்கொள்ள நேரிடலாம்.

**கும்பம்:** கடந்த கால உழைப்பிற்கு உரிய பலன் தேடி வரும். அவமதித்தவரும் நட்பு பாராட்டி நெருங்குவர். தொழில், வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு பிறர் பொறாமைப்படுவர். கூடுதல் உழைப்பால் தொழிலில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்கும்.













# அண்ணன் தயாரிப்பில் தம்பி நடிக்கும் புதிய படம்

ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் வள்ளிகாந்த் இயக்கியிருக்கும் திரைப்படம் 'செம'. இதில் அர்த்தனா பினு கதாநாயகியாக அறிமுகமாகியுள்ளார். யோகி பாபு, மன்சூர் அலிகான், கோவை சரளா நடித்திருக்கும் இந்தப் படம் கூடிய விரைவில் திரைக்கு வரவிருக்கிறது. இந்தப் படத்தை இயக்குநரும் தயாரிப்பாளருமாகிய பாண்டிராஜ், லிங்க பைரவி கிரியேஷன்ஸ் உடன் இணைந்து தயாரித்துள்ளார். இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில், 2டி எண்டர்டெயின்மென்ட் நிறுவனத்தைச் சேர்ந்த ராஜசேகர் பாண்டியன், சூர்யா தயாரிக்கும் அடுத்த படத்தில் கார்த்தி நடிக்கவுள்ளார். இந்தப் படத்தை பாண்டிராஜ் இயக்குகிறார் என்ற அறிவிப்பை வெளியிட்டார் ராஜசேகர் பாண்டியன்.



ஒருவன் ஓர் அழகான பெண்ணை திருமணம் செய்தான். அவள் மேல் மிகவும் அளவு கடந்த பாசத்தையும் காட்டினான்.
இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் அவள் தோல் நோய்க்கு ஆளாகி இருந்தாள். அதனால் அவளின் அழகு படிப்படியாக குறைவடையத் தொடங்கியது.
அவ்வாறு இருக்கையில் அவளது கணவன் ஒரு நாள் வெளியூர் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தான்.
அவன் திரும்பி வரும் போது விபத்துக்குள்ளாகித் தனது கண் பார்வையை இழந்தான். ஆனால் எந்தவொரு பிரச்சினையும் இன்றி அவர்களது மண வாழ்க்கை தொடர்ந்தது.
நாள்கள் செல்லச் செல்ல மனைவி தனது அழகும் படிப்படியாக குறைவடைந்து செல்வதை உணர்ந்தாள்.
இருவரும் தமது அன்பில் எந்தவொரு மாற்றமும், வேறுபாடும் இன்றி வாழ்ந்தனர்.
அவன் அவளை அதிமாக நேசித்தான்.
அவளுடன் அன்பாக நடந்து கொண்டான்.
அவளும் அவனுடன் அவ்வாறு தான் நடந்து கொண்டாள்.
அவ்வாறு இருக்கையில் அவள் ஒரு நாள் இறந்து விட்டாள். அவளின் இறப்பு அவனை மிகவும் வேதனைப்படுத்தியது. தனது அன்பு மனைவியின் சடங்குகள் எல்லாவற்றையும் நிறைவேற்றி அவளை அடக்கம் செய்த பின் அவன் ஒரு தனி மனிதனாக அவ் இடத்தை விட்டு வீட்டுக்கு திரும்பினான்.
அவன் திரும்பி வரும்போது அவனுக்கு பின்னால் இருந்து ஒரு மனிதர் அழைத்து எவ்வாறு நீ தனியே நடந்து செல்கிறாய். இதுவரைக்கும் நீ உன் மனைவியின் உதவியுடன் அல்லவா நடந்தாய் என்று கேட்டார்.
அதற்கு அவன் நான் குருடன் இல்லை..! என்னுடைய மனைவி தோல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளாள் என்பதை நான் அறிந்தால் அவள் மனம் காயப்படும் என்பதால் நான் குருடன் போல் பாசாங்கு செய்தேன் என்றான். எத்தகைய அன்பு பார்த்தீர்களா?

தேவதை @SaranyaTwtzz
பிடிவாதத்தால் பிடித்தவரை இழந்து விடாதே! ஈகோவை தவிர்த்தால் போதும்! நீ எதையும் இழக்க வேண்டிய அவசியமிருக்காது!

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 6 | | | 3 | |
| | | 1 | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | 2 | | | 7 |
| 2 | | | 7 | | 5 | | 1 | |
| | | | | 9 | | | | |
| | 3 | | 1 | | 6 | | | 9 |
| 9 | | | 3 | | | | | |
| | 8 | 7 | 6 | 5 | | 2 | | |
| | 4 | | | 7 | | 5 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 9 | 5 | 4 | 1 | 7 | 6 | 2 |
| 2 | 1 | 7 | 9 | 6 | 8 | 3 | 5 | 4 |
| 6 | 5 | 4 | 7 | 2 | 3 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 3 | 1 | 6 | 2 | 4 | 5 |
| 4 | 6 | 1 | 2 | 7 | 5 | 9 | 3 | 8 |
| 5 | 2 | 3 | 4 | 8 | 9 | 6 | 7 | 1 |
| 3 | 9 | 6 | 8 | 5 | 2 | 4 | 1 | 7 |
| 1 | 4 | 5 | 6 | 9 | 7 | 8 | 2 | 3 |
| 7 | 8 | 2 | 1 | 3 | 4 | 5 | 9 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சுவர்ப் பத்திரிகை

## ராக்கூன்



அமெரிக்க வனாந்தரப் பகுதிகளில் வசிக்கும் ராக்கூன் என்னும் பிராணி மனிதர்கள் கொடுக்கும் உணவுப் பொருள்களை ஒரு முறை தானே நீரில் கழுவி விட்டு உண்ணுமாம். நாம் உணவைக் கழுவிக் கொடுத்தாலும் அது தன்கையே தனக்கு உதவி என்ற விதமாக அந்தப் பொருளைத் தானே மற்றொரு முறை கழுவி விட்டுத்தான் சாப்பிடும்.

## யானை



யானை தன் பாகனை நன்றாய் அறிந்திருந்தும் சமயம் வாய்க்கும் போது அவனைக் கொன்று விடுமாம். ஆனால் நாயோ தன்னை அன்பாய் வளர்ப்பவன் தன் மீது எறியக் கத்தியை எடுத்தாலும் வாலைக் குழைந்து நிற்குமாம். மனிதனுக்கும் நாய்க்கும் உள்ள தொடர்பு விசித்திரமானது.

## தேன் எறும்பு



ஆஸ்திரேலியக் காடுகளில் ஒரு வகை எறும்புகள் உள்ளன. இவற்றின் உப்பிய வயிற்றுப் பகுதியில் தேன் போலத் தித்திக்கும் ஒரு வகைத் திரவம் இருக்கிறது. ஆஸ்திரேலிய பழங்குடி மக்கள் கிழங்குகள் பழங்கள் என்பவற்றுக்கு இனிப்புச் சுவை கூட்ட தேன் எறும்புகளைத் தேடிப் பிடித்து பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

## ஈசல்



உயிர் வகைகளில் ஒரு நாள் மட்டும் உயிர் வாழ்வது ஈசல்தான். இதற்கு வயிறோ ஜீரண உறுப்புகளோ கிடையாது.

## எறும்பு




சுறுசுறுப்புக்கு பெயர் போன எறும்புகள் எப்பொழுதும் தூங்குவதே இல்லை. பிறப்பு முதல் இறப்புவரை எந்நேரமும் விழித்து க்கொண்டு சுறுசுறுப்புடன் ஓடியாடி உழைக்கின்றன. இவை ஐந்தாண்டு காலம் வரை வாழும். மேலும் ஐம்பது முதல் நூறு நாள்கள் வரையில் ஆகாரம் இன்றியும் உயிர்வாழுமாம்.

## நத்தை



நத்தை தன்னுடைய எடையைப் போல அறுபது மடங்குஅதிகஎடை கொண்ட பொருளை இழுத்துச் செல்லும். சத்தி படைத்ததாம்.

# இயற்கையின் மடியில்வளரும் இன்முகங்கள்



## முதலை

புற்களின் குவியல். அழுகிப் போன இலைகளும் அந்தக் குவியலில் காணப்படுகின்றன. திடீரென்று அக்குவியலுக்குள் இருந்து கிரீச்சொலி கேட்கிறது. அங்கே முதலையின் குழந்தைகள் தாய்க்கு அனுப்பும் செய்திதான் அந்தஒலி. "நாங்கள் முட்டைக்குளிருந்து வெளியுலகுக்கு வரத் தயாராக இருக்கிறோம் என்பதுதான். கிரீச் ஒலியின் பொருள் தாய் முதலை தனது முட்டைகளை புற்குவி யல்களின் அடியில் மறைத்து வைத்து பேணிப் பாதுகாத்து வரும். முட்டைகளைத் திருடித் தின்பதற்கு எதிரிகள் நயவஞ்சகமாகத் திரிந்து கொண்டிருப்பர். அதனால் புற்குவியலை முதலை அடிக்கடி கண்காணிக்கும். கிரீச்சொலி கேட்டதும் தாய் முதலை புற் குவியலையும் இலைகளையும் தனது அடி வயிற்றினால் அப்புறப்படுத்துகிறது. சில குட்டிகள் தாமாகவே முட்டை ஓட்டை உடைத்து வெளிவரும். ஓட்டை உடைக்க முடியாமல் தவிக்கும். குட்டிகளுக்கு தாய் முதலை தனது பெரும் தாடைகளைால் ஓட்டை மிருவாக உடைத்து உதவி செய்யும் என்ன பரிவு, என்ன பாசம்; இவ்விதமாக எல்லாக் குட்டிகளும் வெளியே வர சில குட்டிகளைத் தாய் தனது வாயில் உள்ள சிறப்புப் பையில் சேகரித்து தண்ணீருக்குள் கொண்டு சென்று விட்டுத் திரும்பும். அது இவ்வாறு திரும்பிவருவதற்கு எடுக்கும் நேர இடை வெளியில் எஞ்சிய குட்டிகள் பாது காப்பு அற்று நிற்க, கழுகுகள், ஆந்தைகள், அசுர பல்லிகள் ஆகியவை அவற்றை கொன்று தின்ன வாய்ப்பு ஏற்படுகிறது. இதை விட நீருக்கு ள்ளும் பெரிய முதலைகளும் ஆமைகளும் முதலைக் குட்டிகளை உணவாக உண்டு விடுகின்றன. நிலத்திலும் எதிரிகள்! நீரிலும் எதிரிகள்; பாவம் தாய் முதலை என்ன செய்யும்? முதலை ஒரே சமயத்தில் பல முட்டைகளை இடுவதற்கான இயற்கையின் வரமே எதிரிகள் உண்டது போக சில குட்டிகளாவது தாய்க்கும் எஞ்சி நிற்கும் என்பதனால் தான் போலும்.

# படிக்காத மேதைகள்

பட்டம் பெறாமலும் படிப்பு இல்லாமலும் தாவர இயலில் வல்லுநர்களாக உள்ளவர்கள் இக்காலத்திலும் கூட இருக்கிறார்கள். அவர்களுடைய அளவு கடந்த ஆர்வம் காரணமாகவும் கவனிப்பு காரணமாகவும் தாவரங்கள் அவர்களுக்கு அளவு கடந்த பலன்களை, அன்பளிப்புகளாக வழங்குகின்றன.

"தாவரங்கள் பற்றிய நூல்களைப் படிக்காமலே இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறீர்களே! இது எப்படி முடிந்தது?" என்று கேட்டால் இந்த படிக்காத மேதைகள் 'இறைவன் கற்றுக் கொடுத்தான்' 'இயற்கை பொழிந்தது' 'வானத்திலே குடி கொண்டிருக்கும் அதிசய ஆற்றல்கள் ஊக்கம் அளித்தன' என்றெல்லாம் பதில் கூறுவார்கள்.

லூதர் பர் பால்க் என்னும் ஒரு தோட்டக் கலைஞர் இருந்தார். அவரிடத்தில் நூல் நிலையம் கிடையாது. சோதனைக் கூடமும் கிடையாது. ஆனால் அவர் தாவரங்கள் சம்மந்தமான ஒரு அறிவுக் களஞ்சியமாக விளங்கினார். அவருடைய புகழ் எங்கும் பரவியது. ஒரு தாவர இயல் வல்லுநர் அவரைச் சந்தித்து அளவளாவினார். பர்பால்க் தனது தோட்டத்தில் இருந்த தாவரங்கள் ஒவ்வொன்றின் பண்புகள், அவற்றின் பரம்பரைகள், பரம்பரைக்கு ஏற்பட்ட துயரங்கள் (தாக்கங்கள்) விபத்துக்கள் ஆகியவை பற்றி கதை கதையாகச் சொன்னார். அவர் தனது தாவரங்கள் பற்றிய குறிப்புகளை எழுதியும் வைத்திருந்தார். ஆனால் நோட்டுப் புத்தகங்களில் அல்ல. உபயோகித்த காகித அட்டைகளிலும், பழைய கடிதங்களில் வெறுமையான பகுதிகளிலுமே அவற்றைக் குறிப்புகளாக எழுதி வைத்திருந்தார். "தங்களுடைய சோதனைக் கூடம் எங்கு உள்ளது ?"என்று தாவர இயல் வல்லுநர் வினவினார். பர்பால்க் புன்முறுவலுடன்" என்னுடைய மூளைக்குள் இருக்கிறது" என்றார்.

# பெருந்தன்மை

"என்னப்பா இந்தச் சனங்களோட பெரிய கரைச்சலாய் போச்சு" என்று கமலா புறுபுறுத்தாள். "ஏன் என்ன நடந்து" அவள் கணவன் கேட்டான். "இந்த பக்கத்தில் இருக்கிற அகதிச் சனங்களெல்லாம் தங்கட கிணத்தடி மாதிரி எப்ப பாத்தாலும் குஞ்சு குருமான், சட்டி, பானை, வாளி எண்டு கிணத்தடியை மொச்சுப் பிடிச்சு நிக்குதுகள். நானோ எங்கட பிள்ளையளோ அந்தப் பக்கம் போக வழியில்லை" என்று புராணம் பாடினாள்". "சும்மா இருப்பா. பாவம் எத்தினை எல்லாம் இழந்து வந்து கிடக்குதுகள். எங்கையாகிலும் இடம் கிடைக்க அதுகள் போய் விடுங்கள். அதுகளின்ர மனம் நோக ஏதேனும் கதைச்சுப் போடாதையும்" என்றான் கந்தசாமி. ஆனாலும் கமலா விடவில்லை. ஒரு நாள் சாடை மாடையாக கிணற்றடியில் குளித்து கொண்டிருந்த பெண் ஒருத்தியிடம் "பிள்ளை காலையில் நாங்கள் குளிச்சு முடிச்ச பின்பு நீங்கள் ஒரு நேரம் குறிச்சு வாங்கோ. இப்பிடி கண்ட நேரமெல்லாம் வந்தா எங்களுக்கும் கஷ்ரைச்சல் தானே" என்று கூறி விட்டாள். மறு நாள் முதல் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எவரும்கிணற்றடிக்கு வருவதில்லை. சில நாள்களால் அவர்கள் வேறெங்கோ போய் விட்டதாக அறிந்தார்கள்.



இதுவரை கந்தசாமி குடும்பத்துக்கு இடம்பெயர வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால் இப்போது வேப்பங்குளம் பகுதியிலும் செல்கள் விழத் தொடங்க அவர்களுக்கும் இடம்பெயரும் நிலை ஏற்பட்டது. மிக அவசியமான பொருள்களை மட்டும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியவர்கள், இரவு முழுவதும் கொஞ்சம் தொலைவில் இருந்து விட்டு விடிய வீட்டுப் பக்கம் வர எண்ணினர். ஆனால் ஷெல் வீச்சுகள் தொடர்ந்ததால் அந்த எண்ணத்தைக் கைவிட்டு கிடைத்த வாகனமொன்றில் ஏறி மடுக்கோயில் வரை வந்து அங்கிருந்து பண்டிவிரிசான் பாதையில் நடந்து போய்க் கொண்டிருந்தனர். இடையே பிள்ளைகள் இருவரும் தண்ணீர் கேட்க, ஒரு வீட்டின் முற்றத்தில் இருந்தவர்களிடம் தண்ணீர் கேட்டு பருகினர். இப்போது கமலாவால் தொடர்ந்து நடக்க முடியாத சோர்வு ஏற்பட்டது "ஐயோ பாவம் யாரோ அகதிகள் இரவு இங்கே தங்கட்டும்" என்று கூறி அந்த வீட்டில் இருந்தவர்கள் அவர்களை அங்கேயே தங்கச் செய்து, வற்புறுத்தி உணவும் கொடுத்து, படுக்கை வசதியும் செய்து கொடுத்தனர். விடிந்தது. அப்போதுதான் இரவு தங்களை ஆதரித்த அந்தக் குடும்பத்தவர் தாங்கள் வேப்பங்குளத்தில் இருந்த வீட்டருகில் அகதிகளாக தங்கிருந்தவர்கள் என்பது கமலாவுக்கும் கந்தசாமிக்கும் தெரிய வந்தது.

அப்போது அவர்களிடம் வந்த குடும்பத் தலைவி "ஐயா பின்னால் கிணறு இருக்கிறது. பிள்ளைகளோடு கால் முகம் கழுவி வாங்கோ தேனீர் குடிக்கலாம்" என்றாள். அன்பாக கமலா இதை எதிர்பாக்கவில்லை அவள் தலை குனிந்து நின்றாள். "நாங்கள் வேப்பங்குளத்தில் இருத்து இங்கு வந்த பிறகு இந்த வீட்டில்தான் தங்கி இருக்கிறோம். அவர்களுக்கு வேறு வீடு இருக்கிறதால்எங்களை இங்கு தங்கச் சொல்லி விட்டினம். இது பெரிய வளவு. இங்க நீங்களும் தங்கி இருக்கலாம்" என்றனர். அந்த குடும்பத் தலைவனும் தலைவியும். அந்த கிணற்று விடயத்தில் தான் அவ்வளவு அற்பத்தனமாக நடந்ததை மறந்து தன் குடும்பத்தை ஆதரிக்கும் அவர்களின் பெருந்தன்மையை நினைத்தபடி கமலா கிணற்றடி நோக்கி நடந்தாள்.



# எனது பொழுது போக்கு

- ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வகையில் செலவிடுவதைப் பொழுது போக்கு என்போம்.
- நான் எனது ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வழியில் செலவிடுகிறேன்.
- எனக்கு ஒரு வீட்டுத் தோட்டம் உண்டு. அங்கே என் ஓய்வு நேரத்தை செலவிடுவேன்.
- நிலத்தைக் கொத்தி பண்படுத்தியுள்ளேன்.
- நாற்று மேடைகள் அமைத்து விதைகளைத் தூவியுள்ளேன்.
- வித்துக்கள் முளைத்து வளர்ந்துள்ளன.
- பாத்திகளை அமைத்து அவற்றை நட்டுள்ளேன்.
- காலையும் மாலையும் நீர் ஊற்றுவேன்.
- கத்தரி, வெண்டி, மிளகாய் வகைகள் நிறையக் காய்த்துள்ளன.
- புடலங்காய் பந்தலில் தொங்குவது ஒரு அழகுதான்.
- சத்துள்ள கீரை வகைககள் பசுமையாக வளர்ந்துள்ளன.
- நான் இவற்றுக்கு இயற்கைப் பசனை தான் இட்டு வருகிறேன்.
- குழியை வெட்டி அதனுள் இலை குழைகளையும் சாணத்தையும் இடுவேன்.
- அடிக்கடி அதனைக் கிளறி விட்டால் வேண்டிய பசளை கிடைக்கும்.
- எனது இந்தப் பொழுது போக்கால் வீட்டுக்குத் தேவையான காய்கறிகள் கிடைப்ப தோடு சிலவற்றை சந்தையில் விற்றும் வருமானம் கிடைக்கிறது.



- புத்தங்களை வாசிப்பதால் நிறைய தகவல்கள் அறியலாம்.
- பகலில் வீட்டுத்தோட்டத்திலும் இரவில் நூல்களை வாசிப்பதிலும்எனது பொழுது பயனுள்ளதாகக் கழிகிறது.

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்


| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 80 | 60 |
| கத்தரி | 140 | 140 | 100 | 140 | 150 |
| கரட் | 250 | 300 | 300 | 250 | 320 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 80 | 50 | 100 | 120 |
| பாகல் | 160 | 200 | 130 | 140 | 180 |
| கருணைக்கிழங்கு | 140 | | 90 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 85 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 260 | 350 | 280 | 300 | 180 |
| பூசணி | 80 | 100 | 60 | 80 | 80 |
| தக்காளி | 160 | 160 | 110 | 150 | 160 |
| வாழைக்காய் | 60 | 80 | 30 | 40 | 60 |
| கீரை | 20 | 30 | 15-20 | 0 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 20 | 30 | 30 |
| பச்சை மிளகாய் | 300 | 400 | 320 | 00 | 320 |
| புடோல் | 140 | 100 | 50 | 00 | 80 |
| கோவா | 140 | 200 | 150 | 00 | 160 |
| வெண்டி | 120 | 120 | 80 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 240 | 180 | 240 | 200 |
| லீக்ஸ் | 120 | 140 | 110 | 140 | 120 |
| தேங்காய் | 70 | 60 | 45-60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 85 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 400 | 260 | 160 | 280 |
| இராசவள்ளி | 200 | - | 280 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 160 | 150 | 140 | 150 | 140 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 500 | 500 |
| கனவாய் | 800 | 700 | 800 | 1000 |
| பாரை | 600 | 700 | 700 | 1000 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 500 | 700 |
| விளை | 500 | 500 | 600 | 700 |
| முரல் | 400 | 500 | 500 | 400 |
| கும்பிளா | 400 | 600 | 800 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 600 |
| ஒரா | 400 | 400 | 400 | 500 |
| திரளி | 250 | 300 | 200 | 200 |
| நகரை | 300 | 200 | 500 | 300 |
| சூடை | 200 | 150 | 200 | 150 |
| ஓட்டி | 200 | 300 | 300 | – |
| திருக்கை | 350 | – | 500 | – |
| மதனம் | 250 | 150 | 300 | – |
| கொய் | 200 | 70 | 100 | 100 |
| பாலை | 250 | 250 | 600 | 500 |
| வாழை | 200 | – | 500 | 400 |

## மரண அறிவித்தல்



பிறப்பு 11.10.1956 — இறப்பு 16.06.2017

### சின்னத்தம்பி(சிவசம்பு) சுதாகர்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுதாகர் நேற்று (16.05.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி (சிவசம்பு) மனோன்மணி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுவேதா, சுபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

நாவற்குழியில் நடைபெற இருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேரதீவு வீதி,
நாவற்குழி

தகவல்:
குடும்பத்தினர்.


## ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா



**Sri Lakshmi Plaza**

திருமணம்,
கொண்டாட்டங்கள்
பெருநிறுவன நிகழ்வுகள்
பிறந்தநாள் விழா
பூப்புனித நீராட்டு விழா
விசேட நிகழ்வுகள்
இன்னும் பல..

இல.84, ஐயனார் கோயில் வீதி,
(தட்டாதெரு சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.

E-mail :- jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550, / 0044 746 657 8511
(C/30138)(10)


கொக்குவில் வளர்மதி முன்பள்ளியில் பல ஆண்டுகளாக ஆசிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றி 08.06.2017 அன்று இயற்கை எய்திய



### அமரர் மதுமதி செல்வராசா

(முன் பள்ளி ஆசிரியை)
அவர்களின் ஞாபகார்த்தமாக
நடத்தப்படும்

### நினைவு அஞ்சலிக்கூட்டம்

தலைமை - திரு. ஆ.சத்தியமூர்த்தி
(இணைப்பாளர் கொக்குவில் வளர்மதி முன்பள்ளி)
காலம் - இன்று (17.06.2017) சனிக்கிழமை மாலை 3.30 மணி
இடம் - கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக வேலாயுதபிள்ளை மண்டபம்

நினைவஞ்சலிக்கூட்டத்திற்கு யாவரையும் அழைக்கின்றோம்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும்,
சனசமூக நிலையமும்,
வளர்மதி நிறைவாழ்வகமும்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.


## நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை
"சானியா கேபல் கெயர்"





ESTD 1838
No.262, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

- எமது பாரம்பரிய வைத்தியமான முறிவு, நெரிவு உட்பட பிரசித்தி பெற்ற கருமைநிற நீக்கம், முகப்பருக்கள், கருந் திட்டுக்கள், கரும்புள்ளிகள், கருவளையம், சருமச்சுருக்கம், உதட்டுக் கருமை போன்றவற்றிற்கான ஆயுர்வேத சிகிச்சைகள்
- வெயிலால் ஏற்படும் கருமைநிற நீக்கத்திற்கான "மூலிகைப் பேஷ்ட்" எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். ஒரு நாளைக்கு ஒரு தடவை பூசுவிப்பதன் மூலம் சிறந்த பலனைப் பெறலாம்.

முற்பதிவு அவசியம்.
077 735 1954

## அறைகள் வாடகைக்கு

குறைந்த விலையில் அறைகள் வாடகைக்கு உண்டு. நாள் வாடகை 600/= முதல் 3000/= வரை A/C, T/V அனைத்து வசதிகளுடன் உண்டு.

Hotel Villa City
422/1, Galle Road, Wellawatte, p/n -072 255 2222

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி Farm School க்கு அருகில் பலாலி வீதியிலிருந்து 2 ஆவது காணி 1 1/2 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு - 076 697 2287

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி வடக்கில் உள்ள பெரிய வீடு வாடகைக்கு உண்டு. களஞ்சியத்திற்கோ அல்லது தனி நிறுவனத்திற்கோ உகந்தது.

0214914633, 076 668 8253


### கோடிபதி ஷனிதா

சீட்டிழுப்பு வாரம்: 150
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 16.06.2017

அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 90,457,620/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
D 07 16 34 75

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 1919

பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2017.06.18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### வெள்ளிக்கிழமை நியத்த ஜய

NIYATHA JAYA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 574 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 16.06.2017

வெற்றி இலக்கங்கள்
03 27 34 62
ஆங்கில எழுத்து F

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 29,028,635/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 1919

மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 2017.06.20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 16.06.2017 | 2146 | சிவப்பு |

சிம்மம்

வெற்றி இலக்கங்கள்
16 23 30 46

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 5, 030, 860/=

18.06.2017 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

## முத்தமிழ் மாலை நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.




மேற்படி நிகழ்வானது தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பழையமாணவர்சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## முதல்வருக்கு...

நிலையத்திலும் அவை நடத்தப்பட்டன.

**யாழ்ப்பாணம்**

நல்லூர் ஆலய முன்றிலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு, கோசங்களை எழுப்பி அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவாகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சி கொண்டிருக்கும் நிலைப்பாட்டுக்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஆதரவாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர் என்று நாடாளுமன்ற உறுப்பினரின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

பொதுமக்கள், அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் எனப் பல தரப்பினர் ஆர்ப்பாட்டத்தில் குழுமியிருந்தனர். ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அங்கிருந்து ஊர்வலமாகச் சென்ற அவர்கள் முதலமைச்சர் இல்லத்தை அடைந்தனர். அவர்களைச் சந்தித்த வடக்கு முதலமைச்சர் அங்கு உரையாற்றினார்.

**கிளிநொச்சி**

வடக்கு முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சி பேருந்து நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அநீதிக்கு எதிரான மக்கள் அமைப்பு என்ற அமைப்பால் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் சிவில் அமைப்புக்கள், ஈ.பி.ஆர்.எல். அமைப்பினர், ரெலோ அமைப்பினர், தமிழ்த் தேசிய முன்னணியினர் எனப் பலர் கலந்து கொண்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வடக்கு முதலமைச்சருக்கு ஆதரவாகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராகவும் கோசமெழுப்பினர்.

**வவுனியா**

வவுனியாவில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் வவுனியா மாவட்ட பொது அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டது. வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக கோசங்கள் எழுப்பப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான மயூரன், ம.தியாகராசா, இ.இந்திரராசா, ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோருடன் வவுனியா மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள் சிலர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ற-ரி-12-6-35)

## பத்திரிகை...

கவனவீர்ப்புப் போராட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர்கள் மீதான விசாரணை நடக்க வேண்டும் என்று எமது உறுப்பினர்கள்தான் கூறியிருந்தார்கள். இதனை என்னிடம் நேரடியாக அல்லது பிரத்தியேகமாகக் கூறியிருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பேன். அதனை விடுத்துப் பத்திரிகையில் தங்களுடைய பெயர் வரவேண்டும் என்பதற்காக, இந்தச் செய்திகளைப் பத்திரிகையில் போட்டு வடக்கு மாகாண சபையை நாறடித்து விட்டார்கள் - என்றார்.

முதலமைச்சர் இவ்வாறு பத்திரிகை என்று பேசியபோது, கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் 'உதயன் ஒழிக' என்று கோசமிட்டனர். இந்தக் கோசங்கள் எழுப்பப்பட்டபோது முதலமைச்சர் அமைதியாக நின்று கொண்டிருந்தார்.

(து-5-26-ரி)

## முதல்வர் மீது...

விலகுவாரா?

இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பா. டெனீஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

மன்னாரிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மாகாண அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**...க் கட்சி**

**பிரேரணையை**
**கொண்டுவரவில்லை**

இந்த விடயம் பூதாகரமாக வளர்ந்துள்ளதற்குக் காரணம் என்ன? இதற்குப் பின்னால் என்ன பிரச்சினை இருக்கின்றது? இந்த ஊழல் விசாரணை என்பது சரியாக நடைபெற்றுள்ளதா? என்பன தொடர்பில் எனது மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்குப் பின்னால் கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்படும் சிலர் தங்களுடைய சுயலாபம் கருதி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது தெட்டத்தெளிவாக அண்மைய காலச் செயற்பாட்டில் வைத்துக் கண்டுகொள்ளலாம். இதன் உண்மை நிலையை என் மக்களுக்குச் செல்ல வேண்டும். இதன் மூலம் மக்கள் சரியாக நடப்பது என்ன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இது தான் எனது நோக்கம்.

சிலர் கூறுவதைப்போன்று முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழ் அரசுக் கட்சிதான் கொண்டு வந்ததது என்பது முற்றுமுழுதாகப் பொய்யான ஒரு விடயம். தமிழ் அரசுக் கட்சி இந்த விடயத்தைக் கொண்டு செல்கிறார்கள், 21பேர் கையெழுத்திட்டுள்ளார்கள், ஆகவே இதற்குப் பின்னால் தமிழ் அரசுக் கட்சிதான் இருக்கின்றது என்பதை நான் முற்றுமுழுதாக மறுக்கின்றேன்.

கடந்த மாகாண சபை அமர்வின்போது முதலமைச்சர் சில தீர்மானங்களை முன்வைத்தார். அதில் இடை நடுவே ஊழல் தொடர்பான விசாரணையின் போது அவருடைய தீர்ப்பில் அடிப்படை ஏதுக்கள் இல்லாத காரணத்தால் சில உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். ஆனால் இன்று வெளியில் வந்துள்ள விடயம், ஊழல் புரியும் அமைச்சர்களைக் காப்பாற்றி, முதலமைச்சரை நீக்கிவிட்டு பிறிதொரு முதலமைச்சரைப் பதவியில் அமர்த்திச் செயற்பட தமிழ் அரசுக் கட்சி விரும்புகின் றது என உள்ளது. இதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

**நீதியாகச் செயற்பட**
**நீதியரசர் தவறிவிட்டார்**

அவ்வாறில்லை அன்றைய தினம் அதிருப்தி அடைந்த மாகாண சபை உறுப்பினர்களில் நானும் ஒருவன். நீதியரசர் நீதியாகச் செயற்பட்டிருக்காததே இந்தளவு நிலைக்கு நாம் செல்லக் காரணமானது . ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதிகள் இருவரையும் ஓய்வு பெற்ற மாவட்ட செயலாளர் ஒருவரையும் விசாரணைக் குழுவுக்கு முதலமைச்சர் நியமித்திருக்கின்றார். இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் அவர்களின் பல்வேறு விடயங்களைப் பரிந்துரைகளாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில் முதல்வர் செயற்படவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு. இதுதான் எங்களுடைய மன ஆதங்கம்.

**முதல்வர் செய்தது**
**பெரும் தவறு**

இது கட்சி ரீதியாக எடுத்த முடிவல்ல. இது ஒரு சட்ட முரணான விடயம் என்பதுதான் எமது குற்றச்சாட்டு. ஒரு விசாரணை முற்றுப்பெற்றதன் பின்பு அவர்களது பரிந்துரைகளுக்கு எதிராக முதலமைச்சர் எடுத்த முடிவு பிழையானது. வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் என்ற முறையில் நானும் சுகாதார அமைச்சர் என்ற முறையில் சத்தியலிங்கமும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிறோம். சில குற்றச்சாட்டுக்கு சாட்சிகள் வரவில்லை. ஆகவே ஒரு விசாரணை முற்றுப்பெற்றதன் பின்னர் அது தொடர்பாக முதலமைச்சர் செய்த செயல் மிகப் பிழையான விடயம்.

**கட்சித் தலைமைகள்**
**இப்போதுதான் தலையீடு**

2 அமைச்சர்களுக்கு ஒருமாதகால விடுமுறை கொடுப்பது எந்தவொரு வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அப்படி சட்டத்திலும் இடமில்லை. இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. ஆகவே இதற்குப் பின்னால் தமிழ் அரசுக் கட்சி இருக்கின்றது என்பது பிழையான விடயம். இப்பொழுது கட்சித் தலைமைகள் தலையிட்டிருக்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வரும் வரையிலும் அது கொண்டு வந்து கொடுக்கும் வரையிலும், அது முற்றுமுழுதாக நிறைவடையும் வரையிலும் கட்சியின் தலைமைப் பீடங்கள் யாருக்கும் நாம் என்ன செய்கிறோம் என்பது தெரியாது.

**விசாரணைக் குழுவை**
**நியமித்ததிலேயே முரண்**

இந்த விசாரணைப் பிரிவு நியமித்ததே சட்டரீதியில் முரணானது. குறிப்பாக இந்த நியமனம் முதலமைச்சரால் பரிந்துரை செய்யப்படுகின்ற போது ஆளுநர்தான் அமைச்சர்களை நியமிப்பார். ஆளுநர் அல்லது அரச தலைவர் தான் விசாரணைக் குழுவை சட்டரீதியாக நியமிக்கலாம். எங்களுடைய அமைச்சரவையில் இருக்கும் ஒருவர்தான் முதலமைச்சர். அமைச்சரவையிலிருக்கும் ஒருவர் அமைச்சர்களுக்கு எதிராக ஒரு குழுவை நியமிக்க முடியாது. அப்படி நியமிப்பது என்பது கேள்விக்குரியது. இருந்தும் நாங்கள் 4 அமைச்சர்களும் விசாரணைகளுக்கு ஒத்துழைத்தோம்.

4 அமைச்சர்கள் மீதான எழுத்து மூலமான முறைப்பாடுகள் எவற்றையும் முதல்வர் எமக்கு காண்பிக்கவில்லை. அந்த முறைப்பாடுகளை ஏன் விசாரணைக்குழுவில் சமர்ப்பிக்கவில்லை. இங்கு முதலமைச்சருடைய நோக்கம் வேறாக இருக்கின்றது. ஆகவே முறைப்பாடுகள் எவையும் இல்லாது முதல்வர் என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

**பதவி ஆசை உள்ளோர்**
**முதல்வரின் பின்னால்**

ஆரம்பத்திலிருந்தே என்மீது முறைப்பாடுகள் வந்துள்ளதாகத் தெரிவித்து விசாரணைகளை முன்னெடுத்தனர். அந்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் நான் விடுவிக்கப்பட்டுள்ளேன். எனினும் புதிய விசாரணைக் குழுவை அமைப்பதாகவும் ஒரு மாத விடுமுறையில் செல்லுமாறும் முதல்வர் கூறியுள்ளார். புதிய விசாரணைக்குழு அமைக்கப்படுவது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இவற்றை வைத்து பார்க்கும் போது பதவி ஆசை கொண்ட சிலர் முதலமைச்சருக்குப் பின்னால் இருந்து செயற்படுகின்றார்களா? என்ற சந்தேகம் வருகின்றது.

**பதவியைத் துறந்து**
**ஒதுங்கிவிடத் தயார்**

புதிய விசாரணைக் குழு அமைக்கப்படுமானால் அது சரியானதாக இருந்தால், அதில் எத்தனையோ பேர் முறையிடத் தயாராக உள்ளனர். முதலமைச்சருக்கு எதிராகவே எத்தனையோ குற்றச்சாட்டுகள் உள்ளன. அவ்வாறு முறைப்பாடு கொடுக்கின்ற போது முதலமைச்சர் தன்மீது முறைப்பாடு வந்துள்ளது என்பதற்காக பதவியிலிருந்து விலகுவாரா?

ஆகவே அறிக்கையில் உள்ளதற்கு ஏற்றவாறு முதலமைச்சர் நடந்து கொள்வாரானால் நான் நிச்சயமாக முழு மனதோடு ஏற்றுக்கொள்வேன். இதன் பின்னர் என்மீது குற்றச்சாட்டுகள் எழுமாக இருந்தால் ஒரு மாத விடுமுறை அல்ல பதவியை விட்டுவிட்டு ஒதுங்கி விடுவேன். அந்தளவுக்கு நான் உறுதியாக உள்ளேன் - என்றார்.

(வ-21)

## எமது...

போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண வீதி போக்குவரத்து அமைச்சின் மன்னார் மாவட்ட உப அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**நடுநிலை தவறிவிட்டார் விக்கி**

இந்த விசாரணைக் குழு கொடுத்த அறிக்கையை சரியாக முதலமைச்சர் பின்பற்றவில்லை என்பதுதான் தற்போது இருக்கின்ற பிரச்சினை. நீதியரசராக இருந்து கொண்டு நீதியைச் சரியாக வழங்காமல் உள்ளார் என்பதுதான் அவர் மீதுள்ள குற்றச்சாட்டு. அவர் நடுநிலையில் இருந்து தவறிவிட்டார். இந்தப் பிரச்சினைகளை மக்கள் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்குப் பின்னால் அரசியல் இலாபம் தேடும் பலர் உள்ளனர். முதலமைச்சராக இருக்கலாம் யாராக இருக்காலாம் யார் பிழை செய்தாலும் அதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

விசாரணைக் குழுவின் அறிக்கைக்கு அப்பால் பல பிரச்சினைகள் எழுமானால், எங்களுடைய தலைவர்கள் எவ்வாறு இருக்கின்றார்கள் என்பதைத் தெளிவாக ஆதாரங்களோடு கூறுவதற்கு தயாராக உள்ளேன். அந்த ஆதாரங்கள் வெளிவருமாக இருந்தால் அவர்கள் ஒருவரும் தங்களுடைய பதவிகளில் இருக்க முடியாது.

மக்களுடைய உயிர்த் தியாகங்களுக்கு மதிப்பளிப்பவர்களாக இருந்தால் நாங்கள் இந்தக் கட்சி அரசியலைவிட்டு எல்லோரும் ஒரே விடயங்களுக்கு வர வேண்டும். இல்லை என்றால் அனைவரும் துரோகம் செய்பவர்களாகவே கருதப்படுவோம். முதலமைச்சரால் நியமித்த விசாரணைக் குழு சரியான முறையில் ஆய்வுகளை செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். அவற்றை அலசி ஆய்வு செய்து முடிவுக்கு வந்துள்ளர்ர்கள். எனவே இந்த முடிவை முற்றுமுழுதாக நான் ஏற்று கொள்வேன்.

**முதல்வர் கேட்டிருந்தால்**
**பதவி விலகியிருப்பேன்**

விசாரணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு முதல்வருக்கு உண்டு. அதிலிருந்து மீறுவாரானால் அவர் முதலமைச்சருக்கு அப்பால் சிறந்த நீதியரசராகக் கருதப்படமாட்டார். இந்த அமைச்சுப் பொறுப்பை யாருக்காவது கொடுப்பதாக முதலமைச்சர் உறுதியளித்ததாக எனக்குத் தெரிவித்திருந்தால் நானே அந்த அமைச்சுப் பதவியைக் கொடுத்திருப்பேன். தம்பி என்றுதான் கூறுவார். அவர் கேட்டிருந்தால் நான் அதைக் கொடுத்திருப்பேன். பதவி மோகம் கொண்டவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் கூடவே இருந்து முதுகில் குத்துபவர்களாகவே உள்ளனர்.

மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மாகாண சபையில் எனக்கு முன்னால் இருப்பவர். அவர் என் முதுகில் குத்தியிருக்கின்றார். பொறுப்பான மாகாண சபை உறுப்பினர் ஒரு அமைச்சரான என்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முறைப்பாடுகளைச் செய்தார். அந்த முறைப்பாடுகளுக்கு விசாரணைக் குழு அவரைப் பல முறை அழைத்தது. எனினும் அவர் விசாரணைக்குழு முன் சென்று சாட்சியமளிக்கவோ, ஆதாரங்களை முன்வைக்கவோ இல்லை.

ஒருமுறை அவர் ஜெனிவாவில் நின்றதாக பொய் கூறியிருக்கின்றார். ஆனால் அவர் அதே நாளில் யாழ்ப்பாணத்தில் எனக்கு அருகில் நின்றார். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. ஒரு முறைப்பாட்டை நாங்கள் கொடுக்கின்றோம் என்றால் தெருவில் செல்கின்ற நபர்கள் கூறுகின்றார் என்று கொடுக்கக் கூடாது. நம்பகத்தன்மை வேண்டும். அதை உறுதிப்படுத்தவும் வேண்டும். அதற்கு அவர் பின்னிற்கக் கூடாது.

**அனந்தி மீது**
**கடும் சாடல்**

இன்று நான் முதலமைச்சரைக் கேட்கின்றேன், “என்மீது களங்கம் ஏற்படுத்துவதற்காகச் செயற்பட்ட இந்த அனந்தி சசிதரன் மீது நீங்கள் எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன? என்மீது வீண்பழி சுமத்தியிருக்கின்றார்கள். இந்த அறிக்கையின் அடிப்படையில் அவர் சமுகம் அழிக்கவில்லை என்றால் அது பெரிய குற்றம். ஒரு சாட்சி தான் முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு சமுகமளிக்கவில்லை. மௌனம் சாதிக்கின்றார் என்றால் அதற்கு என்ன அர்த்தம். இதற்குப் பின்னால் என்ன நடந்திருக்கின்றது. அமைச்சுப் பதவி அவருக்கு வேண்டும் என்பதற்காக அவர் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கலாமா?”

மாவீரர் குடும்பங்கள் நடுத்தெருவில் நின்றபோது அவர்களை வாழவைப்பதைவிட்டு பலர் அவர்களால் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். புலம்பெயர் தமிழர்களுடைய நிதிஉதவிகளைப் பெற்று அவர்கள் வாழ்ந்தார்கள். அப்படி இருக்கும் போது, நான் மகிந்த ராஜபக்சவினுடைய ஆட்சி காலத்திலும் மாவீர்களுக்காக நிதியை ஒதுக்கி உதவித் திட்டங்களை முன்னெடுத்தேன். இதற்காக எத்தனையோ மில்லியன் ரூபாவைக் கேட்டிருந்தேன். ஆனால் அவர்கள் அதைத் தரவில்லை.

என்னுடைய அமைச்சுக்கு, எத்தனையோ விடயங்களுக்கு வந்த நிதியை மாவீரர் குடும்பங்களுக்காக ஒதுக்கி அவர்களுக்கு உதவினேன். மாவீரர் குடும்பங்களுக்கு ஒரு கோடி ரூபா ஒதுக்கி மோசடி செய்தாக அனந்தி சசிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார். இவ்வாறானவர் கடந்த காலங்களில் எமது இனம் சார்ந்த விடயங்களுக்கு எவ்வாறு போராடியிருப்பார் என்பது ஒரு கேளிக்கையான விடயம் என்றார்.

(வ-21)

## எதிர்ப்பு...

என்ன பேசினீர்கள்?
பதில்: நாங்கள் சம்பந்தனுடன் பேசிய விடயங்கள் தொடர்பாகத்தான் தொடர்ந்தும் பேசிக் கொண்டிருக்கின்றோம். அறிக்கையில இரண்டு பேரைப் பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கின்றது, மற்றைய இருவரைப் பற்றியும் சொல்லவில்லை, அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு காரணம் என்ன என்று கேட்டார் சம்பந்தன்.
அவர்கள் சம்பந்தமான விசாரணை நடத்தப்படவில்லை. முறைப்பாட்டாளர் வராதபடியால் அவர்களுக்கு எதிராக எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஆனால் 7ஆம் திகதி முறைப்பாட்டாளர் சபையில், இன்னொரு விசாரணை நடத்தினால் இருவர் பற்றியும் உரிய சாட்சியம் வழங்க முடியும் என்று கூறினார். அதன் பின்னரும் முறைப்பாடுகள் புதிதாகக் கிடைத்துள்ளன. அதனடிப்படையில்தான் எனது தீர்மானம் அமைந்திருந்தது.
முறைப்பாட்டாளர் திரும்ப வருவதாகக் கூறியதால் விசாரணையைத் திரும்ப நடத்தத் தீர்மானித்தேன். ஒரு மாதத்துக்கு அவர்களை விடுமுறையில் இருக்கும்படியும் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கும் என்றும் கார் வைச்சிருக்கலாம் எல்லாம் செய்யலாம் என்றும் அதால அவர்களை விடுமுறையில் இருக்கும்படியும் கேட்டேன். அவர்களின்ர அமைச்சுக்களை நான் பார்த்துக்கொள்கின்றேன் என்று சொன்னேன். விசாரணைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் நடந்துகொள்ளவேண்டும் என்று கூறினேன். இது சம்பந்தமாகத்தான் சம்பந்தன் பேசினார்.
அவர்கள் தொடர்ந்து அமைச்சர்கள் என்ற முறையில் வேலை செய்ய என்ன செய்யலாம் என்று சம்பந்தன் கேட்டார். அவர்கள் எழுத்து மூலமாக, இந்த விசாரணை நடக்கும்போது எந்தவிதமான பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது நடந்து கொள்கின்றோம் என்ற அடிப்படையில் தங்களைத் தொடர்ந்து அமைச்சர்களாகப் பதவி வகிக்க இடமளிக்க வேண்டும் என்று சொல்லிக் கேட்டால் அதை நான் பரிசீலித்து அனுமதியைக் கொடுக்க முடியும் என்று தெரிவித்தேன்.
இதேவிடயத்தைத்தான் சித்தார்த்தனும், சிறீதரனும், சாள்ஸ்சும் கேட்டனர். அப்படி எதுவும் எழுத்தில் கேட்காமல் நீங்களாகவே வேலையைச் செய்யச் சொல்லிச் சொல்லுங்கோவன் என்று சிறிதரனும் சாள்ஸ்சும் கேட்டனர். நான் அப்படிச் செய்ய முடியாது என்று கூறிவிட்டேன். நான் எழுத்திலேயே போட்டுள்ளேன். அந்த எழுத்த மாத்த வேண்டும் என்றால் எழுத்தில்தான் கேட்கவேண்டும், நான் நினைச்சமாதிரிச் செய்ய முடியாது என்று கூறிவிட்டேன். அதைதான் கன நேரமாக கதைத்துப்பார்த்தார்கள். நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். போய்விட்டார்கள்.
சம்பந்தன், மாவையிடம் கதைச்சுப்போட்டுச் சொல்லுறன் என்று கூறினார். ஆனால் இதுவரையில் சொல்லவில்லை.
கேள்வி: மதத் தலைவர்களைச் சந்தித்து என்ன பேசினீர்கள்?
பதில்: நாங்கள் மதத் தலைவர்களைச் சந்தித்தது, என்ன நடந்தது என்பதைத் தெரியப்படுத்தத்தான். ஏனென்றால் மக்கள் இப்போது கொந்தளிச்சு இருக்கின்றார்கள். அந்த நிலையிலேயே மதப்பெரியார்கள் எல்லோரும் இதைப் பற்றி அறிந்திருந்தால்தான் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பற்றித் தெரிய வரும்.
இந்தக் கொந்தளிப்பை அடக்க என்ன செய்ய வேண்டும் என்று நல்லை ஆதீன முதல்வர் கேட்டார். நான் சொன்னேன், அவர்கள் ஒரு மனுக் கொடுத்துள்ளனர் ஆளுநரிடம், அந்த மனுவைத் திரும்ப வாங்கவேண்டும், கொந்தளிப்புத் தானாகவே நிறுத்தப்படும் என்று. ஏனென்றால் மனுவைத் திரும்பப் பெற்றவுடன் அது சம்பந்தமான நடவடிக்கை தொடராது. எவருமே அதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமில்லை. எங்கள் வேலைகள் நடந்துகொண்டுபோகும்.
கேள்வி: எழுத்துமூலம் (அமைச்சர்கள்) தருவதில் என்ன பிரச்சினை ?
பதில்: அது வந்து, கொஞ்சம் நாங்கள் கொழுத்திட்டம்தானே. கஷ்டமாக இருக்கின்றது. (சிரிக்கின்றார்.) அவ்வளவுதான்.
கேள்வி: பதவி விலகல் கடிதத்தைக் குருகுலராசா தந்து விட்டரா ?
பதில்: தருவேன் என்று சொல்லியிருக்கின்றார். என்னிடம் சொல்லவில்லை. வேறு ஒருவரிடம் சொல்லியிருக்கின்றார். தருவார்.
கேள்வி: தங்களுக்கு எதிரான நடவடிக்கை என்று தெரியாமல் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தும் மனுவில் கையொப்பம் இட்டோம் என்று சிலர் கூறுகின்றனரே ?
பதில்: பசுபதிப்பிள்ளை ஐயாவும், ஜவாகிர் அப்பிடிச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதான் எனக்கும் தெரியும். உங்களுக்குத் தெரிந்த அளவுதான் தெரியும். நான் அவர்களுடன் கதைக்கவில்லை. இருந்து பார்ப்போம். அப்பிடியென்றால், எனக்கு எதிராக வாக்களிக்கக் கூடியவர்களுடைய தொகை குறைந்து கொண்டு போகக்கூடும். அப்ப இந்த மனுவைத் திரும்பப் பெறுவதில் பிரச்சினை இருக்காது.
கேள்வி: அமைச்சர் சரத்பொன்சேகா, இரு வாரத்துக்கு முன்னர் உங்களை பதவி நீக்குவது தொடர்பில் பேசியதாக நீங்கள் சொல்லியிருந்தீர்கள். அவர் எங்கே சொல்லியிருந்தார்.
பதில்: இரண்டு கிழமைக்கு முதலோ மூன்று கிழமைக்கு முதலோ அந்தச் செய்தி வந்தது. நீங்கள் எந்தப் பத்திரிகை என்பதைத் தேடிக் கண்டறியுங்கள்.
கேள்வி: சரத்பொன்சேகாவுடன் பேசியபோது, அவர்தான் அப்படிச் சொல்லவில்லை என்கின்றாரே ?
பதில்: பத்திரிகையில் இருந்தது. தனது உதவியாளரிடம் சிங்களத்தில் பேசினார். தமிழ் பத்திரிகையில்தான் கண்டிருக்கின்றம். அவருடைய கருத்தை வைத்து நடந்திருக்கிறதை அனுமானிக்கின்றன். மற்றதுகளைப் பற்றி என்னால் சொல்லமுடியாது. கொழும்பில இருந்து வரும் ஒருவர் இங்கு இப்பிடி ஒன்று நடக்கப்போகுது என்று கூறமுடியுது என்றால், அதாவது என்னுடைய பதவி பறிபோகக் கூடிய நிலை இருக்காதபோதே விரைவில் அவருடைய பதவி பறிபோகப் போகின்றது என்றால், எங்கோ ஓரிடத்தில் இதைப் பற்றி பேசியிருக்கினம். கதைச்சிருப்பினம். இது சம்பந்தமாக நடவடிக்கைகள் நடக்கப் போவதை அவருக்குத் தெரியப்படுத்தியிருப்பதால்தான் அவர் இங்கு வந்து அதனைச் சொல்லியிருப்பார். இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்.
கேள்வி: ஐங்கரநேசனைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவால் அவருக்கே பாதிப்பு ஏற்பட்டுவிட்டது என்று சொல்லப்படுகிறதே!
பதில்: முதலில் ஐங்கரநேசனுக்கு எதிராகத்தான் குற்றச்சாட்டுக்கள் வந்தன. அது சம்பந்தமாக விசாரித்துக் கொண்டு போகும்போது ஏனையோருக்கு எதிராகவும் குற்றங்கள் சுமத்தப்பட்டன. சபையில சத்தம் போட்டது எல்லாம் ஓர் அமைச்சருக்கு எதிராகத்தான். ஆனால் எனக்கு பல முறைப்பாடுகள் வந்தன, எல்லாருக்கும் எதிராக. ஆகவேதான் 4 பேருக்கும் எதிராக விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.
கேள்வி: அமைச்சர் ஐங்கரநேசன், நீங்கள் நியமித்த விசாரணைக் குழுவின் நீதிபதி ஒருவர் தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார். அவரை நீங்கள்தானே நியமித்தீர்கள்.
பதில்: நாங்கள் நியமிக்கேக்க எல்லாத்தையும் பார்க்கேலாது. ஒவ்வொருத்தரைப் பற்றியும் விசாரிக்க இயலாது. அவர்கள் இருவரும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதிகள்.
கேள்வி : ஐங்கரநேசன், விசாரணைக் குழு மீது குற்றச்சாட்டுச் சொல்வது சரியா ?
பதில்: அதைப் பற்றி எனக்குச் சொல்ல முடியாமல் இருக்கு. விசாரணைக் குழுவில் இருந்த ஒருவர் ஒரு வழக்கில் சட்டத்தரணியாக ஈடுபட்டிருக்கின்றார். அது எனக்குத் தெரியாது. ஆரம்பத்திலேயே தெரியப்படுத்தியிருந்தா நடவடிக்கை எடுத்திருக்கலாம். எல்லாம் முடிந்து தீர்மானம் எடுத்த பின்னர் சொன்னால் நான் என்ன செய்ய ?
கேள்வி: சுமந்திரனின் ஊடக அறிக்கை குறித்து?
பதில்: முதலிலேயே இதைத்தான் சொன்னான். ஐங்கரநேசனுக்கு எதிராகத்தான் குற்றச்சாட்டுக்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் 4 பேருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் வந்தன. அதுதான் உண்மை.
கேள்வி: சமாதான முயற்சிகள் எந்த நிலையில் உள்ளன?
பதில்: இப்போ இருக்கிற நிலையில் பலருடைய ஆதரவும் கிடைக்கிற மாதிரித்தான் தெரியுது. ஆனால் நிச்சயமாக என்னால் சொல்ல முடியாது. அவர்கள் கொடுத்த மனு தள்ளுபடியாகும். அது முன்னேறாது. அதிலும் பார்க்க அவர்கள் ஆளுநரிடம் கொடுத்த மனுவைத் திரும்பப் பெற்றால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம். மற்றும்படி நாங்கள் முன்னேறலாம் என்றதுதான் நிலை. சமரசம் பேசினால் பேசிக் கொண்டே போக வேண்டியதுதான். இது தீருமோ தீராதோ என்று தெரியாது.
கேள்வி: உங்களுக்கு ஆதரவான மக்கள் போராட்டத்தால் நாளை வன்முறையும் வெடிக்கலாம்?
பதில்: கட்டாயம். கட்டாயம். மக்கள் வந்து தங்களுடைய மனோநிலையை எடுத்துக் காட்டி விட்டார்கள். அதற்கு நான் தலை வணங்குகின்றேன். ஆனால் அதே நேரத்திலே அதை அவர்களாகவோ அல்லது அதில் உள்ளிருக்கும் சில கறுத்த ஆடுகளோ எங்கயாவது இருந்து ஒரு தகாத முறையில் நடந்து கொண்டார்களானால் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் அழைக்கக் கூடிய நிலை ஏற்படும்.
அதனால்தான் நான் கூறுகின்றேன். இவர்கள் தங்களுடைய மனுவை விரைவில் திரும்ப வங்கிக்கொண்டால் மக்களை விரைவில் சாந்தப்படுத்த முடியும். ஆனால் மக்களும் தங்களுடைய மனோநிலையை அளவுக்கு மீறிக் காட்டத் தலைப்படக் கூடாது. அப்படிச் செய்வதால் மக்களுக்குத்தான் நட்டம் ஏற்படும். அரசு அதனைக் காரணமாக வைத்து நடவடிக்கை எடுக்கலாம். மக்கள் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் குறிப்பிட்ட கறுத்த ஆடுகள் செய்யக் கூடும். ஆகவே நீங்கள் விழிப்போடு இருக்க வேண்டும்.
கேள்வி: நீங்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு கடிதம் ஒன்று 2013ஆம் ஆண்டு கொடுத்ததாகக் கூறப்படுகின்றதே ?
பதில்: நான் அந்தக் கடிதத்தை வாசிக்க முடியாமல் இருக்கின்றது. அது என்னுடைய கையெழுத்து என்றால் என்னுடைய கடிதமாகத்தான் இருக்கவேண்டும். என்ன எழுதியிருக்கு என்று எனக்கே தெரியாது. ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் கடிதம் எழுதியிருக்க வேண்டும். அது என்ன காரணத்திற்கு என்பதைப் பார்த்த பின்னர்தான் சொல்ல முடியும். ஏதோவொரு காரணத்துடன்தானே பதில் சொல்லியிருக்க வேண்டும். அந்தக் காரணம் அல்லது அந்தச் சூழலுக்கு ஏற்ற விடயத்தை எல்லாக் காலத்திலையும் செல்லுபடியாகும் என்று சொல்ல முடியாது. (உ-5)

## என்னைப்...

முதலமைச்சர் இல்லத்தை வந்தடைந்த பின்னர், அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களது கடமைகளைச் செய்து கொண்டு போகும்போது பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றோம். முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா, விக்னேஸ்வரன் தனது பதவியை இழந்து விடுவார் என்று இரு வாரங்களுக்கு முன்னர் கூறியிருந்தார். அவருடன் எனக்கு எந்தக் கோபங்களும் இருக்கவில்லை. இதன் பின்னால் ஏதோ ஒன்று இருக்கின்றது. எனக்கு எதிராகக் கொழும்பில் சதி நடக்கின்றது என்பதை அவர் அறிந்திருந்தார்.
இந்தச் சதி எப்படி நடத்தப்பட்டது என்றால், எங்களுடைய அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். இதில் முதலமைச்சர், அமைச்சர்களைக் காப்பாற்றவேண்டும் அல்லது தண்டிக்கவேண்டும். இதில் எது நடந்தாலும் அதைச் சாதகமாக்கலாம் என்று நம்பி இருந்தார்கள்.
அமைச்சர்களை தண்டித்தால், அவர்களைத் தண்டித்துவிட்டேன் என்றும், தண்டிக்காமல் விட்டால் அவர்களைத் தண்டிக்காமல் காப்பாற்றிவிட்டேன் என்றும் இரண்டு வழிகளிலும் என்னைக் கவிழ்த்துவிடலாம் என்று நினைத்திருந்தார்கள். எது நடந்தாலும் அவர்கள் என்னை வெளியேற்றவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நீங்கள் பதில் சொல்லிவிட்டீர்கள்.
மக்களின் பிரச்சினைகள் எவ்வளவோ இருக்க, வடக்கு மாகாண சபையிலும் ஏனைய இடங்களிலும் தேவையில்லாததைப் பேசி நேரத்தை வீண் அடித்துக் கொண்டிருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. நாம் எங்களுடைய கடமையைச் சரியாகச் செய்வோம். கடமையை செய்பவனுக்கு வெற்றியும் இல்லை தோல்வியும் இல்லை.
விசாரணைக் குழு இரண்டு பேரைக் குற்றவாளிகள் எனக் கூறியது. மற்றைய இரண்டு பேர்கள் சம்பந்தமாக விசாரணை நடத்த முடியாமல் போய்விட்டது. அதற்குரிய முறைப்பாட்டாளர் வரவில்லை என்பதால் அது நடக்கவில்லை. அவ்வாறு வராத காரணத்தினால் விடுவிக்கப்பட்டார்கள்.
அவர்கள் குற்றவாளிகள் அல்ல எனக் கூறிக் கொண்டு திரிகின்றார்கள். அதை விட வேறு குற்றங்களும் அவர்கள் சம்பந்தமாக எமக்கு கிடைத்துள்ளன. இது சம்பந்தமாக மேலும் ஒரு விசாரணை நடக்கும். வடக்கு மாகாண சபையின், இந்தச் சபையின் ஊழல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடந்து இதைத் தான் எதிர்நோக்க வேண்டி வரும். இதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டு இருக்கின்றோம்.
இவ்வாறான மக்கள் கூட்டம் எங்களுக்குச் சார்பாக உள்ளபோது நாம் செல்லும் பாதை சரி என்று தோன்றுகின்றது. தமிழ் மக்களே உங்கள் நலம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுப்போம் - என்றார். (த-5-26-ரி)

## முதல்வர்...

சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இ.அங்கஜன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
எமது அரச தலைவரின் கொள்கையே இன்று இலஞ்ச ஊழல் அற்ற நாட்டை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றது. அதுவே இலஞ்ச ஊழலில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைகளையும் பெற்றுக் கொடுக்கின்றது.
இவ்வாறான நிலையில், வடக்கு மாகாண சபையின் முதல்வர் இலஞ்ச ஊழல் தொடர்பாக எடுத்த எந்த ஒரு முடிவுக்கும் எதிராக நாம் செல்லவில்லை. எமக்கு அவ்வாறான பணிப்புரைகள் எதையும் அரச தலைவரும் தெரிவிக்கவில்லை.
வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு வடக்கு முதலமைச்சருக்கு எதிராகச் செயற்படுவதென்பது அவர்கள் தன்னிச்சையாக எடுத்த முடிவே ஆகும். இவர்களால் வெளியிடப்பட்ட முடிவுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எந்த விதத்திலும் தொடர்போ பொறுப்போ கிடையாது.
வடக்கு முதலமைச்சர் இலஞ்ச ஊழலுக்கு எதிராக முடிவெடுக்கும் போது அதைத் தவறு என்று இன்னொரு கட்சியினரே அவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை கொண்டு வந்து அவரைப் பதவிநீக்க செயற்படுகின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெயரை பயன்படுத்திக் கொள்வது ஆரோக்கியமானதல்ல.
வடக்கு முதலமைச்சரின் மக்கள் நலன் சார்ந்த நல்ல விடயங்களையும் செயல்பாடுகளையும் முதன் முதலில் வரவேற்றவர்களில் நானும் ஒருவன் என்பதில் மகிழ்வடைகின்றேன். எல்லா விதத்திலும் துன்ப துயரங்களை அனுபவித்த எம்மக்களின் வலிகளை நாம் உணர வேண்டும். இதை உணராத சில அரசியல்வாதிகள் எதற்கும் கட்டுப்படாமல் மற்றவர்களின் அறிவுரைகளைப் பெறாமல் எடுக்கும் முடிவுகள் வடக்கு மக்களுக்கு எதிராக எடுக்கும் முடிவுகளாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை - என்றுள்ளது. (வ-5)

## விக்கிக்கு...

அங்கிருந்து ஒலி வாங்கி ஊடாக அந்தக் கட்சியின் ஆதரவாளர்களான சக்தி மற்றும் காரைநகர் சைவப் பிரகாச பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் இளங்கோ ஆகியோர் கோசங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர்.
'உதயன் பத்திரிகையையும்' வசைபாடி அவர்கள் கோசங்களை எழுப்பினர். இடையிடையே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செல்வராஜா கஜேந்திரனிடம் கோசங்களைக் கேட்டும் அவர்கள் எழுப்பினர். (வ-5,26,ரி)

## 3 பொலிஸார்...

உள்ளிட்ட 3 பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் அபகரிக்கப்பட்டிருந்தது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியான மட்டக்களப்பு, வெல்லாவெளியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கேதீஸ்வரன் (வயது-28) என்பவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக மொனராகல மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
மொனராகல மேல் நீதிமன்றம் இந்த வழக்கின் தீர்ப்பை நேற்று அறிவித்தது. முன்னாள் போராளிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக அறிவித்த மொனராகல மேல் நீதிமன்ற நீதிபதி, குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (வ-5)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

**நியூபைட் வி.கழக துடுப்பாட்டத் தொடர்**

வவுனியா நியூபைட் விளையாட்டுக் கழகத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. சீர்திருத்த விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல் மதீனா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**இளநிலைப் பிரிவு கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் காலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் 15 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் 15 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

**விக்னேஸ்வராவின் கால்பந்தாட்டம்**

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கு இடையில் கால்பந்தாட்டம் மற்றும் துடுப்பாட்டத் தொடர் குறித்த கல்லூரியின் மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

**இளைஞர்களின் கால்பந்தாட்டம்**

கொற்றாவத்தை இளைஞர்களால் நடத்தப்பட்ட 19 வயது அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. முதலில் இடம்பெறும் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-23-108-422)



# கொக்குவில் இந்து. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 20 வயது பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலய அணி மோதியது.

இரண்டு ஒற்றையர் ஆட்டம், ஓர் இரட்டையர் ஆட்டம் என்பவற்றைக் கொண்டதாக இறுதி அமைந்தது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சார்பில் பவதாரணியும், முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலய அணியின் சார்பில் நிதுக்சாவும் மோதினர். 28:01 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பவதாரணி வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சார்பில் கீர்த்திகாவும், முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயத்தின் சார்பில் வினுசாவும் மோதினர். கீர்த்திகா 26:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றதை அடுத்து 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி.

**அல் இக்பால் ம.வி. மூன்றாவது இடம்**

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா அல் இக்பால் வித்தியாலய அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் இந்து மகளிரின் சார்பில் கிருஸ்ணபிரியாவும், வவுனியா அல் இக்பால் வித்தியாலய அணியின் சார்பில் நெஸ்மினாவும் மோதினர். 14:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நெஸ்மினா வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் சார்பில் நுஸ்காவும், வவுனியா அல் இக்பால் அணியின் சார்பில் சபிக்காவும் மோதினர். 25:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நுஸ்கா வெற்றிபெற்றார்.

முதலிரு செற்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்ற காரணத்தால் இரட்டையர் ஆட்டத்தில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அல் இக்பால் மகா வித்தியாலய அணியின் இணை வெற்றிபெற்றதை அடுத்து 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது அல் இக்பால் மகா வித்தியாலய அணி. (ம-23)

# யாழ். பல்கலை– ஜெயவர்த்தனபுர இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 17

அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்ட தொடரின் இறுதியாட்டம் கொழும்பு பல்கலைக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இதில் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# யங்ஸ்ரார் - மருதநிலா இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 17

வவுனியா நியூபைட் விளையாட்டுக் கழகத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை நடைபெறவுள்ளது.

நியூபைட் விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# பங்களாதேஷ் குறித்து சங்கக்கார பெருமிதம்

மினி உலகக்கிண்ணத் தொடரில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அரையிறுதிக்குத் தகுதிபெற்றிருந்த பங்களாதேஷ் அணி குறித்து பெருமிதக் கருத்துக்களை வெளிப்படுத்தினார் இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் சங்கக்கார.

"இந்தத் தொடரில் பங்களாதேஷ் அணி அனைத்து துறைகளிலும் சிறப்பாக விளையாடியது. ஆஸ்திரேலியா உடனான தொடருக்காக அந்த அணி நம்பிக்கையுடன் டாக்கா திரும்புகிறது. அதேபோல், 2019ஆம் ஆண்டு நடைபெறும் உலகக்கிண்ணத் தொடரில் தந்திரமான திட்டமிடலுடன் தீவிர போட்டியாளர்களாக இருக்க வேண்டும். தொடர்ச்சியான சிறப்பான ஆட்டத்தால் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் இரண்டு பெரிய தொடர்களில் விலகல் சுற்றுவரை முன்னேறியுள்ளது. இது பாராட்டப்படவேண்டிய ஒன்று" என சங்கா மேலும் தெரிவித்தார்.

மினி உலகக்கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணி நியூசிலாந்தைத் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 17 வயது பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து மன்னார் பெரியமடு மகா வித்தியாலய அணி மோதியது.

இரண்டு ஒற்றையர் ஆட்டங்கள், ஓர் இரட்டையர் ஆட்டம் என்பவற்றைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்து மக[illegible] சார்பில் கென்சிகாவும், பெரியமடு மகா வித்தியாலய அணியின் சார்பில் சுஸ்மிலாவும் மோதினர். 21:04 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கென்சிகா வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் இந்து மகளிரின் சார்பில் லக்சிகாவும், பெரியமடு மகா வித்தியாலயத்தின் சார்பில் துசாந்தினியும் மோதினர். 16:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் லக்சிகா வெற்றிபெற்றதை அடுத்து 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது இந்து மகளிர் கல்லூரி அணி.

**கொக்[illegible]வில் இந்து. மூன்றாமிடம்**

[illegible]ண்கள் பிரிவு மூன்றாம் இடத்[illegible]டத்தில் கொக்[illegible]வில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்து கல்லூரி அணியின் டிசாந்தியும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியின் சார்பில் கண்ணகியும் மோதினர். 21:04 என்ற புள்ளிகளின் அடிப்படையில் டிசாந்தி வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்து கல்லூரி அணியின் சார்பில் துசாயினியும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியின் சார்பில் சலோமியாவும் மோதினர். 21:04 என்ற புள்ளிகளின் அடிப்படையில் துசாயினி வெற்றிபெற்றார். 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி. (ம-23)



# பாகிஸ்தானிடம் தோல்வியென்பது கடுமையான ஏமாற்றமே

## மோர்கன் புலம்பல்

"மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியமை கடுமையான ஏமாற்றம்" என்று குறிப்பிட்டார் இங்கிலாந்து அணியின் தலைவர் மோர்கன்.

"சொந்த மண், பழக்கப்பட்ட ஆடுகளம், அதிகப்படியான ரசிகர்கள் இவையெல்லாம் நடைபெற்றுவரும் தொடரில் எமக்குச் சாதகம். ஆனால் அவை எமக்கு பாதகத்தையும் தந்துவிட்டது. இத்தகைய காரணங்களால் எமக்கு அதிகளவில் அழுத்தமும் ஏற்பட்டது. வெற்றி பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அதற்குரிய சாதகத்தன்மை



யும் உள்ளபோது எந்தவொரு அணிக்கும் அதிகளவில் அழுத்தம் இருப்பது வழமையானதே. அந்த அழுத்தமே பாகிஸ்தானுடன் நாம் தோல்வியடைந்து வெளியேறக் காரணமாக அமைந்துவிட்டது" என மோர்கன் மேலும் தெரிவித்தார். (ம)




# இந்தியாவை எதிர்க்க தயாராக உள்ளோம்

## சர்பராஸ் நம்பிக்கை

"மினி உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்திய அணியை எதிர்கொள்ளத் தயார்" இவ்வாறு தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் அகமட்.

மினி உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டம் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இரு நாடுகளும் பரம வைரிகளென்பதால் இந்த ஆட்டத்தில் எதிர்பார்ப்பு இரட்டிப்பாக எழுந்துள்ளது. இந்த நிலையில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே சர்பராஸ் அகமட் இவ்வாறு தெரிவித்தார்.

"லீக் சுற்றில் இந்தியாவுடன் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர் நாம் மீண்டெழுந்தோம். ஒவ்வொரு ஆட்டமும் விலகல் ஆட்டம் என்ற வகையில் இருந்தது. சிறந்ததும், போராட்டகரமானதும், நேர்த்தியானதுமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அடுத்தடுத்த ஆட்டங்களில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றுள்ளோம். மறுமுனையில் இந்தியாவும் இறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது. இறுதியில் இந்தியாவை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்" என அகமட் மேலும் தெரிவித்தார். (ம)

> லீக் சுற்றில் இந்தியாவுடன் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர் நாம் மீண்டெழுந்தோம். ஒவ்வொரு ஆட்டமும் விலகல் ஆட்டம் என்ற வகையில் இருந்தது. சிறந்ததும், போராட்டகரமானதும், நேர்த்தியானதுமான ஆட்டத்தை வெளிப்ப்டுத்தி அடுத்தடுத்த ஆட்டங்களில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளோம்.

# கடைநிலை வீரரிடம் பெடரர் படுதோல்வி

ஜேர்மனி ரென்னிஸ் தொடரில், பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் 300 இடங்களுக்குள் இல்லாத வீரரிடம் தோல்வியடைந்து வெளியேறினார் முன்னணி வீரர் பெடரர்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் 5ஆம் நிலையில் உள்ள வீரரான சுவிற்சர்லாந்தின் பெடரரை எதிர்த்து தரப்படுத்தலில் 304ஆவது இடத்தில் உள்ள ஜேர்மனி வீரர் ஹாஸ் மோதினார்.

முதலாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பெடரர் கைப்பற்றினார். இரண்டாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தார் ஹாஸ். முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஓர் செற்றைக் கைப்பற்றியிருந்தமையால் மூன்றாவது செற்றில் வெற்றிபெறுபவரே அடுத்த சுற்றுக்கு முன்னேறலாம் என்ற நிலை இருந்தது. அந்த செற 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஹாஸின் வசமாக முடிவில் அவர் 2:1 என்ற செற் கணக்கில் பெடரரை வெளியேற்றினார்.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணமான ஆஸ்திரேலியக் கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர் பெடரர் வேறொரு முக்கிய கிண்ணத்தையும் கைப்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



மினி உலகக்கிண்ணத் தோல்வியின் எதிரொலி

# மன்னிப்புக் கோரினார் தலைவர் வில்லியர்ஸ்

மினி உலகக்கிண்ணத் தொடரில் இருந்து தென்னாபிரிக்க அணி வெளியேறியமை தொடர்பில் அந்த அணியின் தலைவர் வில்லியர்ஸ் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

மினி உலகக்கிண்ணத் தொடரில் பெரியளவில் சாதிக்கக்கூடிய அணிகளில் ஒன்றாக தென்னாபிரிக்க அணி அடையாளம் காணப்பட்டது.

எனினும் அந்த அணி அரையிறுதிக்குக்கூட தகுதி பெறாமல் வெளியேறியது. இது சில அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்த நிலையில் தமது மோசமான செயற்பாட்டுக்கு வில்லியர்ஸ் மன்னிப்புக் கேட்டார்.

"மினி உலகக்கிண்ணத் தொடரில் நாங்கள் விளையாடிய விதம் குறித்து உண்மையாகவும் மனப்பூர்வமாகவும் மன்னிப்புக் கோருகிறோம், நாங்கள் தொடர்ந்து கடினமாக உழைத்து எங்கள் ஆட்டத்தை சீர்செய்வோம்" என்று அவர் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றிலும் தமது மோசமான பெறுதிக்காக ரசிகர்களிடம் வில்லியர்ஸ் மன்னிப்புக் கேட்டிருந்தார்.

தான் தலைமையில் தொடரும் நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# மீண்டும் வருகிறார் மெவதர் மக்கிரேகருடன் பலப்பரீட்சை

குத்துச்சண்டை உலகில் எவராலும் வெல்லமுடியாதவராக திகழ்ந்து ஓய்வை அறிவித்திருந்த அமெரிக்காவின் புளொய்ட் மெவதர், தனது ஓய்வு முடிவை திரும்பப் பெற்று அயர்லாந்தின் மக்கிரேகருடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மோதவுள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் வெகாஸில் ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி இந்த மோதல் நடைபெறவுள்ளது.


குத்துச் சண்டை உலகில் கடந்த வருடம் மெவதருக்கும், பிலிப்பைன்ஸ் வீரர் மேனி பக்கியோவுக்கும் இடையில் மோதல் நடைபெற்றது. இந்த மோதலில் மெவதர் வெற்றி பெற்றார்.

இதைத் தொடர்ந்து குத்துச் சண்டை உலகில் இருந்து மெவதர் விடை பெற்றார். அவர் எந்தவொரு மோதலிலும் தோற்றதில்லை. மெவதரின் ஓய்வின் பின்னர் அயர்லாந்து வீரர் மக்கிரேகர் உலக ஜாம்பவானாக்த் தோற்றம் பெற்றார்.




அவரை மெவதர் வெல்லமாட்டார் என்பது போன்று பன்னாட்டு ஊடகங்கள் விமர்சித்தன.

இது மெவதர் - மக்கிரேகர் இடையிலான வார்த்தை மோதலாகவும் தோற்றம் பெற்றது. இந்தப் பின்னணியிலேயே இவர்கள் இருவரும் எதிர்வரும் ஓகஸ்டில் மோதவுள்ளனர். (ம)



மினி உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் நாளை பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இந்த நிலையில் இரு அணிகளும் நேற்று கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டன. இரு நாட்டினதும் கிரிக்கெட் சபைகளின் சமூக வலைத்தளங்களில் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடும் ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுவதால் இந்த ஆட்டத்தின் மீது நாளுக்கு நாள் எதிர்பார்ப்புகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சர்பராஸின் தலைமைத்துவம் டோனியின் சாயலில் உள்ளது

## மிஸ்பா புகழாரம்

"பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் அகமட்டின் தலைமைத்துவத்தில் இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனியின் சாயல் உள்ளது" இவ்வாறு தெரிவித்தார் பாகிஸ் தான் அணியின் முன்னாள் தலைவர் மிஸ்பா உல் ஹக்.

"சர்பராஸ் எடுத்த அனைத்து முடிவுகளும் துல்லியமாக அமைந்தன. சர்பராஸ் அகமட் டோனி போன்றவர். உணர்வு அளவில் டோனி போன்றவர் அல்ல, சர்பராஸ் ஆக்ரோஷமானவர், ஆனால் டோனி போல் திட்டங்களை எளிமையாக வைத்துக் கொள்கிறார். திட்டங்களைச் செயற்படுத்துவதில் சிறப்பாக விளங்குகி றார், மற்ற வீரர்களுக்கு இவரது திட்டங்கள் எளிதில் புரிகிறது. இறுதியாட்டத்துக்கு பாகிஸ்தான் சென்றுள்ளது, என்னுடைய உணர்வுகளை விளக்க முடியவில்லை, மிகவும் பெருமையாக உள்ளது. சர்பராஸ் எடுத்த முடிவுகள், பந்து வீச்சு மாற்றங்களைச் செய்தது எல்லாமே ஆட்டத்தைத் தாண்டி யோசிப்பவராக எனக்கு சர்பராஸை காட்டுகிறது. இவர் தலைமையின் கீழ் பாகிஸ்தான் அருமையாக ஆடுவதை நினைத்தால் பெருமையாக உள்ளது" என மிஸ்பா மேலும் தெரிவித்தார். தனது முன்மாதிரி டோனியே என்று சர்பராஸே முன்பொருமுறை தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

கனடாவில் நிரந்தர குடியேறல்
வேலைவாய்ப்பு/கல்வி
கருத்தரங்கு
குறுகிய காலத்தில் கனடா செல்ல
ஒரு அரிய சந்தர்ப்பம்
குறைந்த கட்டணத்துடன்
சட்டபூர்வமாக குடும்பத்துடன்
கனடாவில் குடியேறலாம்
இன்று - 17-06-2017
சனிக்கிழமை
முற்பதிவு அவசியம்
V2 Travels
0768226236
49 A சப்பல் லேன்
யாழ்ப்பாணம்

வீடு வாடகைக்கு
ஆஸ்பத்திரி வீதியில் ஸ்ரேசன் சந்திக்கு அருகில் மூன்று அறைகளுடன்கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
076 423 1965

வேலையாள்கள் தேவை
எமது நிறுவனத்தில் கட்டட வேலை செய்வதற்கு பின்வரும் வேலையாள்கள் தேவைப்படுகிறார்கள்.
1) மேசன்
2) மின் ஒட்டுநர் (Welder)
3) மரவேலை செய்பவர்கள் (Carpenter)
4) உதவியாளர்
16.06.2017 வெள்ளிக்கிழமை காலை நேரடியாக சமுகம் தரவும்.
லக்ஷ்மி ரஜென்சி, 23/1, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021493 5555

VACANCY IN UK BASED COMPANY
Leading Whole sale company based in UNITED KINGDOM Looking for mentioned post for their back office in JAFFNA.
1. CUSTOMER CARE ASSISTANT
2. ACCOUNTS CLERK
Note - All the candidates should be proficiency in English & Basic Computer Knowledge. Accounting Knowledge is request Experience is additional qualification. Working hours is merged with UK Working hours. Send Your CV to ulx.job@gmail.com by mentioning the post that you are interested to apply on the subject of the Email T.P : 0212216656 we will inform the interview date through your E-Mail & Telephone. Suitable Retired person also can apply to this job. Selected candidate will be able to joint immediately.

IELTS life skill
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 20.06.2017
✓ திருமணம் முடித்து SPOUSE விசாவில் UK செல்வோருக்கான பாடநெறி.
✓ IELTS, IELTS A1, B1 கற்பித்தலில் வடமாகாணத்தில் புகழ் பூத்த எமது கல்வி நிறுவனம்.
✓ இதுவரை கற்ற அனைத்து மாணவர்களும் ஒரே தடவையில் 100%சித்தி.
✓ ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்.
✓ கடந்த 7 வருட காலமாக யாழ் மண்ணில் பிரபல IELTS விரிவுரையாளர் Mrs. R.ANUSHANTHY என்பவரால் விரிவுரை முன்னெடுக்கப்படும்.
✓ பரீட்சைக்கான பதிவுகள்
✓ தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் ஆரம்பம் 18.06.2017
✓ திருமணமாகி வெளிநாடு செல்வோர் தமது அதிக வருமானத்தை ஈட்டுவதற்கான கற்கை நெறிகள்.
✓ Diploma in beauty culture and hairdressing ✓ Diploma in cake icing.
Official FB Page-/London Metropoliton_ College_Jaffna Srilanka/
உங்கள் பதிவு மற்றும் மேலதிக தகவல்களுக்கு 077136 3389, 076 419 0327
Address : London metropolitan College
No.136, Palaly Road, Parameswara junction, Jaffna.
(தினேஸ் பேக்கரி கட்டடத் தொகுதி மேல்மாடி) Ph. Number : 021 753 8395

# தரப்படுத்தலில் கோக்லி முதலிடம்

நடைபெற்றுவரும் மினி உலகக்கிண்ணத் தொடரில் மூன்று அரைச்சதங்கள் விளாசியதன் மூலம் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான துடுப்பாட்டத் தரப்படுத்தலில் இந்திய அணித்தலைவர் கோக்லி முதலிடம் பிடித்தார்.

மினி உலகக்கிண்ணத் தொடர் தொடங்குவதற்குமுன் வில்லியர்ஸ் முதல் இடத்தில் இருந்தார். வோர்ணர் இரண்டாவது இடத்திலும், கோக்லி மூன்றாவது இடத்திலும் இருந்தனர்.

மினி உலகக்கிண்ணத் தொடரில் மூன்று அரைச் சதங்கள் அடித்ததன் மூலம் விராட் கோக்லி முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார். அவர் 862 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். வோர்ணர் 861 புள்ளிகளு டன் 2ஆவது இடத்திலும், வில்லியர்ஸ் 847 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஹசில்வுட் 732 புள்ளிகளுடன் முதன்முறையாக முதல் இடத்துக்கு முன் னேறியுள்ளார். இம்ரான் தாகிர் 2ஆவது இடத்திலும், மிச் செல் ஸ்ராக் 3ஆவது இடத்திலும், ரபாடா 4ஆவது இடத்திலும், சுனில் நரைன் 5ஆவது இடத் திலும் உள்ளனர். (ம)

# விரைவான 8,000 கோக்லி சாதனை




பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் ஒரு நாள் ஆட்டங்களில் விரைவாக 8ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டவர் என்ற சாதனை அடைவை நிலைநாட்டினார் இந்திய அணித்தலைவர் கோக்லி.

மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியாவை எதிர்த்து பங்களாதேஷ் மோதியது. இந்த ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. கோக்லி ஆட்டமிழக்காமல் 96 ஓட்டங்களை விளாசினார். இந்த ஓட்டங்களின் உதவியுடனேயே அவர் பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் 8 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டார்.

கோக்லி தனது 175ஆவது இன்னிங்ஸில் இந்த அடைவை நிலைநாட்டினார். தென்னாபிரிக்க அணியின் தலைவர் வில்லியர்ஸ் தனது 182ஆவது இன்னிங்ஸில் 8 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டமையே இது வரை சாதனையாக இருந்தது இதைக் கோக்லி முறியடித்தார். கங்குலி 200 ஆட்டங்களிலும், சச்சின் 210 ஆட்டங்களிலும், லாரா 211 ஆட்டங்களிலும், டோனி 214 ஆட்டங்களிலும் இந்த அடைவை எட்டியிருந்தனர்.

தென்னாபிரிக்க அணியின் வீரர் அம்லா 153 இன்னிங்ஸில் 7 ஆயிரத்து 186 ஓட்டங் களைக் குவித்துள்ளார். இவர் இன்னும் 22 இன்னிங்ஸில் 814 ஓட்டங்களைக் குவித்தால் கோக்லியின் சாதனையை முறியடிக்கலாம். இதற்கு அதிக வாய்ப்பு உள்ளது என்றே கருதப்படுகிறது. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில்.361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.